1 3-6

# வித்யாதனம்

ஜூன் - செப்டம்பர், 1937

72
[illegible]211, N37
N37:1.3-6
204386

# பொருளடக்கம்.

MADRAS


| | | பக்கம். |
|---|---|---|
| 1. | பத்திராதிபர் குறிப்பு | 1 |
| 2. | தாமாக்லிஸின் பட்டயம். | 2 |
| 3. | சுகாதாரம். | 4 |
| 4. | வர்த்தமானம். | 6 |
| 5. | 72ம் சங்கீதம் | 9 |
| 6. | "மலையின் மேலிருக்கிற பட்டணம்" | 10 |
| 7. | வேத வாசிப்பு | 15 |
| 8. | கதை நடித்தல். | 17 |
| 9. | பருவம் முதிர்ந்தோர் படிப்பு | 22 |


## பத்திரிகையின் சந்தா விபரம்.

| | | |
|---|---|---|
| பிரதி ஒன்றுக்கு | ... | அணா 1 |
| வருஷ சந்தா | ... | ரூ. 1—0—0 |
| வெளி நாடுகளுக்கு | ... | ரூ. 1—8—0 |


REV. T. A FENN,
Editor, Vidyadhanam,
12, Venkata Maistry Street,
George town,
MADRAS.

# வித்யாதனம்

# VIDYA DHANAM

## TAMIL TREASURE CHEST

தமிழ்நாடு ... நூலகம்
209389
சென்னை-600 008

தொகுதி 1. | ஜூன்மீ 1937ஹ | பகுதி 3.

## பத்திராதிபர் குறிப்பு

இப் பத்திரிகைக்குப் புத்துயிர் கொடுத்து வருகிற பெரியாருக்கு எம் வந்தனம் அளிக்கின்றோம். இதன் நோக்கம், இன்னதென யாவரும் சரியாய் விளங்கிக் கொள்வது அவசியம்.

வித்யாதனம் என்பது கல்விச் செல்வம் எனப் பொருட்படும். தமிழ் நாட்டு பாலியரின் தேவையைத் திருப்தி செய்வதே இதன் நோக்கம். கிறிஸ்தவப் போதனையை தனக், காதாரமாகக் கொண்டது இப் பத்திரிகை. ஆகையால் கிறிஸ்தவ முயற்சி சங்கக் கதைகளும் வேதக் கதைகளும் ஞானப் பாட்டுக் கீர்த்தனைகளும் இதில் காணலாம். சிறுவர்களுக்கும் பிரயோஜன மானவை எழுதப்படும். உலக வர்த்தமானம், சுகாதார விஷயம், கடிதம் முதலியவற்றிற்கும்' இங்கு இடமுண்டு. பெரும்பாலும் இதிலுள்ளவை ஆங்கிலப் பத்திரிகையிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டவை.

இதுவே ஒரு கிறிஸ்தவக் குடும்பத்திற் கேற்ற பத்திரிகை! இதுவே கல்விச் சாலைகளுக் கேற்ற கல்விச் செல்வம்!! இதுவே தனவந்தர் பிறர்க்களிக்கத்தகும் வித்யாதனம்!!!

இதை யாவரும் ஆதரிக்கு மாறு கேட்டுக் கொள்ளுகின்றோம். வித்யாதனத்திற்கு விஷய தானம் தேவை.

**T. A. FENN**

2L
ஒ.கே 211. N37
N37-1.3

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்



# தாமாக்லிஸின் பட்டயம்.

(ஸ்ரீமதி, ஜேக்கப்ஸன் என்போர் எழுதியது)

---

அநேக ஆண்டுகளுக்கு முன் ஓர் ஏழை மனிதன் இருந்தனன். அவன் நாடோறும் பாடுபட்டுழைத்தனன். எனினும் தன் வறுமையைக் குறித்தும் சிறுமையைக் குறித்தும் வருத்தமுற்றனன். சந்தோஷ நிலைமையில் தான் இருந்தபோதிலும் திருப்தியில்லை. சக்தியை யும் செல்வத்தையும் நாடித் தேடினன்.

ஓர் அரசனாயிருந்தேனாகில் எவ்வளவு நன்றாயிருக்கும்! மாட்சிமை தங்கிய டையோ னிசியஸ் மன்னர் செல்வமும், சக்தியும், உன்னத ஸ்தானமும் பொருந்தி விரும்பிய யாவும் பெற்றனுபவித்து ஆனந்திக்கையில் வாய்க்குக் கை யெட்டாமல் ஏழையில் ஏழையாய் யான் இருக்க வேண்டியது என்ன என்று எண்ணினன். இதைப்பற்றி எண்ண எண்ண இன்பங் குன்றி முயற்சி குன்றி வேலை செய்ய மனமின்றி வாடினன். தன் மனைவியினிடத்திலும் சிநேகிதரிடத்திலும் இதே பேச்சு.

டையோனிசியஸ் மன்னரின் செல்வம், சக்தி முதலியவற்றைப்பற்றி சந்தேகமே யில்லை. அநேக நாடுகளை ஆண்டு வந்தனன். அநேக ஜாதியாரை அடக்கி வந்தனன். அநேக யுத்தங்களில் வெற்றி பெற்றனன். வல்லமை பெருகப் பெருக நல்ல தன்மை சிறுக சிறுக என்றாயது. அவன் கொடுமையினாலும், அட்டகாசத்தாலும் அநேகருடைய அதிருப்தியையும் பகையையும் சம்பாதித்தனன்.

மன்னனுக்கு எந்நேரமும் பயம் பிடித்தது. ஒவ்வொரு நாளும் தன் கடைசி தின மென்று எண்ணினன். மரண பயம் அவனைச் சூழ்ந்து கொண்டது. முன்னிலும் அதிகமாய் மூர்க்கங்கொண்டனன். முன்னிலைமையிலும் பின்னிலைமை கேடாயிற்று. மெய்க்காவலாளர் தொகையை மும்மடங்காக்கினன்.

ஊர் உலகமறியா ஓர் ஏழையாய் உதித்திருந்தேனானால் எத்தனை நலமாயிருக்கும்! எப்பயமு மில்லாமல் என்னிஷ்டப்படி இருக்கலாமே. மெய்க்காவலாளர் என்னத்திற்கு? மித் திரர் உண்மையும் கவலையின்மையும் இருந்தால் போதாதா? ஐயோ! இந்நிலைமை, என் நிலைமை. என்ன பரிதாபம்! என்றிவ்வாறு இறைவன் எண்ணினன்.

அதோ ஆண்டி அரசனாகவும் அரசன் ஆண்டியாகவும் ஆசைப்படுகின்றனர்.

இச்செய்தி எவ்வாறோ பிரதம மந்திரியின் செவிக்கெட்டியது. அவன் அதை அரசனுக்கு அறிவித்தனன். அரசன் அதைப்பற்றி ஆலோசனை பண்ணி சில நாட்கள் சென்ற பின் அவ்வேழை மனிதனை அழைத்தனுப்பினன். தாமாக்லிஸ் பயந்து கொண்டு வந்தனன். நமது நினைவு அரசனுக்குத் தெரிந்துவிட்டதோ என்று சந்தேகித்து நடுங்கினன். அரசன் அவனை ஆவலோடு உற்று நோக்கி, "தாமாக்லிஸே! என்னைப் போன்ற சக்தி வாய்ந்தவனா யிருக்கவேண்டுமென்பது உன் விருப்பம் எனக் கேள்விப்பட்டேன். எனது செல்வமும் ராஜ்ய மும் உனதாக வேண்டுமென்பது உன் அவா என அறிவேன்" என்றார்.



"இல்லை ஐயா, அவ்வளவு உன்னத ஆசை எனக்குக் கிடையாது" என ஏழை மனிதன் சொன்னான்.

"எனினும் என் ஸ்தானம் வகிக்கவேண்டும் என்பது உன் ஆசையல்லவா?" என அரசன் கோபங்காட்டாமல் கேட்டனன். தாமாக்லிஸுக்கு தைரியம் வந்தது.

"அரசே உமது சக்தியும், செல்வாக்கும், செல்வமும், சிலாக்கியமும் ஒரே ஒரு நாளுக்கு எனக்கு அளிக்கப்படுமாயின், நான் திருப்திகரத்தோடு மரிப்பேன்; அல்லது அந் நாள் முதல் சந்தோஷமாயிருப்பேன்" என்று ஏழை மனிதன் சொன்னான். அரசனுக்கு ஆச்சரியமா யிருந்தது.

"அதற்கு ஒழுங்கு செய்யலாம். ஒரு நாள் உத்தியோகம் உனக்குத் திருப்தியா யிருந்தால் எக்காலமும் இது உனக்கே உரியதாகும்!" என்று அரசன் சொன்னான்.

"என்னமோ பித்தம் மேலிட்டிவையெல்லாம் பிதற்றுகின்றானோ" என எண்ணினான் தாமாக்லிஸ்.

பின்னும் ஏன் மறுக்கவேண்டும். வலிய வந்த சீதேவியை ஏன் வெறுக்கவேண்டும் என்றெண்ணி ஏற்றுக்கொண்டனன்.

மறுநாள் தாமாக்லிஸ் அரசபுரியுமாறு ஒழுங்கு செய்தனன். புது மன்னன் புலரி தோன்றும் முன்னமே எழுந்து தனது அரச அதிகாரத்தைச் செலுத்த விரும்பினன். பணி யாட்கள் பணிபுரிவதும், இட்ட கட்டளைகள் கேட்டுச் செய்வதும், உசித உணவுப் பொருட்கள் புசிக்க சமைத்து வைப்பதும் இவனுக்கு வெகு ஆச்சரியத்தை அளித்தது. ஆயுள் நாளெல்லாம் அவன் ஆசித்தது அதுவே! இக்கோலம் எக்காலமும் எனக்குரியதாகும் என்று டையோனி சியஸ் சொன்னது உண்மைதானோ? என யோசிக்கலாயினன்.

திடீரென மதிய வேளையில் தாமாக்லிஸ் சிங்காசனத்திற்குமேல் ஏறிட்டுப் பார்த்துப் பயந்தான். பயங்கரம்! என்ன பார்த்தான்? பட்டயம்! தலை முடி யொன்றில் கட்டித்தொங்க விட்டிருந்த பட்டயம் ஒன்று தன் தலைக்குமேலிருக்கக் கண்டனன். கண்டு வெருண்டனன்.

"அகற்றுமின், அதை அகற்றுமின்" எனக் கட்டளை யிட்டனன். உடனே அது அகற்றப்பட்டது கண்டு அகமகிழ்ந்தனன். அது அகன்ற அக்ஷணமே அதே இடத்தில் அதே மாதிரி முடியில் கட்டி விட்டிருந்த பட்டயம் ஒன்று தோன்றிற்று. சிங்காசனத்தின் இடத்தை மாற்றியும் அங்கும் அப்பட்டயம் தோன்றிற்று. இரண்டு மணி நேரமாக அவன் பிரயாசப்பட்டும் அதை மறைக்கவோ மறக்கவோ கூடாமற்போயிற்று. அதன் பின் பிரதம மந்திரியை அழைத்து அதைப்பற்றி விசாரித்தனன். அதற்கு அவன் சொன்னதாவது:

"வாஸ்தவம். திரண்ட செல்வமுண்டு, பெரிய சக்தியுண்டு, அகன்ற ராஜ்ஜியமு முண்டு. அதோடு அதிக மோசமுமுண்டு. டையோனிசியஸ் தனக்கு ஆபத்து எப்போது வருமென அறியார். தன் மரண வேளை எது என்றும் தனக்குத் தெரியாது. செல்வப்பெருக்கு எவ்வளவு இருந்தபோதிலும் இவருக்கு இன்பப் பெருக்குண்டோ?

எனினும் இன்பம் அனுபவிக்கலாமென தாமாக்லிஸ் எண்ணினன். ஆனால் ஜீவன் நிலையற்றது என்ற எண்ணமும் மரண பயமும் மேலிட்டு தான் நீழ்ப்பாய் எண்ணிய பழைய நிலைமையை வாஞ்சிக்கச் செய்தது. ஏறிட்டுப் பார்த்தால் முடி யறுந்து பட்டயம் விழுவது போலிருந்தது. இனி எஞ்ஞான்றும் இறைவனாக இரேன்" என்று பதறினன். "யான் எஞ்ஞான்றும் ஏழையாகவே இருப்பேன்" என்று கதறினன். "யானே தாமாக்லிஸ், அவ்வாறே இருப்பேன். டையோனிசியஸை அழைத்தனுப்புங்கள்" என்று கெஞ்சினன். அரச ஆடைகளை அகற்றினன். டையோனிசியஸ் வந்து அவனை ஆச்சரியத்துடன் கண்ணுற்றனன்.

"தாமாக்லிஸே! இன்னும் என்மேல் பொறாமை கொள்வாயோ?" என்று வினவ, தாமாக்லிஸ் பிரதி யுத்தரமாக "தங்கள் பேரிலல்ல என் பேரிலேயே பொறாமை யுண்டாயிற்று. முன்னிலைமையிலும் பின்னிலைமை கேடுள்ளதாயிற்று. முன்னிலைமையே என் நிலைமையாகட்டும் எந்நிலைமையிலும் முன்னிலைமையே சிறந்தது. உம் நிலைமையிலும் என் நிலைமை சிறந்தது." என்றனன்.

---

# சுகாதாரம்.

## காசநோய்.

Dr. H. H. Linn.

காச நோய் ஒரு தொத்து வியாதி.

அது ஒரு கிருமியினால் உண்டாகின்றது. சாதாரணமாய் அது சுவாசாயத்தைத் தாக்குகின்றது. எலும்பையாவது தோலையாவது தாக்கினாலுந் தாக்கலாம்.

அது உடலோடே ஒட்டின வியாதியாயு மிருக்கலாம். உயிர் வாங்கும் கொடிய நோயாயு மிருக்கலாம். கொடிய நோயானால் நாள்தோறும் தேக அனல் சற்று அதிகமாய்த் தோன்றும். நாளடைவில் பலம் குன்றிப்போகும். இருமலிருக்கும். சளி மஞ்சள் நிறமா யிருக்கும். சுவாசாசயத்தில் மூச்செடுக்கும்போது நோயுற்ற பாகத்தில் வலி யிருக்கும்.

இந்நோய் வாரமல் தடுக்கும் முறைகளாவன :—

(1) உறங்கும்போது இரவில் சுத்த ஆகாயத்தை உட்கொள்ளவேண்டும்.

(2) போதிய அளவு நல்லுணவு அருந்தவேண்டும்.

(3) நாள்தோறும் தேகாப்பியாசஞ் செய்யவேண்டும்.

(4) இந்நோயுள்ளோரிடம் நெருங்கி இருத்தலாகாது.

நோயுற்றோர் கூடுமானால் காசநோய் வைத்தியசாலைக்குப் போகவேண்டும். அங்கு சிறந்த சிகிட்சை செய்யப்படும். வியாதியை விலக்கும் வழி வகைகளுமுள. வைத்திய சகாயத்திற்கு வழி யில்லாவிட்டால் சுத்த ஆகாயத்திற்கு வழி தேடவேண்டும். சுத்த ஆகாயமே மெத்த அவசியமான ஔஷதம்.



நோயாளி வெளியி லுறங்கவேண்டும். அல்லது ஜன்னல் கதவுகளைத் திறந்து வைத்திருக்கும் அறைகளிலே உறங்கலாம். பால், முட்டை, எண்ணெய், பச்சைக் காய் கனி முதலியவற்றை ஏராளமாய் உபயோகிக்கவேண்டும். நாள் ஒன்றுக்கு இரண்டு அல்லது மூன்று தடவை அதிகமான ஆகாரம் அருந்துவதைவிட ஒரே நாளில் ஐந்து அல்லது ஆறு தடவைகளில் கொஞ்சங் கொஞ்சமாய் சாப்பிடுவது நல்லது.

கொஞ்சங் கொஞ்சமாய் கொய்யா சாப்பிட்டு வருவது வியாதியைத் தடுக்க ஒரு நல்ல உபாயமே!

---

## நியுமோனியா காய்ச்சல்.

நியுமோ கோஸை என்னும் கிருமியினால் சுவாசாசயங்கெட்டு இவ்வியாதி ஏற்படுகின்றது. வேதனையோடு வேகமாய் சுவாசிப்பதும், இருமல் வருவதும், செந்நிறச் சளி யிருப்பதும் இவ்வியாதியின் அறிகுறிகள்.

தலை கனம், தொண்டை வலி முதலிய அற்ப ஆரம்பத்திலிருந்து திடீரென அதிக குளிரோடும் வாந்தியோடும் அடிக்கடி இவ்வியாதி ஆரம்பிக்கும். அதிகக் காய்ச்சலுண்டாகி கடைசிவரை இறங்காமலே அடிக்கும். திடீரென ஐந்தாவது அல்லது ஏழாவது நாள் இறங்கலாம்.

சுவாசாசயத்தில் கெட்டுப்போன பாகம் அடைபட்டவுடனே சுவாசிக்கக் கஷ்டம் ஏற்படுகின்றது. இரண்டாவது அல்லது மூன்றாவது நாள் சளி செங்கலங்கலாகவும் பிசின் போலவும் நுரைத்துக்கொண்டும் இருக்கும். கஷ்டத்துடன் வெளிவரும். கேடான பாகத்தில் வேதனை அதிகமாயிருக்கும். அந்தப் பக்கமாய் சாய்ந்து படுத்தால் வேதனைக்குக் கொஞ்சம் சுகமுண்டாகும்.

இதைத் தடுக்கும் முறைகளாவன :—

(1) சுத்த ஆகாயமுள்ள வெளியான இடத்தில் படுக்கவேண்டும்.

(2) நாடோறும் குளிர்ந்த ஜலத்தில் குளிக்கவேண்டும்.

(3) வேலை செய்து களைப்பாயிருக்கும்போது காற்றோட்டம் இல்லாத அறைகளில் இருக்கக்கூடாது.

(4) நேர ஒழுங்குப்படி போதுமான நல்ல ஆகாரம் அருந்தவேண்டும்.

பெருங் காற்றும் மழையும் வாராதபடி தடுக்கப்பெற்ற தாவாரம் நல்லது. ஏராளமான சுத்த ஆகாயமும் நல்ல அனல் கொடுக்கக்கூடிய படுக்கையுந் தேவை. சுவாசிக்கும் இடம் சுருக்கமானபடியால் ஏராளமான சுத்த ஆகாயம் அவசியம். போர்வையும் அனல் கொடுக்கக் கூடியதாயிருக்கவேண்டும்.

பசி யிருக்காது. எனினும் ஆகாரம் அவசியம். ஒரு தேயிலைக் கரண்டி அளவு மேசை உப்பு சாப்பிடக் கொடுத்து எவ்வளவு தண்ணீர் குடிக்கக் கூடுமோ அவ்வளவு தண்ணீரும் குடிக்க இடங் கொடுத்தால் இரத்தத்திற்கு நல்லது. காய்ச்சின பாலும், கறியும் சோறும்

ரூப்பும் கொடுக்கலாம். நாடோறும் அடிக்கடி எலுமிச்சஞ் சாறு அல்லது ஆரஞ்சுச் சாறு தண்ணீரில் கலந்து கொடுக்கலாம். இரண்டு அல்லது மூன்று மணி நேரத்திற்கு ஒரு தடவை கொஞ்சங் கொஞ்சமாய் ஆகாரம் கொடுப்பது நல்லது.

வியாதி ஆரம்பிக்கும்போதே 'கலோமெல்' என்னும் மருந்து கொடுத்து பேதியாக வேண்டும். வயிற்றிலுள்ள அசுத்தங்கள் யாவும் வெளி யேற்றப்படவேண்டும். பழச் சாறும் தண்ணீருமே அன்று ஆகாரம். நாடோறும் இருமுறை அல்லது ஒரு முறை வெந்நீர் வைத்துப் பஞ்சு துவைத்துப் பிழிந்து தேக சுத்தி செய்தால் சர்மத்தின் வழியாய் வியர்வை வெளியேறும். வியாதியின் அனல் தணியும். காய்ச்சலும் இறங்கும்.

கெட்டுப்போன சுவாசாசயத்தில் வேதனை அதிகமாயிருந்தால் "டோவர்ஸ்" பொடி கொடுக்கலாம். பஞ்சு வைத்து இறுக்கிக் கட்டலாம். 10 அல்லது 15 கிரெய்ன் சின்கோனு பெப்ரிபுயுஜ் (Cinchona Febrifuge) 4 மணி நேரத்திற்கு ஒரு தடவையாக ஆறு அல்லது எட்டுத் தடவை அல்லது காய்ச்சல் 102·5 டிக்ரிக்கு வரும்வரை கொடுக்கலாம். ஒரு கிரெய்ன் ஐயோடின் லைம் மாத்திரைகள் (Iodine and Lime Tablets) ஒரு மணி நேரத்திற்கொரு தடவை ஆறு தடவை ஆரம்பத்தில் கொடுக்கலாம். பிற்பாடு மூன்று அல்லது நான்கு மணி நேரத்திற்கு ஒரு மாத்திரையாகக் கொடுக்கலாம். வெந்நீரில் கொடுப்பது உசிதம்.

இயூக்காலிப்டஸ் தைலம் நெஞ்சில் தடவுவது வேதனையை நீக்கும். பூரண சுகமடையும் வரைக்கும் வியாதிக்காரரைப் படுக்கையில் வைப்பது அவசியம். இல்லாவிட்டால் காய்ச்சல் திருப்பிக் கொள்ளும்.

---

## வர்த்தமானம்.

---

### உலகிற் பெரிய மண்டையோடு.

அலாஸ்காவுக்கப்பாலுள்ள அலூஷியன் தீவுகளில் ஓர் இடத்தைத் தோண்டும்போது ஒரு பெரிய மண்டை ஓட்டைக் கண்டு பிடித்ததாக சாஸ்திரிகள் கூறுகின்றனர். வியாதியினால் பெரிதானதல்லவென்றும் அதிக புத்திசாலியான மனிதனுடைய மண்டையோடாயிருக்க வேண்டும் என்றும் நிதானிக்கின்றனர். 2005 க. ச. சென்றி மீற்றர் மூளை கொள்ளக் கூடியது. இதற்கும் பெரிய மண்டையோடு ருஷியா தேசத்து டர்ஜீனியப் என்பவருடையது. அதன் அளவு 2030 க. ச. சென்றி மீற்றர். அமெரிக்கா தேசத்து தானியேல் வெப்ஸ்டருடைய மண்டையோடு 2000 க. ச. சென்றி மீற்றர் மூளை கொள்ளக்கூடியதாம். சாதாரண மனுஷனுடைய மண்டையோடு 1450 க. ச. சென்றி மீற்றர் பரிமாணம் உடையது. பெண்களுக்கு 1300 அல்லது 1250 க. ச. சென்றி மீற்றர்தானிருக்குமாம்.

---

### பிரான்ஸ் தேசத்துப் பறை சாற்றுவோர்,

பறை யடித்துப் பறை சாற்றும் வழக்கம் இந்தியாவில் இருப்பதுபோல் ஐரோப்பாவிலும் இருந்து வந்தது. தற்காலத்தில் அவ்வழக்கம் பிரான்ஸ் தேசத்தில் மாத்திரமிருந்து வருகின்றது. அங்கு 20000 பறை சாற்றுவோர் இருக்கின்றனர். அச்சு அடிக்குங் காலத்திற்கு முன் தினசரி செய்தி கூறி அறிவிக்க ஆட்கள் அவசியமாயிருந்தது. பிரான்ஸ் தேசத்தில் பறை சாற்றுவோர் பணஞ் சம்பாதிக்கும் முறையாக இதை உபயோகிக்கிறதில்லை. அவர்கள் கிராம உத்தியோகஸ்தராக வெவ்வேறு வேலையிலுள்ளவர்கள்.



வேலை சுருக்கத்திற்காகவும், தற்கால நாகரீகத்திற்குப் பொருத்தமாக இருப்பதற்காகவும் தொனி பரப்பும் கருவிகள் மூலமாய் பறை சாற்றலாமென்று ஒரு புது முறையை எடுத்துக்காட்டி யிருக்கின்றனர்.

---

### சீனர் சீர்திருத்தம்-

சீனு தேசத்தில் கன்டோன் பட்டணத்து மாதர் சங்கம் பெண்கள் முடி வளைத்துத் தலை சீவும் வழக்கத்தை ஒழிக்கவேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொண்டிருக்கின்றது. மாதர் அடக்கப் படை முயற்சி வேலையில் சர்க்கார் முன்னிற்பதால் இச்சங்கமும் சர்க்காருடன் ஒத்துழைக்க ஆசிக்கின்றது.

கன்டோன் பட்டணத்தில் மாத்திரம் 2000 பெண்கள் முடி வெட்டுகிற தொழில் செய்கின்றனர். ஏராளமான ஆண்கள் அவர்களிடம் தங்கள் முடி வெட்டிக்கொள்ளப் போகிறபடியால் முடி வெட்டுகிற தொழில் செய்யும் ஆண்களுக்குச் சம்பாத்தியத்திற்கு வழியில்லை.

சீன ஸ்திரீ உடுத்த வேண்டிய உடையும் அதன் அளவும் இன்னதென சர்க்கார் ஏற்படுத்தி யிருக்கின்றனர். சட்டைக் கை முட்டளவுக் கிருக்க வேண்டுமாம். உடையின் நீளமும் வரை யறுக்கப்பட் டிருக்கின்றதாம். மீறி உடுத்துவோரை போலீஸ் உத்தியோகஸ்தர் கைதி செய்கின்றனர். "மாதர் அடக்க உடைச் சட்ட விரோதம்" என்று உடைகளில் முத்திரை குத்தி யனுப்புகின்றனர் சர்க்கார் போலீஸ்காரர். இது ஸ்திரீகளை எவ்வளவோ சங்கடத்துக்குள்ளாக்கிற்று. ஓர் உத்தியோகஸ்தர் மனைவியி னுடையில் முத்திரை குத்தினபோது அவள் மிகவும் கோபமடைந்து இம் முத்திரையிடும் வழக்கத்தை ஒழித்ததற்குக் காரணமாயிருந்தனள்.

---

### பெண் பிள்ளைகளை அடிமை கொள்ளும் துர் வழக்கம்,

சீனு தேசத்தில் வீட்டுவேலைக்குப் பெண் பிள்ளைகளை அடிமை கொள்ளும் "மியுற்ஸாய்" என்னும் துர் வழக்கம் எங்கும் பரவுகின்றது. 1923ஞு ஹாங்காங்கிலும் 1927ஞு மலேயாவிலும் இவ்வழக்கம் இருக்கக் கூடாதென்று நிறுத்தியிருந்தனர். மறுபடியும் இவ்வழக்கம் எங்கும் உட் பிரவேசித்து விட்டது.

இதற்கென்று ஏற்பட்ட கமிற்றி சொல்வது யாதெனில் :—

1. எல்லா "மியுற்ஸாய்" என்னும் அடிமைப் பெண்களின் பெயரும் பதிவு செய்யப் படவேண்டும்.

2. உத்தியோகஸ்தர் அப் பெண்களை அடிக்கடி சந்தித்து அவர்கள் சரியாய் நடத்தப் படுகின்றார்களா வென்றும் அவர்களுக்குக் கொஞ்சமேனும் சுயாதீனம் கொடுக்கப் படுகின்றதா வென்றும் விசாரிக்க வேண்டும்.

3. இப்படிப்பட்ட பெண்களுக்குத் தங்கள் எஜமான்களோடு இருக்கப் பிரியமில்லாவிட்டாலும் அல்லது அவர்களால் கொடுமையாய் நடத்தப்பட்டாலும், அப் பெண்களுக்கு விடுதலை அளிக்க வேண்டும்.

அக்கமிற்றியிலிருந்த ஒரே ஒரு மாது இந்த சிபார்சுகளை ஒப்புக்கொள்ளாமல் "மியுற்ஸாய்" என்னும் துர் வழக்கத்தைப் பூரணமாய் வேரோடு அகற்ற வேண்டு மென்றும் இதுவரை 12 வயதுக்கு முன்னிருந்து பெற்றோரை விட்டுப் பிரித்து எடுத்து வளர்த்தோ அல்லது அடிமை யாக்கியோ வைத்திருக்கும் பெண்களனைவரையும் சர்க்கார் சவரக்ஷணைக்குள் கொண்டு வரவேண்டுமென்றும் சிபார்சு செய்திருக்கின்றாள்.

---

## ஆகாயக் கப்பலா? சகாயக் கப்பலா?

சகாய மற்றோர் மேல் விஷப்புகையை விட, வெடிகுண்டுகளைப் போட ஆகாயக் கப்பலை உபயோகப் படுத்தினவர்களுண்டு. ஆனால் அமெரிக்கா செஞ்சிலுவைச் சங்கம் துன்புற்றோருக் காதரவளிக்க ஆகாயக் கப்பலை உபயோகிக்கின்றது.

கடந்த காலத்தில் நடந்த வெள்ள மோசத்தில் ஆகாரமற்றோருக் காகாரம் அனுப்பவும் வியாதியுற்றோருக் கௌஷதம் அனுப்பவும் ஆகாயக் கப்பலை உபயோகித்தனர்.

இரக்க ஆகாயக் கப்பல்களிலிருந்து விறகு, உணவு, உடை முதலிய தேவையான யாவும் இறக்கப்பட்டன. பால் புட்டிகளும், படகுகளும், புகைக் கூண்டுக் குடைகளின் மூலமாய் இறக்கப்பட்டன. அக்ஷர இரகசியமும் அனுப்பப் பட்டன. அதாவது மூன்று கெஜ நீளம் 1கெஜ அகலம் உள்ள துண்டு துணிகளை உபயோகித்து தரையில் எழுத்து அமைத்தால் ஆகாயக் கப்பலிலிருந்து வாசித்து அறிந்து கொள்ளலாம். உறை பனி மூடியிருந்தால் கறுப்பு நிறத் துணிகளை உபயோகிக்க வேண்டுமாம்.

"F" என்னும் எழுத்துக்கு "காயப்பட்டோன்" என்று அர்த்தம்.

"H" என்னும் எழுத்துக்கு "வீடற்றோன்". என்பது பொருள்

Y N— "வைத்தியர் தேவை"

X F Y N— "10 காயப்பட்டோர் வைத்தியர் தேவை"

இரகசிய பாஷை உபயோகித்துச் சகாயம் புரிய ஆகாயக் கப்பல்களை உபயோகிக்கின்றனர்.

---



## 72ம் சங்கீதம்

7s. 6s. 8 Lines.

1. வாழ்க, வானபிஷேகன்
 தாவீதின் மைந்தனார்!
 வாழ்க, பூலோகின் நாதன்
 கருணை வேந்தனார்!
 நீதியோ டரசாண்டு
 கொடூரம் நீக்குவார்
 சிறையுற்றோரை மீட்டு
 பொல்லாப்பைப் போக்குவார்

2. இப்பூவின் மாந்தர் மீது
 தம் அருள் பொழிவார்
 அன்பு சந்தோஷம் எது?
 இவரே புஷ்பிப்பார்
 தம் சமாதான தூதன்
 முன்னேகச் செய்குவார்
 நீதியாம் நீரூற்றெங்கும்
 பாய்ந் தோடப் பண்ணுவார்

3. துன்புற்றோர் இன்புற்றோங்க
 இவ ருதவுவார்
 ஏழை யனாதை தாங்க
 சகாயம் புரிவார்
 சாவின் மாய்கைக் குள்ளானோர்
 சங்கீதம் பாடுவார்
 இருளின் மருள் கொண்டோர்
 பொருள் உணருவார்

4. எச் சத்ருவும் ஜெயித்து
 செங்கோல் செலுத்துவார்
 என்றும் ஆசீர்வதித்து
 மாட்சிமை அடைவார்
 யுகங்கள் ஓடினாலும்
 தம் வாக்கு மீறிடார்
 அன் பென்னும் தம் நல் நாமம்
 மாண்புறச் செய்குவார்.

5. அரேபியாவி லுள்ளோர்
சாஷ்டாங்கம் செய்குவார்
எத்தியோப்பியா நாட்டார்
மகிமை காணுவார்
தீவாந்திரத்தோர் யாரும்
அவர் முன் கூடுவார்
இவர்களோ டெல்லாரும்
காணிக்கை படைப்பார்.

6. பொன் தூபவர்க்கத்தோடு
ராஜாக்கள் பணிவார்
ஜாதிகள் துதியோடு
அவரைச் சேவிப்பார்
பூமியில் முடி சூடி
ஆளுகை செய்குவார்
தேசத்தார் யாருங் கூடி
பாடிப் புகழுவார்.

7. விண் வேந்தனி னிமித்தம்
ஓயாது தோத்ரிப்பார்
இடைவிடாத ஜெபம்
என்றென்றும் ஏத்துவார்
அவர் தம் ராஜரீகம்
நிலைக்கப் பண்ணுவார்
லீபனோன் போ லசையும்
விளைவை யருள்வார்.

T. A. Fel...

---

## "மலையின் மேலிருக்கிற பட்டணம்"

கமலாபாய்

ஓரூர் கிராமத்தில் ஒரு வீட்டிற் கெதிரில் மரியாதையுள்ள சுத்த உடை யணிந்த ஒரு மனிதன் காத்துக்கொண்டிருந்தனன். கடைசியாக வயலுக்கு எஜமான் கனகப்பன் கதவண்டை வந்து உரத்த சத்தமாய்:—

ஓ பறையா! என்னடா வேண்டும்?" என்று கூவினன். அதற்கு ராஜா என்னும் வாலிபன் மரியாதையுடன் நமஸ்கரித்துச் சொன்னதாவது:

"இன்று வயலிலே என்னவேலை செய்வதென்று கேட்டுக் கொண்டு போக வந்தேன்"



வயலுக்கு எஜமான் வேலை விபரம் கூறும் போதே தங்கள் நிலைமைக்கு மிச்சமாக தங்களை எண்ணிக்கொள்ளுகிறவர்களைப் பற்றியும், அசுத்தமான, சோம்பலான, வஞ்சகரும் திருடருமான பறையரைப்பற்றியும் பேசிக்கொண்டேயிருந்ததை ராஜா என்னும் அம்மனிதன் மௌனமாகவும் மரியாதையாகவும் கேட்டுக்கொண்டே நின்றனன்.

"அவர் என்னை விட அறிவிலும் சுத்தத்திலும் அதிகக் குறைவானவ ரென்பது அவருக்குத் தெரியும். ஆகையால் அவர் அப்படி அவதூறுய்ப் பேசி சத்தம் போடுகிறதினாலாகிலும் பிறர் பார்வையில் தான் பெரியவரெனக் காட்டப் பிரயாசப் படுகின்றார் போலும். ஐயோ, பாவம்!" என ராஜா எண்ணினன்.

ராஜாவின் தந்தையார் பறையர் குலத்தினின்று அநேக ஆண்டுகளுக்கு முன்னர் குணப்பட்டவர். கிறிஸ்தவர்க ளல்லாத மற்ற இனத்தவரை தம் போதனையினாலும் சோதனையினாலும் உயர்வுறச் செய்யும் நோக்கமாக பறையரோடு பறையராகவே குடியிருந்தனர்.

பறையரான சகோதரரை உயர்த்தும் ஊழியத்துக்கென்று தன்னை தத்தஞ் செய்தவன் ராஜா. பத்தாம் வகுப்புப் படித்து முடித்தவுடன் விவசாயக்கலாசாலைக்குச் சென்று கிராம சீர்திருத்த விஷயங்களைக்கற்று தன் ஜனங்களுக்குள் உழைக்கும் நோக்கமாக வயலில் பழைய படி கூலி வேலைக்கே அமர்ந்து நேரங் கிடைக்கும் போதெல்லாம் ஜனங்களுக்குப் போதித்துக் கொண்டு வந்தான்.

கனகப்பன் கட்டளையை நிறைவேற்றும்படி வீட்டிற்குச் சென்று ராஜா மற்றக் கூலிகளிடத்தில் பேசினன்.

"தம்பி என்ன நடந்தது? ஏன் இவ்வளவு துக்கம்? எஜமான் கோபித்தாரா? திட்டினாரா?" என மற்றவர்கள் கேட்டனர்.

"நான் கிராமத்தை விட்டு பட்டணத்துக்குப் போய் மரியாதையான வேலையிலமர்ந்து பிழைக்கத் தீர்மானித்து விட்டேன். நான் பிறந்த ஜாதியை மறந்து ஒழிக்கவேண்டும்" என்று ராஜா பதி லுரைத்தனன்.

"என்ன மகனே! எங்களைத் தெருவில் விடவா போகிறாய்? உன்னைக் கலாசாலைக் கனுப்பிவிட்டோமே! நாங்கள் கண்ணை மூடும் வரை உன்னைக் கண்டு களிக்கலா மென்றிருக்கிறோம்." எனக்கூறித் தாயார் அழ ஆரம்பித்தாள்.

"பிரயோஜனமேயில்லை. என் ஜனத்திற் குதவவே இங்கு வந்தேன். நான் தனியே போராட வேண்டியதிருக்கின்றது. என்னோடு சேர்ந் துழைக்க மாட்டீர்கள். உங்கள் ஜீவிய காலமெல்லாம் நீங்கள் இருக்கும் அதே உளையிலே நானுங் கிடக்க வேண்டிய திருக்கின்றது." என்று சுற்றிலும் உள்ளவர்களைப் பார்த்துக் கூறினன் ராஜா.

"குடியானவர்களை எதிர்க்காமல் என்ன வேண்டுமானாலும் செய்வோம். காலாகாலமாய் அநேக வீரர்கள் எழும்பிப் பிரயாசப்பட்டதில் நம் ஜாதியே கஷ்டத்துக்குள்ளானது. ஆகையால் அவர்களுக் கடங்கி அன்றன்றுள்ள ஆகாரத்தை ஆறுதலுடன் அருந்துவதே நன்று" என்றனர்.

12

"பின் என் செய்வோம்? வயல் வேலைக்கு வாருங்கள். பாடுற் றுழைப்போம். இல்லாவிடில் எஜமான் நமக்குச் சேரவேண்டிய தானியந் தரமாட்டார்." என்று சொல்லி, ஒருவரோடும் பேசாமல், நாளெல்லாம் ராஜா நன்றாய் உழைத்தான்.

ராஜா அன்றிரவு வேலை விட்டோய்ந்ததும், நேராய் அனந்தப்பா வெனும் கிராம ஆசிரியரிடஞ் சென்றனன். அங்கு அநந்தப்பூர் ஜீவப்பாவும் சுஞானப்பாவுமிருந்து இவனை வரவேற்றனர்.

"கலாசாலை விட்டு வந்த நாள் முதல் இக்கிராமம் உயர்வுற ஏதாகிலும் செய்ய வேண்டுமென்று எண்ணியும் எப்பக்கமும் எதிர்க்கும் தடைகளேயன்றி வேறொன்றுங் காணோம். ஜனங்களின் நிர் விசாரமோ பெரிய சுவர்போல் நிற்கின்றது" என்று சுஞானப்பா சொன்னான்.

"உனது கஷ்டம் போன்றதே எனது கஷ்டம்" என்று ராஜா புன்னகை கொண்டனன்.

"கிராம சீர்திருத்த ஸ்தாபனம் ஒன்று ஏற்படுத்த கிராம உயர்வுச் சங்கத்தைக் கேட்டேன். அவர்கள் வந்து கிராமத்தை ஆராய்ச்சி செய்ததில் ஒற்றுமை இல்லாதபடியால் ஒன்றுஞ்செய்ய முடியாது. முன்னேற்றத்திற்கு வழியே இல்லை என்றுரைத்துப் போயினர்" என்று அனந்தப்பா சொன்னான்.

"ஐயோ! என் பயிற்சி முற்றும் அந்த விதமே. ஆகையால் உதவிசெய்ய முடியுமென்று நம்பி இங்குவந்தேன்" என்றான் ராஜா.

"இப்போது நம்பிக்கையற்றுப் போயிற்றோ?" என்று ஜீவப்பா கேட்டனன்.

"அதற்கென்ன தடை. இனி என்னால் ஒன்றும் செய்யமுடியாது. போய்விடப் போகிறேன் என்று உபாத்தியாயரிடம் உரைக்கவே வந்தேன்" என்று ராஜா சொன்னான்.

நடந்த காரியம் என்ன ராஜா?" என்று அனந்தப்பா ஆவலாய்க் கேட்டான். அதற்கு அவன் :—

"நான் ஒரு நன்மையும் செய்ய முடியவில்லை. ஒருவரும் ஒத்திணங்கி வருகின்றார்களில்லை. என் மனம் கடினப்படுகின்றது. இன்று காலை கனகப்பன் வழக்கம் போல் திட்டினார். நான் கோபப்படவில்லை. சாக்குப் போக்குச் சொல்லத் துவங்கினேன். இன்னும் ஓர் ஆண்டு கழியுமுன் நானும் என் ஜனத்தாரைப்போல சுயமரியாதையை இழக்கவேண்டும். சுயமரியாதையும் நம்பிக்கையும் இருக்கும்போதே நான் கிளம்பி விடுவது நல்லது" என்றான்.

"இதற்கெல்லாம் காரணம் ஜாதிவேற்றுமையே. ஒரு பெருங்காரியஞ் செய்ய ஜனங்களை ஒற்றுமைப் படுத்தக் கூடுமானால் இவ்வேற்றுமை அகலும். கிராம சீர்திருத்த முயற்சி சர்வ ஜாதியாரையும் ஒற்றுமைப்படுத்தும் சக்திவாய்ந்தது அல்லவா? நாம் ஒத்துழைக்கக்கூடும் என்றறிந்தால் அச்சங்கத்தார் இங்கு ஒரு கிராம சீர்திருத்த ஸ்தலம் ஏற்படுத்துவார்களா?" என்று ஜீவப்பா கேட்க, சுஞானப்பா "ஏற்படுத்து வார்களென்பதற் கையமில்லை" என்றான்.

13

"கிறிஸ்தவ வாலிபர் உனக்கு உதவிசெய்தால் நீ இங்கு இருப்பாயா, ராஜா?" என்று ஜீவப்பா கேட்டான்.

"நன்மை செய்ய ஏதுவுண்டானால் சந்தோஷமாய் இருப்பேன்" என்று ராஜா சொன்னான்.

"அப்படியானால் கிறிஸ்தவ முயற்சி சங்கத்தாரை அழைத்துக் கூட்டங்கூடி, நாம் செய்யக்கூடியதை ஆலோசித்துத் தீர்மானம் பண்ணுவோம்" என்று பேசிக்கொண்டனர்.

சகல ஜாதிப்பிள்ளைகளோடும் சிநேகம் பண்ணி சாரண சங்கமும் பெண்பிள்ளைகள் சாரணச் சங்கமுமாக இரு சங்கங்களை ஸ்தாபித்து நடத்தவும் ஒவ்வொரு சங்கத்திலும் பல ஜாதிப் பிள்ளைகளிருக்கும்படி பிரிக்கவும், ஒவ்வொரு கி.மு. சங்க அங்கமும் ஒவ்வொரு பிரிவுக்குத் தலைமைவகிக்கவும், யாவும் சரியாய் நடக்கும்படி சுஞானப்பா மேல்பார்த்துக்கொள்ளவும் வாலிபர் கூடி ஒழுங்கு பண்ணினர். உற்சாகத்துடன் வேலை செய்து சங்கங்களை ஸ்தாபித்து விளையாட்டு ஸ்தலங்களையும் ஏற்படுத்தினர்.

ராஜவுடைய கூட்டத்தார் தீண்டா ஜாதியாருக்குள் வேலை செய்து அவர்களுக்கு மேல் ஜாதியாரோடு பேதமின்றி உறவாடத் தக்கதான சுத்தவழக்க பழக்கங்களைக் கற்றுக் கொடுத்தனர்.

ராஜா தங்களை விட்டுப்போகக் கூடாது என்று எண்ணின ஈனஜாதியார் அவன் சொன்னபடியெல்லாம் செய்ய ஆயத்தமாயிருந்தனர்.

அவர்கள் செய்த முதல் வேலை குழிக் கக்கூஸ் வெட்டினர். அதை உபயோகிக்கும்படி பொது ஜன அபிப்பிராயத்தை உண்டாக்கினர். குழி தோண்டும்படி சுஞானப்பா தன் வயலில் இடங் கொடுத்தான். ஆண்களுக்கு ஒன்றும் பெண்களுக்கு ஒன்றுமாக இரண்டு ஒதுங்குமிடம் உண்டானது. மூடிப்போடும் படி மண்ணும் குவிக்கப்பட்டிருந்தது. பெண்கள் ஓலைப்பாய் பின்னி மறைவு கட்டிக்கொண்டனர்.

குழி நிறைந்தபின் சுஞானப்பா அதை தன் வயலின் உரத்திற்காக விலை கொடுத்து வாங்கிக் கொள்வதாகச் சொன்னான். இப்பணம் பொது ஜன ஊழியத்திற்கு உபயோகிக்கப் படவேண்டும் என்றும் சொன்னான். மூடிபோட்ட உறையை வாங்கி நீரோடையின் பக்கமாய்ப் பதித்து ஜனங்கள் தெளிந்த குளிர்ந்த சுத்த ஜலம் எடுத்து குடிக்கவும் குளிக்கவும் உபயோகிக்க ஏதுவுண்டாக்கினர்.

தங்கள் துணிகளைத் துறைக்குக் கொண்டுபோய்த் துவைத்து உடுத்தவும் கற்றுக் கொண்டனர். பெண்கள் சாரணச்சங்கத்தினர் உதவிசெய்தனர். துணிகள் காய்ந்து கொண்டிருக்கும் நேரம் சாரணச்சிறுமிகள் அறிவிலிகளுக்குக் கற்றுக்கொடுத்தனர்.

ஜனங்கள் நித்தங் குளித்து சுத்தம் வாய்ந்தவர்களா யிருக்க சுருக்க முறை கற்றுக் கொண்டனர். "நல்ல மேலுக்கு நாழித்தண்ணீர்" என்ற வாறு கொஞ்சந் தண்ணீ ரிருந்தாலும் ஈரத் துணியை எடுத்துத் துடைக்கக் கற்றுக்கொண்டனர். தண்ணீரிலுள்ள விஷக் கிருமிகளைக் கொல்லும் மருந்து உபயோகிக்கவும் கற்றுக்கொண்டனர். பேன், சிரங்கு முதலிய அசுத்தங்களோடு ஓயாப் போர் புரியவேண்டிய திருந்தது. பல இடங்களில் முகம்பார்க்கும் கண்ணாடிகள்

மாட்டிவைக்கப்பட்டிருந்தன. பெண்கள் செலவில்லாமல் தலை வாரிச் சுத்தமாயிருக்கும்படி இந்த ஏற்பாடு இருந்தது. மழைக்குப் பின்னல் கிராம வாலிபர் கிராமப் பாதையைச் செவ்வைப் படுத்தினர். செடிகள் வைத்து வளர்த்தனர். கனிதரும் தருக்கள் நாட்டினர். வீடு வாசல் சுத்தம் பண்ணி அலங்கரித்தனர்

ஈன ஜாதியார் தங்கள் கிராமத்தைப் பற்றிப் பெருமை கொண்டனர். ராஜாவே தன் ஜாதியாரைப்பற்றிப் பெருமை யடைந்தனன். வெள்ளாடு வளர்த்தல், சீமைக்கோழி வளர்த்தல், துணி நெசவு முதலிய கைத்தொழில்களை விருத்தி செய்து சிக்கன அபிவிருத்திக் கேதுவுண்டாக்க ஆசித்தனன். ஜனங்கள் சுயமரியாதை இன்னதென்றுணர்ந்து கொண்டதைக் கண்டு ஆனந்தித்தனன்.

ஜாதிபேத மின்றி விளையாட்டில் பாலியர் பங்கெடுத்தனர். மேல் ஜாதியாரை விட கீழ் ஜாதியார் அதிக சுத்தமாய் தோன்றினர் என்று யாவரும் பேசக்கூடியதாயிருந்தது.

கிராமத்திலுள்ள யாவரும் ராஜாவினிடத்தில் ஆலோசனை தேடினர். ஆடு, கோழி வளர்த்தல், தேனீக்கள் வளர்த்தல், விவசாய முறைகள், மாவறைக்கும் பொது இயந்திரம் முதலிய விஷயங்களில் விசேஷமாய் மேல் ஜாதியார் ராஜாவின் உதவியைத் தேடினர். அவனை வீடுகளுக்கும் அழைப்பதுண்டு. முதலில் வெளியே நாற்காலி போட்டவர்கள் அவனுடைய உடை நடை பாவனையைக் கண்டபின் வீட்டிற்குள் அழைத்து ஆகாரம் படைக்க ஆரம்பித்தனர். இவன் தன்னோடு கூட ஈன ஜாதிப் பையன்களையும் அழைத்துச் செல்லுவான்.

கிராமத்தில் பெரிய ஒற்றுமை காணப்பட்டது, சுஞானப்பாவுக்கு ஆச்சரியம். கி.மு. சங்கம் உற்சாகமாய் உதவி செய்தது. ராஜாவே அச்சங்கத்திற்குத் தலைவர். சகலரும் ராஜாவின் உதவியை நாடினர்.

ஜீவப்பா ஒரு நாள் கிராம உயர்வுச் சங்க உத்தியோகஸ்தரை அழைத்துக் காட்டி ஒரு மகா நாடு கூட்டினன். அக்கூட்டத்தில் பல ஜாதிப்பிள்ளைகள் விளையாடிக் காட்டினர். சாரணச் சிறுவரின் கை வேலைகளிருந்தன. மாவறைக்கும் பொது இயந்திரத்தைப்பற்றி ராஜா பேசினன். ஆச்சரியத்தோடு வந்திருந்த அங்கத்தினர் ஒருவரை ஒருவர் பார்த்து இவ்வளவு அபிவிருத்தி இவ்வளவு சொற்ப காலத்திற்குள் உண்டானது கூடிய காரியமா? ஒரூர் புதிய ஒரூர் ஆயிற்றே! "மலையின்மேல் கட்டப்பட்ட பட்டணமே!" என்றனர்.

வந்திருந்தவர்களிலொருவர் எழுந்து பேசினர்:—

" சிநேகிதரே!

நாங்கள் காண்கிறவைகளும் கேட்கிறவைகளும் நடக்கிற இக்காலம் இந்தியாவுக்குப் புதிய காலமே! கிராம உயர்வுச் சங்கத்தின் அங்கத்தினராக இங்கு வந்துள்ளோம். கிராம முன்னேற்ற ஸ்தாபனம் ஒன்று உங்கள் கிராமத்தில் ஏற்படுத்த விரும்புகின்றோம்."

அக்கிராசனம் வகித்த சுஞானப்பா "கர்த்தருக்கு ஸ்தோத்திரம்" என்றான். வாலிபருக்குச் சந்தோஷமுண்டாயிற்று.



அதற்கு அவர் "இதை எடுத்து நடத்த யாரை நியமிப்பீர்கள்?" என்று கேட்க, வாலிபர் ராஜாவை நோக்கிப் பார்த்தனர். பெரியோர் ஆலோசித்த பின் அவர்களில் ஒருவர் எழுந்து,

"எங்களுக்கு ராஜாவை ஏற்படுத்துவதுதான் பிரியம். அவனுக்கு முழு நேரமும் இருந்தால் எங்களுக்கு நன்றாய் உதவி செய்வான். இல்லாவிட்டால் அவனோடு நாங்களும் வயலில் வேலை செய்து பாடுபட்டு அவனுடைய ஆலோசனை கேட்க வேண்டியதிருக்கிறது. ஏனென்றால் அவனுக்கு நேரமில்லை. நேற்று ஒரு காரியங் கேட்குமுன் அவனோடு ஒரு மணி நேரம் வேலை செய்தேன். என் இடுப்பு இன்னும் வலிக்கின்றது" என்றார்.

சுஞானப்பாவும் "ராஜாவே சரியான ஆள்" என்றான்.

ராஜாவைக் கேட்டதற்கு, ராஜா "என் ஜனத்தின் உயர்வுக்காக என்னைத் தத்தம் செய்திருக்கின்றேன். நான் உழைப்பது அவர்களுக்குப் பிரியமானால் இந்த உத்தரவாதத்தை நான் சந்தோஷமாக ஏற்றுக்கொள்ளுகின்றேன்" என்றான்.

---


## வேத வாசிப்பு.

| | | |
|---|---|---|
| லூக். | 7 : 31 — 35 | இயேசு எவரோடும் உறவாடுகின்றார் |
| யோவா. | 4 : 20 — 24 | சுத்திகரிப்பின் காலம் வாக்குப்பண்ணப்பட்டது |
| யோவா. | 4 : 39 — 42 | தீண்டா ஜாதியாரிடம் செய்த ஊழியப் பலன் |
| மாற். | 11 : 1 — 9 | இயேசு கிராமங்களின் நேசர் |
| யோவா. | 17 : 20 — 26 | "அவர்கள் ஒன்றாயிருக்கும்படி" |
| லூக். | 12 : 22 — 29 | சீரான மனநிலைமை. |

---

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்


### சிறுவர் செய்யக்கூடிய கை வேலை.





ஆறு கார்க் துண்டுகளெடுத்து நீண்ட ஊசிகளை உபயோகித்து படத்தில் காட்டியபடி ஓர் உருவம் ஏற்படும்படி ஒன்றோடொன்று சேர்த்துக் குத்தி வரைந்து வைக்கலாம்.

தாங்களே செய்த உருவத்தைப் பார்த்துப் பிள்ளைகள் அதிக சந்தோஷப்படுவார்கள். ஒவ்வொரு பிள்ளையும் தனித்தனியே பிரயாசப்பட்டுச் செய்து பார்க்கலாம்.









## கதை நடித்தல்.

### காட்சி 1.

(ஜப்பானிய தோட்டம்.)

தங்கை:—நமது பூஷண பாலன் மரம் இன்னும் புஷ்பிக்க வில்லையே! அப்பாவும் அம்மாளும் ஆகாரம் அருந்தாமலிருக்கின்றார்களே!! பூஷண பாலனுக்கும் இன்னும் பூரண சுகமாகவில்லையே!!! மறுபடியும் இன்று வியாதி திருப்பிப் படுக்கையிலிருக்கின்றான். என் செய்வோம்? மரம் ஒரு பூவாகிலும் புஷ்பித்தால் தம்பி சுகமடைவான். யாவரும் சந்தோஷம் கொண்டாடலாம்.

(மெட்டு—"கண்ணே நீ வாடா")

பல்லவி.

இன்னுங் காணோமே—இத் தருவிற் பூ<br>
வின்னுங் காணோமே.

அநுபல்லவி.

என்ன செய்வோம் ஏது செய்வோம்<br>
பின்னம் வந்ததுவே<br>
அன்னையும் பிதாவும் அருளொளியற்றார்<br>
பின்னே என் செய்வார்? இன்

தமையன்:—

1

புஷ்பம் பூக்க பூரிப்பாக்க<br>
புஷ்ப தேவியிடம்<br>
இஷ்டமானால் இக்ஷணம் சென்றால்<br>
கஷ்டம் களைந்திடுவாள். இன்

தங்காய்! அதோ தெரிகின்றதே ஓர் உன்னத சிகரம். அங்கு அம்மை புஷ்ப தேவி வாசஞ்செய்கின்றாள். அவளிடம் சென்று பூஷண பாலன் தரு புஷ்பிக்கும்படி மந்திர தீர்த்தம் அளிக்கவேண்டுமென்று பிரார்த்தித்தால் அவள் அதை அளிப்பாள். அதைக் கொண்டு வந்து அத்தருவின்மேல் தெளித்தால் அழகிய மொட்டு விட்டு மலர் அலரும். அப்போது நமது தமபி சுகமடைவான். நாம் போகலாம் வா.

### காட்சி 2.

(ஒரு புறாவைக் கண்டு.)

சகோதரர்:— (மெட்டு—'தீண்டக்கூடாதோ')

சின்னப் புறாவே—பாதை<br>
இன்ன தென்றுரை—இப்போ

என்ன பாதை எங்கு பாதை
உன்னத சிகரம் ஏற
சொன்ன புஷ்ப தேவி கண்டு
பின்னம் நீங்கி சுக மடைய. சின்னப்

புறு:—ருக்கூ, கூ, ருக்கூ. பிள்ளைகாள்! பிரிய பிள்ளைகாள்! இச்சிற்றோடை செல் வழி சென்றால் ஒரு பாலத்தண்டை வருவீர்கள். பின்னுங் கொஞ்சத் தூரம் போனால் உன்னத சிகரம் காண்பீர்கள். என் கூட்டைக் கலைக்காமல் போவீர்களல்லவா? ருக்கூ, கூ, ருக்கூ.

சகோதரர்:—அதிக வந்தனம். உன் குஞ்சுகளுக்கு ஒரு தீங்கும் வராது. பயப்படாதே.

(பாலத்தண்டை சவுக்கு மரத்தைப் பார்த்து)

சின்ன மரமே—பாதை
இன்ன தென்றுரை—இப்போ

என்ன பாதை எங்கு பாதை
உன்னத சிகரம் ஏற
சொன்ன புஷ்ப தேவி கண்டு
பின்னம் நீங்கி சுக மடைய. சின்ன

சவுக்கு மரம்:—பிள்ளைகாள்! இக்குன்றின்மேலேறி மறு பக்கம் இறங்கி வயலைக் கடந்து செல்லுங்கள்.

சகோதரர்:—சவுக்கு மரமே. மிகவும் வந்தனம். நீ செய்த பேருதவிக்கு ஈடாக நாளெல்லாம் உன் ஊசி இலைகளுக்கு ஊடே இனிய இராகத்தோடே காற்று வீசிக்கொண்டே யிருக்க வேண்டிக் கொண்டே யிருப்போம்.

சகோதரர்:— (பட்டுப் பூச்சியைக் கண்டு)

சின்னப் பூச்சியே—பாதை
இன்னதென்றுரை—இப்போ

என்ன பாதை எங்கு பாதை
உன்னத சிகரம் ஏற
சொன்ன புஷ்ப தேவி கண்டு
பின்னம் நீங்கி சுக மடைய. சின்ன

பட்டுப் பூச்சி:—பிரிய பிள்ளைகாள்! இன்று தான் புஷ்ப தேவியின் சிங்கார வனத்தில் தேன் அருந்தினேன். அவ்வழியினருகே நிற்கும் மூங்கிற் செடிகளுக் கப்பாற் சென்று தேன் சேர்த்தேன்.

சகோதரர்:—பகட்டான பட்டுப் பூச்சியே! உனக்கு எம் வந்தனம். புஷ்பங்கள் உனக்கு ஏராளமான தேன் அளிக்கும்படி பிரார்த்திப்போம்.



## காட்சி 3.

(அரசியின் அரண்மனை)

சேவகன்:—அழகு மிகு அரசியே! பூலோக மக்களுளிருவர் அரண்மனைக்கு வந்து அரசியைக் காண ஆசிக்கின்றனர்.

புஷ்பதேவி:—அம்மக்களை அழைத்து வா.

சகோதரர்:— (பாடி வருகின்றனர்)

(மெட்டு—"ஆதியான அரூபா நமோ நமோ")

1

பொன்னுலகு வாழ் தேவி நமோ நமோ
மின்னுமுன் னடி மேவி நமோ நமோ
பின்னும் எம் குறை கூவி நமோ நமோ. உரையோமோ

2

பூக்கள் புஷ்பிக்கும் தேவி நமோ நமோ
ஈக்கள் போலுனை மேவி நமோ நமோ
மாக்கள் எம் குறை கூவி நமோ நமோ. அடைந்தோமே

தங்கை:—அன்பு மிகு அரசியே! எம் அருமைத் தம்பி பூஷண பாலன் அதிக சுகவீனமா யிருக்கின்றான். அப்பாவும் அம்மாளும் அதிக விசனமாயிருக்கின்றார் கள். அண்ணன் கொண்டு வந்திருக்கும் திருக்குச் செம்பிற் கொஞ்சம் தீர்த்தம் தரமாட்டீர்களா? அதைக் கொண்டு போய் தம்பியின் தருவின் மேல் தெளித்தால் அத்தருவே அழகிய புஷ்பங்களைத் தருமே! அப்போது அவனுக்கு சுகம் வருமே!!

புஷ்பதேவி:— (மெட்டு—"தேவ தூதன் நானே")

புஷ்ப தேவி நானே
புஷ்பிக்கச் செய்வேனும் பூவா மரத்தையே. புஷ்ப

கஷ்டம் பாராதிரும் இஷ்டம் அருள் செய்வேன்
நஷ்டமில்லா நல்லதிஷ்ட தீர்த்தம் ஈவேன். புஷ்ப

பூலோக மக்காள்! ஆசைப்படி அருள் செய்வேன். அம்மூங்கிற் தோப்புக்கருகில் மந்திர ஊற்று ஒன்று உண்டு. அங்கு போய் அந்த தீர்த்தத்தில் கொஞ்சம் எடுத்துக் கொண்டு போங்கள். ஆனால் போகும்போது நீங்கள் வெகு கவலையாயிருக்க வேண்டும். அதோ அக் காட்டில் ஓர் ஆள் அடைபட்டிருக்கின்றார். அத்தீர்த்தத்தை அருந்தினால் விடுதலையுண்டு. விடுதலை பெற்றால் என் தோட்டத்தின் புஷ்பங்களை எல்லாம் நாசஞ் செய்வார். ஆகையால் பத்திரமாய் இருக்கவேண்டும்.

சகோதரர்:—மகிமை தங்கிய அரசியே !

பன்முறை பாத நமஸ்காரம் பண்ணுகின்ரேம். பூஷண பாலனுக்குப் போஜனம் போன்ற பொக்கிஷத்தைக் காக்க வாக்களிக்கின்ரேம்.

## காட்சி 4.

(காட்டுக்கருகில்)

அண்ணன்:—தங்காய் ! அதுதான் அந்த ஆள் அடைக்கப்பட்டிருக்குங் காடு. இரவுமாகி விட்டது. இம் மாத்தடியிலே படுத்துறங்கி விடிந்தவுடன் எழுந்து செல்வோம்.

(தீர்த்தம் எடுத்து வைத்திருக்கும் திருக்குச் செம்பைக் காட்டி) என் சட்டையால் இச்செம்பை மூடி மறைத்துக் கொள்ளுவேன்.

(தூங்குகின்றனர்)

அடைக்கப்பட்டிருக்கும் ஆள்:—(வெளவாலைப் பார்த்து)

கர்வங் கொண்ட புஷ்ப தேவி என்னைக் காட்டுக் கைதியாக்கினபடியால் சூரிய சந்திர அஸ்தமனத்திற்குப் பின்பு தான் நான் வெளியேற முடியும். இருளில் என்னோடு உலாவும் நீயே எனக்கு ஏற்ற கையாள். தூங்குகின்ற அப்பையனிடம் சென்று அவன் விழித்துக் கொள்ளாதபடி மயக்கும் மந்திரம் உச்சரித்து வா. சந்திர ஒளி மறைந்தபின் நான் அவனிடம் சென்று என்னை விடுதலை செய்யும் சக்தி வாய்ந்த அத்தீர்த்தத்தை அபகரித்து அருந்துவேன்.

வெளவால்:—(பறந்து சென்று பையன்மேல் சாய்ந்து நின்று)

ராரா ராரோ ராரா ராரீரோ
ராரா ராரோ ராராரீரோ

எங்கும் இருளே
நீங்கும் வரையே
இங்கு தங்குவோய்
தூங்கிடு வாய்.

(தங்கை உறங்காமல் பார்த்துக் கொண்டிருக்கின்ருள்)

தங்கை:—அந்த வெளவால் அண்ணனை மயக்கி விட்டது. தீர்த்தத்தை மறைக்க ஒரு இடம் பார்க்கவேண்டும்.

(முயலைப்பார்த்து)

தங்கை—ஓ, பிரிய முயலே ! உன் ஆகாரத்தை அபகரிக்க மாட்டேன். இச்செம்மை அபகரிக்க என் அண்ணனை மயக்கி அலையும் ஆளின் கண்ணுக்கு இதை மறைக்க ஓர் இடந்தர மாட்டாயா ?



முயல்—பிராணிகளிடம் பிரீதியுள்ள பிள்ளாய் ! நான் உனக்கு உதவிசெய்வேன். மந்திர மயக்கத்தை மாற்றும் மருந்தொன்றுண்டு. இக்காட்டின் ஓரத்தில் ஒரு குளம் உண்டு. அதில் அலரும் தூய லீலிப் புஷ்பம் அதிக வாசம் வீசும். அவ் வாசனை மயக்கத்தை மாற்ற ஏற்றதோர் ஔஷதம். சந்திரன் மறையுமுன் அம்மலர் கொய்து அம்மயக்கத்தைத் தெளிவிக்க வேண்டுமே !

(தங்கையோடித் தன் கை நிறைய மலர் கொய்து பாடுகின்ருள்)

புஷ்பம் கொய்வேன் யானிங்கே
பூரண சந்தோஷம் எங்கே ?

இஷ்டர் தமையன் தம்பி இருவர்
கஷ்டம் யாவும் எப்போ களைவர் ? — புஷ்பம்.

(ஓடித் தமையன் மீதில் லீலி மலர்கொண்டு வீசுகின்ருள்)

(தமையன் எழுந்து திருக்குச் செம்மை எடுத்துக்கொண்டு தங்கையுடன் சென்று வீடு சேருகின்றனர்.)

## காட்சி 5

(வீடு—பூஷண பாலன் மரம்—
தம்பி வியாதிப் படுக்கை. தீர்த்தம் தெளித்தல்,
தம்பி குதித்தெழுதல் வீட்டார் யாவரும்
மரத்தின் அதிசயத்தைக் கண்டு களித்தல்.
யாவரும் மங்கள கீதம் பாடுதல்.)

மெட்டு—ஆனந்தம் ஆனந்த...

மங்களம் மங்களமே—சு
மங்களம் மங்களமே—சு
மங்களம் மங்களமே—சு
மங்களம் மங்களமே.

புனித சிகர தேவியினருளால்
இனிதாய்த் தருவும் புஷ்பித்ததால்—மங்

தங்கையின் புகழ் ஓங்க—தரு
மங்காது தழைத்தோங்க—தம்பி
பங்கமும் இனி நீங்க—சு
மங்களம் மங்களமே.


புனித சிகர தேவியினருளால்
இனிதாய்த் தருவும் புஷ்பித்ததால்—மங்

T. A. Fenn.

# பருவம் முதிர்ந்தோர் படிப்பு.

## (F. C. லாபாக் பண்டிதர் முறை)

இளைஞர் மாத்திரம் எளிதில் வாசிக்கக் கற்றுக்கொள்ள முடியும் என்று ஜனங்கள் எண்ணி வந்தார்கள். இளைஞர் நான்கு நாளில் கற்றுக் கொள்ளக்கூடியதை பருவம் முதிர்ந்தோர் ஒரே நாளில் கற்றுக் கொள்ளக்கூடும் என்று தற்காலத்தில் ரூபித்திருக்கின்றனர்.



இளைஞரைவிட பருவம் முதிர்ந்தோர் எளிதில் கற்றுக்கொள்ளுகின்றனர்.

பருவம் முதிர்ந்தோருக்குக் கற்றுக் கொடுக்கும் முறையில் வித்தியாசமிருக்க வேண்டும். படிக்கும்படி கட்டாயப்படுத்த முடியாது. படிக்கக் கூடிய சக்தி தங்களுக்கிருக்கிறதாகவும் தாங்கள் முன்னேறி வருகிறதாகவும் எண்ணம் உள்ள எப்போதும் அவர்களுக்கு இருக்க வேண்டும். பருவம் முதிர்ந்தோருக்குச் சிறுவர்களைக் காட்டிலும் யோசிக்கும் சக்தியும், ஒழுங்குக்குக் கட்டுப்படும் சக்தியும் அதிகமுண்டு. அறிவும் பாஷாபிவிருத்தியும் அதிகமுண்டு.



பருவம் முதிர்ந்தோர் படிப்பின்மையை நீக்கும் படை முயற்சியில் அநேக தேசங்கள் ஈடுபட்டிருக்கின்றன. பதினைந்து ஆண்டுகளுக்கு முன் ருஷியாவில் நூற்றுக்கு முப்பத்து மூன்று பேருக்கு மாத்திரம் எழுத வாசிக்கத் தெரியும். இன்றைக்கு 100க்கு 90 பேருக்கு எழுத வாசிக்கத் தெரியும். அதி சீக்கிரத்தில் யாவரும் எழுத வாசிக்கும்படி முயற்சி செய்கின்றனர். துருக்கி, மெக்சிக்கோ, பிரேசில் முதலிய இடங்களிலும் அவ்வாறே முயற்சி செய்கின்றனர்.

இந்தியாவிலோ நூற்றுக்கு எட்டுப் பேருக்கு மாத்திரம் எழுத வாசிக்கத் தெரியும். கடந்த பத்து வருஷத்திற்குள் ஆயிரத்துக்கு எட்டு பேர் வீதம் இத்தொகை அதிகரித்திருக்கின்றது. இந்த வீதம் விருத்தி யடைந்தால் இந்தியாவில் யாவரும் எழுத வாசிக்க 1150 ஆண்டுகளாகும்.

இந்திய அக்ஷரங்கள் சப்தத்தின்படி உச்சரிக்கக் கூடியவைகளாயினும் மற்ற பாஷை[illegible]லில்லாத பல கஷ்டங்களுடையவை. ஏராளமான எழுத்துக்களும் பதத்தி லமைவு மிடத்துக்குத் தக்க எழுத் துருவ மாறுதலு முடையவை இவ்விந்திய பாஷைகள்.

கனம் லாபாக் பண்டிதர் பிலிப்பியன் தீவுகளில் பருவ முதிர்ந்தோருக்குப் படிப்பிக்கும் சக்தியும் சித்தியும் வாய்ந்த அநுபவமுடையவர். இந்தியாவின் படிப்பின்மையை நீக்கும் படை முயற்சியில் உதவி செய்ய இங்கு இவர் வந்திருக்கின்றார். கல்வி கற்போர் மனப்பாடம் பண்ணத்தக்க கதை யொன்றை ஆரம்பமாக வைத்து அதிலுள்ள ஒரு பதத்தை பிரித்தெடுத்து அப்பதத்திலுள்ள எழுத்துக்களை இடமாற்றி வெவ்வேறு பதங்களைப் பிறப்பிக்கின்றார். ஒவ்வொரு எழுத்தும் ஐந்து தடவை உபயோகிக்கப்படுமட்டும் திருப்தி யடையார். இதன் மூலமாய் கற்போர் மனதில் எழுத்துக்கள் எளிதில் பதிந்துவிடுகின்றன.

ஒரு கதையை ஒருவன் கற்றுக்கொண்டவுடன் அதை அவன் மற்றொருவனுக்குக் கற்றுக் கொடுக்கவேண்டும்.




முதல் பாடத்தை மற்றொருவனுக்குக் கற்றுக் கொடுக்கும் மட்டும் இரண்டாம் பாடம் துவக்கக்கூடாது.



இரண்டு பாடத்தையும் அவன் ஐந்து பேருக்குக் கற்றுக் கொடுக்கும் மட்டும் மூன்றும் பாடம் கற்றுக்கொள்ளக்கூடாது.


கனம் லாபாக் பண்டிதர் முறையின்படி ஒவ்வொரு மாணாக்கனும் கிராம உபாத்தியாயர் ஆகவேண்டும். சொற்ப செலவில் கிராமம் முழுவதும் கல்வி கற்க முடியும். இம்முறையைக் கையாடினால் இந்தியா தேசம் அதிசிக்கிரம் கல்வி விஷயமாய் முன்னேறும். ஆனால் வாசிக்கத் தெரிந்தவர்கள் வாசித்துப் பயன்பெறுமாறு ஏற்ற புஸ்தகங்கள் எழுதப்படவேண்டாமா? அவர்கள் பிரியத்தோடு வாசிக்கத்தக்க புஸ்தகங்கள் இல்லாவிட்டால் அவர்கள் அறிவும் சக்தியும் குன்றிப்போகும். கிராமத்தாருக் குபயோகமான புஸ்தகங்கள் எழுத வாலிபர் தேவை. சுய லாபத்தைக் கருதாது தம் தாய் நாட்டுக் குழைக்க மன முள்ளோ ரில்லையோ?

Printed at the N. M. S. Press, Royapettah
and
Published by Rev. T. A. Fenn,
College Church,
12, Venkata Maistry Street,
George Town, Madras.

# வித்யாதனம்

## (TAMIL TREASURE CHEST)

| Vol 1. | ஜுலைமீ 1937௵ | No 4. |
|---|---|---|



# பொருளடக்கம்.


| | | பக்கம். |
|---|---|---|
| 1. | பத்திராதிபர் குறிப்பு | 1 |
| 2. | வில்லியம் ஷேக்ஸ் பியர் | 2 |
| 3. | வசதி எனும் வாயில் | 10 |
| 4. | வர்த்தமானம் | 12 |
| 5. | ஐக்கிய மாகாணம் | 13 |
| 6. | சுகாதாரம் | 13 |
| 7. | பிள்ளைகளுக் கேற்ற படங்கள் | 15 |
| 8. | பூச்சிகள் | 16 |
| 9. | மௌன மணி நேரம் | 17 |
| 10. | கடிதம் | 19 |
| 11. | சத்தியமே சக்தி வாய்ந்தது | 20 |
| 12. | சாஸ்திர சம்பந்தமான சம்பவங்கள் | 22 |
| 13. | ஆகார சம்பந்தமாய் அகிலலோக ஐக்கிய சங்கத்தின் அறிக்கை | 23 |
| 14. | இது தெரியாதா | 23 |


---

## பத்திரிகையின் சந்தா விபரம்.

---

| | | |
|---|---|---|
| பிரதி ஒன்றுக்கு | ... | அணா 1 |
| வருஷ சந்தா | ... | ரூ. 1—0—0 |
| வெளி நாடுகளுக்கு | ... | ரூ. 1—8—0 |


REV. T. A. FENN,
Editor, Vidyadhanam,
12, Venkata Maistry Street,
George town,
MADRAS.


# வித்யாதனம்

# VIDYA DHANAM

(TAMIL TREASURE CHEST)


தொகுதி 1. | ஜூலை 1937வரு | பகுதி 4.


## பத்திராதிபர் குறிப்பு

---

வேலை மாறுதலின் பலனாக எமக்கு இடமாறுதல் ஏற்பட்டது. அதன் பலனாக அச்சி யந்திரசாலையிலும் மாறுதல் ஏற்பட வேண்டியதாயிற்று. ஆனது பற்றி பத்திரிகை ஏற்ற காலத்தில் வெளியாவதற்கு இடமில்லாமற் போனது எமக்கு விசனமே! எளிதில் இக்குறையை நிவிர்த்தி செய்யப் பிரயாசப் படுவோம். இன்னும் இரு மாதங்களுக்குள்ளாக இப்பத்திரிகை ஒழுங்காய் வெளி வர ஓர் ஏற்பாடு செய்வோம்.

இதிற் காணுங் குற்றங் குறைகளை ஏற்றகாலத்தில் எமக்கு எழுதி யனுப்பக் கேட்டுக் கொள்ளுகின்றோம். ஏனெனில் பத்திரிகையின் அபிவிருத்திக்குக் குறை நிவிர்த்தியே ஆதாரம்.

இதில் பாடசாலை மாணவர் எழுதும் வியாசங்களையும், ஆசிரியர் எழுதும் பாடங்களை யும், வாசிப்போர் எவரும் எழுதும் விடுகவிகளையும், வேறெக் கவிகளையும், பிரசுரிக்க ஆசிக்கின்றோம். நற்கதைகளுண்டானால் சொற் சுவையுடன் எழுதி யனுப்பக் கேட்டுக் கொள்ளுகின்றோம். சிசு பரிபாலனம், வைத்திய சகாயம், ஊர் சீர் திருத்தம, முதலிய கிராம முன்னேற்ற சம்பந்தமான எவ்வித சுயதான ஊழியத்திலும் மாணவர் ஈடுபட்டு அவர் அடையும் பயிற்சியைப் பற்றி விஷயதானம் உண்டோ? வித்யாதனத்திற்கு இவ் விஷயதானமே பிரதானம்!

T. A. Fenn.

---

# வில்லியம் ஷேக்ஸ்பியர்

## வெனிஸ் வர்த்தகன்

(Mary Alta Scott)

வெனிஸ் வர்த்தகனாகிய அந்தோனியோ எனும் தாராள சிந்தையுள்ள தனவந்தன் இரு சிநேகிதருடன் தன் சொந்த ஊரில் உலாவிக்கொண்டிருந்தனன்.

“ எனக்கேன்இத்துக்கம் என அறியேன் ” என்று அந்தோனியோ இயம்பினன்.

“ கடலிலுள்ள கப்பல்களுக்காகக் கவலைப்படுகின்றனையோ ?” என ஒரு சிநேகிதன் வினவினன்.

“ உன்னைப்போல் யானும் கடலிற் கப்பல்களுடையவனானால் கவலைக்குள்ளாவேன். காலமெல்லாமிடைவிடாது உட்கொள்ளும் ஒவ்வொரு மூச்சும், காலங் காட்டுங் கருவியிலுள்ள கடற்கரை மணலும், கடவுள் ஆலயத்திற் காணுங் கற்களும் கப்பல்களுக்கு வரும் நாசமோசங்களை ஞாபகப்படுத்துமே !” என்றடுத்தவன் எடுத்துரைத்தனன்.

சொந்தக் கப்பல்களைப்பற்றி எந்தவிதக் கவலையும் தனக்கில்லையென அந்தோனியோ கூறினன். ஏனெனில் அவை யாவும் பற்பல திக்குகளிலிருந்தன.

விவாக விஷயத்தில் ஏதேனும் வேதனை ஏற்பட்டதோ வென மற்றவன் வினவினன். அதற்கு அந்தோனியோ “ சீ, சீ,” என்றாரம்பித்து விடை கூறுமுன் அவன் அன்பார்ந்த நண்பனும் சொந்த பந்துவுமாகிய பஸானியோ வந்து அவனைச் சந்தித்ததால் மற்ற இருவரும் அந்தோனியோவிடம் விடை பெற்று அவ்விடம் விட்டகன்றனர்.

“ எவளது அன்பு உனதிதயத்தில் உதயமானதென்று எனக்குரைப்பேனென்று வாக்களித்தாயே. அதை எனக்கு மறையாது உரை” என்று அந்தோனியோ கேட்க, அதற்கு விடை கூறு முன் பஸானியோ தனது பணமெல்லாம் செலவாகித் தான் வெறுமையாய்ப் போனதைப்பற்றி ஞாபகப்படுத்தினன்.

“ அதைப்பற்றி இனிப் பேசவேண்டாம். உன்னை எவ்வளவாய் நேசிக்கின்றேன் என்று சொல்வ தவசிய மன்று. எனக்கு உள்ள தெல்லாம் செலவானாலும் உனக்கு உதவுவேன் என்பது உள்ளதே !” என்றான் அந்தோனியோ.

சமீபத்திலுள்ள பெல்மாண்ட் எனு மூரில் போர்ஷியா எனும் செல்வ மிகும் சுந்தரி இருப்பதாகவும் அவளை அடைய அநேகர் ஆசித்திருப்பதாகவும், தனக்குப் பணமுண்டானால் தானும் பிரயாசப்படலாமென்று பஸானியோ கூறினன்.

அதற்கு அந்தோனியோ, “ தற்சமயம் பணம் என் கை வசம் இல்லை. கப்பல்கள் வியாபாரத்திற்காக கடல்களிற் செல்லுகின்றன. ஆயினும் ஆசித்தவளை நீ அடையுமாறு கடன் வாங்கித் தருகின்றேன். பெல்மாண்ட் போய் வரலாம்,” என்றனன்.

இருவரும் ஷைலக் எனும் யூதனிடம் சென்று அந்தோனியோவை உத்தரவாதியாக்கி ரூ. 18000 கடன் கேட்டனர். அந்தோனியோ தாராள சிந்தையுள்ளவனானபடியினாலும், வட்டி



யில்லாமல் கடன் கொடுத்து வருகிறவனானபடியாலும், அதின் பலனாக வட்டி வீதம் குறைந்து வருகிறபடியாலும், சந்தைவெளிகளில் ஷைலக்கின் அநியாய வட்டியைக்குறித்து அந்தோனியோ குறை கூறுகிறபடியாலும் அவனை ஷைலக் பகைத்தனன். எனினும் அவ் விரோதத்தை வெளியிடாது வட்டியின்றி மூன்று மாதத் தவணைக்குக் கடன் கொடுப்பதாக ஒப்புக் கொண்டனன். தவணைக்குள் கொடுக்கத் தவறினால் அந்தோனியோ மார்பினின்று ஒரு பவுண்ட் மாமிசத்தைத் தான் அறுத்தெடுத்துக்கொள்ள அந்தோனியோ எழுதிக் கொடுப்பானென்று வேடிக்கையாய் கேட்க, பணம் கொடுப்பதற்குப் பூரண நிச்சயம் இருந்தபடியினால் அந்தோனியோவும் சம்மதித்து எழுதிக் கொடுத்து கடன் வாங்கி பஸானியோவுக்குக் கொடுத்தனுப்பினன்.

வேண்டிய வெகுமதிகளை விலைக்கு வாங்கி பஸானியோ போர்ஷியாவைக் காணப் புறப்பட்டனன்.

போர்ஷியாவின் தந்தை தான் மரிக்குமுன் தன் மகளை அழைத்து அவள் வசம் மூன்று பெட்டிகளைக் கொடுத்தனர். ஒன்று பொற் பெட்டி, ஒன்று வெள்ளிப் பெட்டி, மற்றொன்று ஈயப் பெட்டி. இப் பெட்டிகளுள் ஒன்றில் போர்ஷியாவின் படத்தை வைத்து, படத்தை தன்னிடத்தே வைத்துள்ள பெட்டியை எவனொருவன் எடுக்க வல்லனோ அவனே அவளைத் தன்னகத்திடத்தே வைத்துக் காக்க வல்லோன் என எண்ணி இதைத் தன் மகளிடம் கூறி மரித்தனன்.

“ என்னை ஏற்றுக்கொள்ளும்.
அநேகர் ஆசை கொள்ளும்
பொருளுமதாகும் ”

என்று பொற் பெட்டியில் வரைந்திருந்தது.

“ என்னை ஏற்றுக்கொள்ளும்.
உமக் குரியதாகும்
பொருளுமதாகும் ”

என வெள்ளிப் பெட்டியில் எழுதி யிருந்தது.

“ என்னை ஏற்றுக்கொள்ளும்.
உமக்குரிய யாவும்
பிறர்க்குரிய தாகும் ”

என ஈயப் பெட்டியில் தீட்டி யிருந்தது.

சுய ஞானத்திலும் சுய மாண்பிலும் சார்ந்த அநேகர் வந்து பொற் பெட்டியையும் வெள்ளிப் பெட்டியையுமே திறந்து ஏமாந்து போயினர். அவர்களில் ஒருவராகிலும் போர்ஷியாவின் காதலுக்குரியரல்லர்.

பொற் பெட்டியைத் திறந்தோர் பயங்கரமான மண்டை யோட்டைக் கண்டனர். அதோடு ஒரு சுருளில் “ மின்னுவதெல்லாம் பொன்னல்ல ” எனும் வாசகமும் வரையப்பட்டிருந்தது.

வெள்ளிப் பெட்டியைத் திறந்தோர் அறிவிலியின் படமொன்றைக் கண்டனர். அதோடு

“ உடை நடை வெளிவேஷ வெள்ளிப் பூச்சணிந்த
மடையர்க ளன்னது என்னது. அது உன்னது.”

என எழுதியு மிருந்தது.

“ இவரனைவருள்ளும் என் காதற்கியைந்தவர் எவரும் இல்லை ” என நெரிஸா எனும் தாதியிடம் போர்ஷியா கூறினள்.

கல்விக் களஞ்சியமும் காதற்கியைந்தவனுமாகிய பஸானியோவைப்பற்றி நெரிஸா பின்வருமாறு கூறினள்.

“ அம்மணி, உனக்குரியான் பாசமிகு பஸானியாவே. அவரைவிட அந்தம் வாய்ந்தவர் வேறெந்த உலகிலுமில்லை ”

“ ஆமாம், அவர் எவரும் போற்றுதற்கு ஏற்றவர் என்று எண்ணுகின்றேன் ” என்றனள் போர்ஷியா.



பஸானியோ.




போர்ஷியா.

சற்று நேரத்திற்குள்ளாக வெனிஸ் நகரிலிருந்து ஒரு வாலிபன் வந்திருப்பதாகவும், தன் நாதன் பஸானியோ அனுப்பிய வெகுமதிகளைக் கொண்டு வந்திருப்பதாகவும், அவர் பின்னே வருவதாகவும் அறிவிக்கப்பட்டது. இதைக் கேள்வியுற்றவுடனே அவர்மீது காதல் கொண்டனள். அவரும் வந்தடைந்து அவள்மீது காதல் கொண்டனர். காதைாமதம் செய்யலாதவராய் உடனே பெட்டிகளண்டை போய் ஈயப் பெட்டியைத் திறந்து நேயமிகு போர்ஷியாவின் படத்தைக் கண்டு களித்தனர். யாவரும் ஆனந்த பரவசமாயினர். பஸானியாவின் தோழன் கிரேஷியானோவும் போர்ஷியாவின் தோழி நெரிஸாவும நேயர்களாயினர். இவ்விரு தம்பதிகளுக்கும் விவாகம் விமரிசையாய் நடைபெற்றது.



ஆனந்தத்தின் மத்தியில் அந்தோனியோவின் கடிதம் வந்தது. தன் கப்பல்களனைத்தையுங் காணோம் என்றும் கடன் கொடுக்கவோ தீர்க்கவோ பணமில்லை யென்றும் கடன்காரன் ஒரு பவுண்ட் மாமிசத்தைக் கேட்டதாகவும் தான் மரிக்குமுன் பஸானியோ தன்னைப் பார்க்க வேண்டு மென்பதாகவும் எழுதியிருந்தது.



பஸானியோ விசனத்துள் மூழ்கினன். போர்ஷியா கடன் தொகையிலும் இருபது மடங்கு அதிகமான தொகை கொடுத்துக் கடனைத் தீர்க்கும்படி வேண்டிய பொன் ஈந்துதவினள். உடனே பஸானியோ புறப்பட்டுப் போயினன். அந்தோனியோ அடுத்த நாள் மரிப்பதற்கு ஆயத்தமாயிருந்தனன்.

பஸானியோ போனபின் வீட்டுக் காரியங்களுக்கு ஒழுங்கு செய்து விட்டுத் தன் தாதியுடன் போர்ஷியா ஜெப தியானம் செய்யப் போவதாகச் சொல்லிப் புறப்பட்டனள்.

தன் சொந்த பந்துவான பேர்போன பலாரியோ பண்டிதரிடம் அங்கியும் ஆலோசனையும் பெற்று இருவரும் வேஷம் மாறி வெனிஸ் நியாய சபையை யடைந்தனர்.

நீதிபரர் ஷைலக்கிடம் இரக்கங் காட்டும்படி எவ்வளவுதான் கேட்டபோதிலும் பலனில்லாமற் போயிற்று.

தனக்கு நீதி செய்யாவிட்டால் வெனீஸ் நீதிபரர் அந்நியருக்குச் செய்யும் அநீதியைப் பற்றி ஊரெல்லாம் தூற்றுவதாகப் பயமுறுத்தினன் ஷைலக்.

"அந்தோனியோவை முழுப்பகையாய்ப் பகைப்பதால் என்ன நஷ்டம் வரினும் அவனுக்கு கஷ்டம் விளைவிப்பதே எனக்கு இஷ்டம்" என்றும் கூறினான். கடன்தொகையைப்போல் இருமடங்குத்தொகை கொடுக்க பஸானியோ முன்வந்தும் கடன் காரன் பத்திரத்தில் கண்டபடி ஒரு பவுண்ட் மாமிசமே வேண்டும் என்றனன். அதோடு "உங்கள் அடிமைகளுக்கு இரக்கங் காட்டி விடுவிக்கவாவது உங்கள் மக்கட்கே விவாகம் பண்ணிக் கொடுக்கவாவது யான் கூறுவது சரியோ, நியாயமோ, அது தர்மமோ? அப்படியாயின் யான் நியாயத்துக்காக நிற்பது அதர்மமா? எனக்குச் சேரவேண்டிய ஒரு பவுண்ட் மாமிசத்தை மறுப்பது வெனிஸ் சட்டத்துக்கு ஏற்படும் அநீதி. ஒரு பவுண்ட் மாமிசம் எடுக்கலாமா?" என்று அவசரப்பட்டான்.

அதற்கு நீதிபரர் "பலாரியோ எனும் சட்ட நிபுணர் ஒருவர் வரக்காத்திருக்கின்றேன். சற்றுபொறு" என்றார்.

பலாரியோ பண்டிதர் அனுப்பிய ஒருவர் காத்துக் கொண்டிருப்பதாகச் செய்திவந்தது. அழைக்கப்பட்டபோது அவரும் நெரிசாவும் உட்பிரவேசித்தனர்.

பஸானியோ தன் சிநேகிதனுக்குத் தேறுதல் சொல்லிக்கொண்டிருக்கும் போதே ஷைலக் கத்தி தீட்டிக்கொண்டிருந்தனன்.

நீதிபரர் பலாரியோ பண்டிதரின் கடிதத்தைப் படித்து பால்தாசர் எனும் பண்டிதர் சிறந்த நிபுணர் என்றும், தான் இந்த வியாச்சிய சம்பந்தமாய் அவரோடு கலந்து பேசியிருப்பதாகவும், தன்னை விட நிதானமாய்த் தீர்ப்புச் சொல்லக்கூடிய வரென்றும் தனக்குப்பதிலாக அனுப்பியிருப்பதாகவும் எழுதியிருக்கிறார் எனக் கூறினன்.

நீதிபரர் வேஷம் மாறி வந்த போர்ஷியாவுக்கு நல்வரவு கூறி வியாச்சிய விஷயத்தை அவர் வசம் ஒப்புவித்தனர்.

போர்ஷியா ஷைலக்கை நோக்கி:—
"உன தாசை விபரீதமானதே! வெனிஸ் சட்டபடி உன் வேண்டுதலை மறுக்க முடியாது. ஆயினும் இரக்கத்தை நாடும் நாம் பிறருக்கு இரக்கங் காண்பிக்க வேண்டாமா?"

பத்திரத்திலுள்ளதை அடைய உத்தரவருள வேண்டுமென மாறுத்தரமளித்தனன் ஷைலக்.

பணங் கொடுக்க முடியாதாவென வினவ, பஸானியோ தான் இருமடங்கு அல்லது பதின் மடங்கு கொடுப்பதாக முன் வந்தனன். என் கரம் சிரம் இதயம் யாவும் உவந்தளிப்பேன் என்றும் கூறினன். "இதை ஏற்றுக் கொள்ளா விடில் துர் எண்ணத்தினாலேவப் பட்டு இவையெல்லாம் செய்கின்றான் என்பது விளங்க வில்லையா? சட்டம் அவன் பக்கமாயினும் தீர்ப்பு என் நேயனது பக்கம் சாயட்டும். இத்தீயோனின் கொடுமையை அடக்கட்டும்." என்று பஸானியோ கெஞ்சினன்.

"சட்டத்தை மாற்ற வல்லோர் வெனிஸ் பட்டணத்தில் எவருமிலர். யான் ஒன்றும் செய்யமுடியாது. மிகவும் விசனம்." என்றனள்.

சந்தோஷத்துடன் ஷைலக் "நீதி நிலை நிறுத்தும் தானியால், ஒரு தானியேல் வந்துளன்! மாதிறமை மிகு நீதிபரரே!! உமை எத்தனையாய் மதிக்கின்றேன்!!!" என்றனன்.



"பத்திரத்தை பார்க்கலாமா? என்று கேட்டு வாங்கி படித்துப் படித்துப் பார்த்து, ஷைலக்கை நோக்கி "மும்மடங்குத் தொகை வேண்டுமானாலும் எடுத்துக்கொள். இரக்கங் காண்பி. பத்திரத்தை கிழித்துப் போடுவேன்" என்று சொல்லியும், கேட்காமல் ஷைலக் "வேண்டாம், வேண்டாம், நான் சத்தியம் பண்ணியிருக்கின்றேன். ஒரு பவுண்ட் மாமிசமே தேவை.

"பத்திரம் பத்திரமாயிருக்கின்றது. வர்த்தகன் மார்பண்டை ஒரு பவுண்ட் மாமிசம் கடன் காரனுடையதே! ஷைலக்! இரக்கங் காட்ட மாட்டாயா?" என்று கெஞ்சினள் போர்ஷியா.

"மாட்டேன், சரியான நீதிபரரே! சட்டம் அறிந்தவரே! எனக்குரிய ஒரு பவுண்ட் மாமிசமே எனக்குத் தேவை. நீர் சொல்வதொன்றும் என் தீர்மானத்தை மாற்ற முடியாது' என்று ஷைலக் சாதித்தனன்.

அந்தோனியோவுக்கு காலதாமதம் கஷ்டமாயிருந்தது. தீர்ப் புரைக்கும்படி வேண்டினன்.

"சரி, உன் மார்பின் மாமிசம் கத்திக் கிரையாகும்படி ஆயத்தப்படு" என்றனள் போர்ஷியா.

"சிறந்த நீதிபரரே! உன்னத வாலிபரே! இதயத்துக் கருகில் என்று எழுதியிருக்கிறதல்லவா? "என்று வினவினன்.

"மாமிசத்தை எடை போட்டுப் பார்க்க திராசு ஆயத்தமா?" என்று கேட்க, "ஆயத்தம்" என்று கடன்காரன் கூறினான்.

"மரணம் நேராவண்ணம் காயங் கட்ட வைத்தியர் வந்து விட்டாரா?" என்று, போர்ஷியா கேட்க "பத்திரத்தில் அவ்வாறு எழுதப்படவில்லை" என்றனன்.

அதன்பின் அந்தோனியோ ஆயத்தமாயிருக்கும்படி போர்ஷியா கட்டளையிட அவனும் அவ்வாறே பஸானியோ விடம் விடை பெற்று துரிதமாய் மரிக்க விரும்பினன். ஆறாத்துயரத்துள் முழுகினவனாய் பஸானியோ அந்தோனியோவைப் பார்த்து "உன் உயிரைக் காக்கும் பொருட்டு எனக்குள்ள யாவையும், உயிரையும், உயிர்த்துணையான மனைவியையும் உவந்தளிப்பேன்" என, போர்ஷியா அவனைப் பார்த்து "இதைக் கேட்டால் உன் மனைவி உனக்கு எவ்வாறு நன்றிகூறுவள்?" என வினவினள். கிரேஷியானோவும் அவ்வாறே கூறினன். அதற்கு நெரிஸா "நல்ல வேளை உங்கள் மனைவிமார் இங்கில்லை. இருந்தாலோ பெருந் தொல்லை." என்றனள்.

ஷைலக் பொறுமையின்றி விரைவிற் தீர்ப்புக் கூறும்படி வேண்டினன்.

"வர்த்தகன் மாமிசத்தில் ஒரு பவுண்ட் உனதே. சபை சம்மதிக்கின்றது. சட்டம் அளிக்கின்றது" என்று போர்ஷியா தீர்ப்புக் கூற, "மா நீதியுள்ள நியாதிபதியே! "என சந்தோஷத்துடன் ஷைலக் வாழ்த்தினன்.

"அவன் மார்பி னண்டையுள்ள மாமிசத்தை அறுத்தெடுக்கலாம். சட்டம் இடந்தரும். சபையும் சம்மதிக்கும்." என்று போர்ஷியா சொல்ல,

"மா ஞான மிகு நீதிபரரே!" என ஷைலக் கூவி அந்தோனியோவை பார்த்து, "வா, மார்பி லிடந் தா" என்றழைத்தனன்.

"சற்று பொறு, காரியம் ஒன்றுண்டு. பத்திரத்தின்படி ஒரு சொட்டு இரத்தஞ் சிந்தாதபடி பத்திரமாயிரு. ஒரு பவுண்ட் மாமிசம் மாத்திரம் உன்னுடையது. ஒரு சொட்டு இரத்தம் சிந்தப்படுமாயின் உன் சொத்தனைத்தும் சர்க்காரைச் சேரும்." என்று போர்ஷியா கூறினள்.

"நேர்மையுள்ள நீதிபரரே!" என்று கிரேஷியானோ கூவினன்.

"அதுதான் சட்ட விதியோ?" என்று கேட்ட ஷைலக்கைப்பார்த்து, "அதுவே சட்ட விதி. அதுவே நீதி" என்று போர்ஷியா சொன்னதற்கு, ஷைலக் மும்மடங்குத் தொகையைக் கொடுத்தால் வர்த்தகனை விட்டுவிடுவதாகச் சொன்னான்.

சந்தோஷமாய் பஸானியோ பணத்தைக் கொடுக்க வந்தபோது போர்ஷியா, "பொறு, கடன்காரன் பூரண நியாயம் அடையட்டும். நீதியன்றி வேறொன்றும் அவனுக்கு இல்லை" என்றவுடன், கிரேஷியானோ மறுபடியும்

"நேர்மையான நீதிபரர்! ஞானமிகு நீதிபரர்!" எனப் புகழ்ந்தனன்.

"ஆகையால் உன் ஒரு பவுண்ட் மாமிசத்தை அறுத்தெடுக்க ஆயத்தப்படு. ஒரு துளி இரத்தமேனும் சிந்தலாகாது. ஒரு அணு மாமிசமேனும் ஏறத்தாழ அறுத்தெடுக்கலாகாது. ஏறத்தாழ எடுத்தால் உனக்கு மரணாக்கினை விதிக்கப்படும். உன் சொத்து அனைத்தும் சர்க்காருடையதாகும்." என்று போர்ஷியா முடிவு சொல்ல, கிரேஷியானோ "தானியேல், இதோ இரண்டாவது தானியேல்" என்று கதறினன்.

"என் ரூ. 18000 ஆவது எனக்குத் தரட்டும். நானும் போகட்டும்" என்று ஷைலக் கேட்டனன். பஸானியோ உடனே ஈந்தனன்.

"சபை நடுவே பணத்தைப்பெற மறுத்தவனுக்கு பத்திரத்திற் கண்டபடி பெற்றுக் கொள்ள உத்தரவளிக்கின்றோம்" என்றனள் போர்ஷியா.

"தானியேல்! இரண்டாவது தானியேல்!! அப்பதத்தை எனக்குப் படிப்பித்ததற்காக உனக்கு மிகவும் நன்றி கூறுகின்றேன் ஷைலக்" என கிரேஷியானோ கேலி செய்தனன்.

"என்னுடைய ரூ. 18000 எனக்குச் சேரலாகாதா?" என்று ஷைலக் கேட்க,

"பத்திரத்திலுனக்குரிய பங்கும் பாகமுமன்றி வேறொன்றும் உனைச் சேராது" என்று போர்ஷியா பதிலுரைத்தனள்.

"பின்னே பணமும் போகட்டும் நானும் போகட்டும்" என்றனன் ஷைலக்.

"சற்று பொறு. அந்நியனொருவன் தேசக்குடிகளிலொருவனின் உயிரை வாங்க எத்தனித்தால் தேச சட்டப்படி தன் சொத்தில் பாதியை தேசத்துக்கும் மீதியை யாரைக்



கொல்ல எத்தனித்தானோ அவனுக்கும் கொடுக்கவேண்டும். அதோடு தேசாதிபதிக்கு உன் உயிரை வாங்கவும் அதிகாரமுண்டு." என்று போர்ஷியா கூறினள்.

"எங்கள் சிந்தையிலுள்ள சிறந்த பேதத்தைக் காட்டும்படி உனக்கு மன்னிப் பீந்து நீ இரக்குமுன் உயிர் பிச்சை ஈகின்றோம். சொத்தில் பாதி அந்தோனியோவுக்கும் மீதி சர்க்காருக்கும் சேரும்" என்று நீதிபரர் கூறினர்.

அதற்கு ஷைலக் "என் சொத்துப் போனால் செத்துப்போவேன். அதைவிட என் உயிரை வாங்குவது உத்தமம்" என்றனன்.

"அந்தோனியோ! அவனுக்கு என்ன இரக்கங்காட்ட எண்ணுகின்றாய்?" என்று போர்ஷியா வினவ,

"தான் மரிக்கும் காலத்தில் தன் சொத்தனைத்தையும் தன் மகளுக்கும் மருமகனுக்கும் சேரும்படி இப்பொழுதே எழுதிக் கொடுப்பானானால் நியாய சபையார் அவனுக்கு மன்னிப் பீயும்படி வேண்டுகின்றேன்" என்று அந்தோனியோ கூறினன். ஷைலக் இதற்குச் சம்மதித்தனன்.

யாவரும் போனபின் போர்ஷியாவிடம் சென்று பஸானியோ தனக்குதவி செய்ததற்கு நன்றியாகப் பணங்கொடுத்தனன். அவள் அதை மறுத்து ஞாபகக் குறியாக வைத்துக் கொள்ள அவன் கையிலுள்ள மோதிரத்தைக் கேட்டனள்.

"ஐயா, இது என் மனையா ளீந்த கணையாழி. அந்த யான் எவர்க்கும் ஈவதில்லையென்றும், இழப்பதில்லையென்றும், விலைக்கு விற்பதில்லையென்றும் சத்தியம் வாங்கியிருக்கின்றனள்." என்று பஸானியோ சொன்னதற்கு,

போர்ஷியா, "வெகுமதி கொடுக்க இஷ்டமில்லாத வெகுபேர் கொடுக்கும் போக்கு சாக்கு இது. யான் இயற்றிய நன்மைக்கு ஈடாக இதை ஈந்தேனென்றால் நற்புத்தியுடைய அகமுடையாள் அகமகிழ்வாள்" எனக்கூறி விடைபெற்றனள்.

அந்தோனியோ வேண்டுகோளுக் கிணங்கி கிரேஷியானோ மூலமாய்க் கணையாழியை பஸானியோ போர்ஷியாவுக் கனுப்பினன். நெரிஸாவும் தன் கணவனது கணையாழியை பெற்றனள்.


தங்கள் கணவர் வீட்டுக்கு வந்தபோது மனைவிமார் இருவரும் கணையாழியைக்கேட்டு சந்தேகங்கொண்டது போல் பாவித்து சண்டையிட்டனர். அந்தோனியோ தன்னையே நொந்து கொண்டனன். மன்னிப் பீயும்படி வேண்டினன். அவர்கள் உண்மைக்குப் பங்கம் வாராமல் பாதுகாப்பதாக வாக்குப்பண்ணினன். உடனே தங்கள் கணையாழிகளை அவன் மூலமாய் கணவருக்கு ஈந்தனர். அதே கணையாழிகளைக் கண்டு அதிசயங்கொண்டு அந்தோனியாவின் உயிரைக் காத்த நீதிபரர் இன்னார் என்பதை எளிதில் தெரிந்து கொண்டனர்.

அன்றிரவு அந்தோனியோவுக்கு நற்செய்தி வந்தது. இழந்துபோனதாக எண்ணிய மூன்று கப்பல்கள் கரை சேர்ந்திருப்பதாகவும் திரண்ட திரவியம் அவனுடைய தாயிற்று என்றும் அறிந்து அனைவரும் அகமகிழ்ந்தனர்.

# வசதி எனும் வாயில்

Elizabeth Moreland.

“ தட்டுங்கள், உங்களுக்குத் திறக்கப்படும்” என இயேசு மொழிந்திருக்கின்றனர். அவர் ஜெபம் பண்ணுவதைப் பற்றிப் பேசினர். வேறு வகைகளிலும் இதன் உண்மை விளங்கும். பகற் கனவு காண்பதைப்பற்றி அறிவோம். நாம் பெரிய காரியங்களைச் செய்வதாக மனோ பாவனையிற் காண்கின்றோம். ஒரு நற்காலம் பிற்காலத்தி லிருப்பதாகக் கண்டு இக்காலத்துக்கு வர இஷ்டமில்லாதிருக்கின்றோம். இரு காலத்துக்கும் உள்ள வேற்றுமை ஏராளம்.




அடையாத வாயில்.



பகற் கனவு கேடானதல்ல. இவ்வகை மனோபாவனைக் கனவு காணாதார் எவரும் எதையும் செய்து முடிக்க இயலார். சித்திரக்காரன் மனதில் முன் தோன்றுப் படமொன்றும் இன்னும் தோன்றவில்லை. பாடகனை முன் பரவசப்படுத்தாத கவி யொன்றும் இன்னும் எழுதப்படவில்லை. கனவு காண ஆசிக்கின்றோம் அதை நிறைவேற்ற முயற்சி செய்கிறதில்லை. இதுவே நமது குறை. பெரிய வீட்டின் வாசலண்டையிருக்கும் யாசகரைப்போ லிருக்கின்றோம். கதவு திறக்கும்போது உள்ளிருக்கும் காட்சிகளைக் காண்கிறோம். அநுபவிக்க ஆசிக்கின்றோம். ஆனால் கதவைத்தட்டி உட்பிரவேசிக்கப் பயப்படுகின்றோம். வசதி எனும் வாயிலண்டை ஆயிரக்கணக்கானோர் ஆசையோடு காத்துக்கொண்டிருக்கின்றனர். ஆயினும் கதவைத்தட்டி உட்பிரவேசிக்கிறதில்லை.

மனோபாவனையில் மாத்திரம் திறந்து மூடும் இக்கதவை எவ்வாறு தட்டி உட்பிரவேசிக்கலாம்?

முதல் வழி நமது பகற் கனவுகளனைத்தும் நிறைவேறும் என விசுவாசிக்கவேண்டும். உலகுக்கு உழைத்து உதவவேண்டு மெனு மாசை கடவு ளீந்தது. சுய நயத்தோடு உயர் பதவி தேடுவது தவறு. பிறர் நயத்தை நாடி பலர் பயன் பெறும் பொருட்டு உயர் பதவி யடைவது தவறன்று. கடவுள் நமக்குரிய திறவு கோல்களுடன் நம்மை இங்கு வைத்திருக்கின்றார். அவை எக்கதவுகளை திறக்கும் எனத் தேடித் திறந்து கிடைக்கும் சமயங்களை ஆதாயப்படுத்தி வசதி போல் உழைத்தால் பகற் கனவிற் கண்ட பரிபூரண ஜீவியம் இன்னது என்றுணர்ந்துகொள்வோம்.

வசதி எனும் வாயிலைக் கண்டு பிடித்துத் திறக்க விடா முயற்சி அவசியம். “ அதைப் பற்றி கவையில்லை” “ அதனால் என்ன பயன் ” என்று பேசுவதிற் பிரயோஜனமில்லை. அசுத்தத்திலும் புழுதியிலும் புரளும் பிச்சைக்காரர் உட்பிரவேசித்தால் பிரயோஜனமென்ன? உட்பிரவேசிக்க ஆயத்தம் அவசியம்.

வெண்ணெயை அழகாய் உருப்படுத்தப் படித்த பையன் பின்னால் பெரிய சித்திரக்காரனானன். கிடைத்த தாலந்தை சிறு ஊழியத்திலும் உபயோகப்படுத்தி வசதி எனும் வாயிலைத் திறந்ததினால் பெரியவனானன். ஆபிரகாம் லின்கனும் தன்னை அவ்வாறே ஆயத்தப்படுத்திக் கொண்டிருந்ததினால் வசதி வந்தபோது பெரிய காரியங்களைச் செய்தனர். கார்வர் பண்டிதரும் அவ்வாறே உயர் பதவி அடைந்தனர்.

இதற்கு கடவுளின் சகாயம் தேவை. நமக்கு அவ ரீந்திருக்கும் திறவு கோல்கள் நமது திறமைகளே. பெரியோரும் நல்லோருமாகவேண்டும் என்ற எண்ணமே தேவ ஈவு. உனக்கும் எனக்கும் அவர் ஒரு நோக்கம் வைத்திருக்கின்றார். சங். 47: 4. நாம் விண்ணப்பம் பண்ணினால் அவர் “ நடத்தும் பாதையெல்லாம் விண் எட்டும் ஏணிபோல் விளங்குமாம்.”

---

தமிழ்நாடு ஆவணக் காப்பக

# வர்த்தமானம்

## ஸ்பெயின்.

ஸ்பெயின் தேசத்தின் நிலைமை இன்னும் முடிவுக்கு வரவில்லை. அரசனிடம் சேனாதிபதி உரைத்தபடி இரு வாரங்களுக்குள் முடிவு பெறவேண்டிய உள்நாட்டுக் கலகம் ஓராண்டாகியும் ஒழிந்தபாடில்லை. சர்க்காரின் விரோதிகளுக்கு நாளொன்றுக்கு 5,00,000 டாலர் செலவாகின்றது. அரசனை பழைய நிலைமைக் குயர்த்தும்படி ராஜ குடும்பத்தார் 10,00,000 டாலர் கொடுத்திருக்கின்றனர். செல்வ மிகுந்த கப்பல் வியாபாரி ஒருவன் ஒன்பது மாதத்திற்குள் 7 கோடி டாலர் கொடுத்திருந்தனன். இன்னும் ஈந்துகொண்டே யிருக்கின்றனன். ஒன்பது மாதத்திற்குள் ராஜாதிகார விரோதிகளுக்கு 14 கோடி டாலர் செலவாகி யிருந்தது.

இங்கிலாந்து, ஐக்கிய மாகாணம், தென் அமெரிக்கா முதலிய இடங்களிலிருந்து அநுதாபமுள்ளோர் சர்க்காருக்கு 50 லக்ஷம் டாலர் அனுப்பி யிருக்கின்றனர். சேனாதிபதி சுரங்க விஷயத்தில் செய்த நன்மைக்கு நன்றி மறவாமல் இத்தாலியா, ஜெர்மனி எனும் தேசத்தார் 5½ கோடி டாலர் கொடுத்துதவினர்.

மூர், இத்தாலியா, ஜெர்மனியிலிருந்த ஒரு லக்ஷம் சுயேச்சை வீரர் துரோகிகளோடு சேர்ந்தும் பிரயோஜனமாயில்லை. அவர்கள் அட்டகாசம் உலகத்தையே அசைக்கத்தக்கதான படியால் சர்க்கார் சார்பாகவே யாவரும் அநுதாபங்காட்டவேண்டியதாயிற்று. ஜெர்மனி ஆகாய விமானப் படைக்கும் இத்தாலியப் போர்வீரருக்கும் திறமை போதாது. குவாதலஜாரா யுத்தத்தில் இத்தாலிய வீரர் புறங்காட்டி யோடினதுமன்றி கோடிக்கணக்கான வெடி மருந்துகளையுந் தோட்டாக்களையும் விட்டு விட்டுப் போயினர். வந்த நோக்க மறியாத வாலிபராயிருந்தபடியால் ஓடினரென்பாருளர். முசலோனியின் பணத்துக்கு ஆசைப்பட்டும் அவனதிகாரத்திற் கடங்கியும் முன் வந்தன ரென்பாரு முளர்.

சர்க்கார் படை பயிற்சி பெற்றதாயிற்று. திறமையுமதிகம். 4,00,000 போர் வீரர் உளர்.

ருஷியாவின் ஆகாயப்படை சர்க்காருக்குதவியாக சிறந்த வேலை செய்கின்றது.

ஐரோப்பாக்கண்டமே யுத்தத்தில் மூழ்காதபடி தடுக்க ஸ்பெய்ன் யுத்தம் ஓர் ஏதுவாயிற்று. பெருந்தேசங்கள் தங்கள் சேனைகளின் திறமைக் குறைவைக் கண்டு கொண்டன. மற்ற தேசங்களுக்கு இத்தேசங்களைப் பற்றிய பயமும் போயிற்று. ருஷியாவின் யுத்த சக்திகள் தெளிவாகிறபடியால் ஜெர்மனியின் துணிகரம் மட்டுப்படும். முசலோனியின் வீரர் முதுகு காட்டினபடியாலும், ஜெர்மனிப் படையுடன் கலந்தே யுத்தஞ்செய்ய வைப்பதாலும் முசலோனி இனி முகங்காட்ட முடியாதபடியாயிற்று. பில்போவா யுத்தத்தில் இத்தாலியர் ஒரு கிராமத்தைப் பிடிக்க யத்தனித்தபோது அவ்வூரிலுள்ள மீன் பிடிக்கிறவர்கள் தங்கள் மனைவியாருடன் வந்து எதிர்த்துப் போராடினர். பெண்களால் அடிபட்டு மிதிபட்டு ஜன்னல்களிலிருந்து தள்ளப்பட்டு மானங்கெட்டு இத்தாலியா உயிர் தப்ப ஓடவேண்டியதாயிற்று. ஆகையால் முசலோனி இனி முன் வந்து முகங்காட்ட முடியுமா?



## ஐக்கிய மாகாணம்

அமெரிக்க சர்க்கார் யுத்த கால நடு நிலைச் சட்டம் ஒன்று ஏற்படுத்தி யிருக்கின்றனர். அது இரு பிரிவுள்ளது ஒன்று திட்டமாய் செய்யப்படவேண்டிய சட்டம். மற்றொன்று பிரஜாதிபதி இஷ்டமானால் பின்பற்றும்படி ஏற்பட்ட ஓர் ஆலோசனை சட்டம்.

முதலாவது திட்டமாய்ச் செய்யப்படவேண்டியது தடுக்கும் சட்டம். அதாவது எந்தவித யுத்தாயுதமோ, யுத்த சம்பந்தமான வெடி மருந்து முதலியனவோ யுத்தத்தில் பிரவேசித்திருக்கும் எத்தேசத்திற்கும் எவரும் ஏற்றுமதி செய்யலாகாது. யுத்தத்தில் சம்பந்தப்பட்ட எத்தேசத்தின் கப்பலாயினும் அமெரிக்கர் அதில் பிரயாணம் செய்யலாகாது. அமெரிக்கக் கப்பல்கள் யுத்த சம்பந்தமான எக்காரியமும் ஏற்றிக்கொண்டு போகலாகாது.

இரண்டாவது பிரஜாதிபதி இஷ்டமானால் எந்தவித வியாபாரத்தையும், யுத்த தேசங்களுக்குக் கடன் கொடுத்துதவுவதையும், யுத்த தேசங்களுக்கு பணஞ் சேர்த்தனுப்புவதையும் தடுக்கலாம். பிரஜாதிபதியின் அனுமதியின்பேரில் வைத்திய சகாயம், காயப்பட்டோருக்கு ஆகாரம், ஆடை, முதலியன அனுப்பலாம். "கையிற் காசு வாயிற் றோசை" என்றாற்போல் யுத்த தேச வியாபாரக் கப்பல்கள் பணமின்றி பொருள் வாங்க விடக்கூடாது என்ற பிரமாணத்தை பிரஜாதிபதி வற்புறுத்தலாம். அமெரிக்கா கப்பல்களை பிறர் உபயோகிக்கக்கூடாது. வியாபாரிகள் யுத்தாயுதங்களோடு வந்தால் துறைமுகப் பட்டணங்களில் தங்கக்கூடாது.

வருகிற இரண்டு வருஷங்களில் அமெரிக்கா புறநாட்டு யுத்தத்தில் தலையிடாதிருக்கும் உத்தரவாதம் பிரஜாதிபதியைப் பொறுத்தது.

---

# சுகாதாரம்

## பப்பாளிப் பழம்.

இந்தியர் அருந்தும் ஆகாரப் பொருட்களில் ஒரு பெருங் குறையுண்டு. காயுங் கனியும் அதிகம் சேர்க்கிறதில்லை. காய்கள் விலை சகாயமாயும் எளிதிலுங்கிடைக்கும். கனிகளோ விலை யதிகம். ஏழைகளுக்குக் கிடைப்பது கஷ்டம்.

பப்பாளிச் செடி வைத்து வளர்த்தால் இக்குறை எளிதில் நீங்கும். அநேக இந்தியருக்கு பப்பாளிப்பழத்தின் ருசி பிடிக்கிறதில்லை. உப்பாயினும் ஆரஞ்சு எலுமிச்சை முதலிய பழங்களின் சாறாயினுஞ் சேர்த்துச் சாப்பிட்டால் அதிக இன்பமாயிருக்கும்.

விதைகளைக் கொண்டு பப்பாளிச் செடியை முளைக்க வைக்கலாம். ஓராண்டு கழியுமுன் அநேக கனிகளை அநுபவிக்கலாம். சிறு இடத்திற்குள்ளாக சொற்ப கவனம் செலுத்தி மிகுந்த பலனை யடையலாம். சிறு மரம் ஏற தாழ 10 அடி உயரம். தண்டு பஞ்சுபோன்றது. கிளைகள் கிடையா. உச்சியில் மகுடம் அமைத்தாற்போல் இலைகள் உள.

ஒரே செடியில் வர்க்க விருத்தி யுண்டாகும். எனினும் ஆண் பூவும் பெண் பூவும், வெவ்வேறு செடிகளிலும் காணப்படும். ஆண் செடியில் கனிகள் உண்டானால் சிறிதாயிருக்கும் அதனால் பிரயோஜனமில்லை. நீளமான கவர் விட்டு அநேக புஷ்பங்கள் உடையன ஆண் மரங்கள். சாதாரணமாய் சில மரங்கள் தவிர ஆண் மரங்களை வெட்டிப் போடுவார்கள்.

பெண் செடியில் ஒவ்வொரு இலையின் அடியிலும் பூக்களுள. ஒன்றோடொன்று நெருக்கிக்கொண்டு கனிகள் காய்த்துத் தொங்கும்.

வயிற்றுக் கடுப்புக்கும், அஜீரணத்துக்கும் இப்பழம் ஏற்ற மருந்து. பப்பாளிக் குறைவிடமான மெக்ஸிக்கோவில் எந்த வயிற்றுக் கோளாறுக்கும் இப்பழத்தை மருந்தாக உபயோகிப்பார்கள். முட்டை மாமிசம் முதலிய சத்துப் பொருட்களைக் கரைக்க வல்ல பெப்ஸின் (Pepsin), டிரைப்ஸின் (Trypsin) முதலிய ஜீரணிக்கும் மருந்துகளுக்கொப்பான “பாப்பெய்ன்” (Papain) எனும் வஸ்து இப்பழ ரசத்தில் உண்டு.




ஜீரணக் கோளாறுகளுக்கேற்ற மருந்துப் பொருளாகிய “பாப்பெய்ன்” எடுக்கும்படி ஏராளமான பப்பாளிச் செடிகளை வைத்து வளர்க்கின்றனர்.

முற்றின காய்களில் கிடைக்கும் பால்போன்ற வஸ்துவைக் காயவைத்து “பாப் பெய்ன்” எடுக்கின்றனர். கூரிய மரக் கத்தியினால் காய்களில் தொலியைக் காயப்படுத்திப் பால் எடுக்கின்றனர். மறுபடியும் நான்கு அல்லது ஐந்து நாட்களுக்குப் பின் அதே காயைக் குத்திப் பால் எடுக்கலாம்.

இப்பாலைக் கண்ணாடிப் பாத்திரத்தில் ஊற்றி வெயிலிலாவது அடுப்பிலாவது காயவைக்கவேண்டும்.

வெண்ணெயில் கிடைக்கின்ற A எனும் ஜீவசத்தில் பாதியும் B.C.D. முதலிய ஜீவ சத்தும் பப்பாளிப் பழத்தில் கிடைக்கின்றனவென்று கெல்லக் பண்டிதர் (Dr. Kellogg) கூறுகின்றனர்.

A எனும் ஜீவசத்துள்ள பால், வெண்ணெய், கொழுப்பு, மீன் எண்ணெய், கல்லீரல் முதலியவை விலையுயர்ந்தவை. கிராமத்தாருக்கும் ஏழைகளுக்கும இவை எளிதில் அகப்படா. ஆகையால் கிராமத்தில் பப்பாளி வளர்ப்பது அவர்களுக்குப் பிரயோஜனத்தைத் தரும்.


A எனும் ஜீவசத்து நம் ஆகாரப் பொருளோடு சேராவிட்டால், இரவில் பார்வையின்மை, கண் நோய், கட்டிகள் முதலியவை யுண்டாவதற்குக் காரணமாகும். அதோடு சுவாசாசயங் கெட்டுக் காய்ச்ச லுண்டாகும். வளர்ச்சி குன்றும். வியாதிக் கிருமிகள் வேலை செய்ய தேகம் இடந்தரும். காச நோயை விளைவிக்கும். கிராமத்திற் காணும் கண் நோய்க்கும் இதுவே காரணம்.

இந்தியர் இதை ஜீரணத்துக்குதவியாக உபயோகிக்காவிட்டாலும் கிராமங்களில் வேகாத மாமிசத்தை மெதுவாக்க உபயோகிக்கின்றனர். காயை எடுத்துத் தொலியைச் சீவி விட்டு, துண்டித்துக் கறியோடு வேகவைத்தால் சீக்கிரம் வேகும். பப்பாளிக் காயும் பூசணிக்காயின் சுவையுடையதாகும்

A எனும் ஜீவசத்தின் உற்பத்தி ஸ்தானமாயிருப்பதாலும், வயிற்றுக் கடுப்புக்கும் அஜீரணத்திற்கும் மருந்தாக இருப்பதாலும், பப்பாளிப் பழத்தை உபயோகிப்பது அவசியம். சொற்ப இடமிருந்தாலும் இச்செடியை எளிதில் வைத்து வளர்க்கலாம் சீக்கிரம் கனி கொடுக்க ஆரம்பித்துக் கனி கொடுத்துக்கொண்டே யிருக்கும்.



## பிள்ளைகளுக் கேற்ற படங்கள்





கிராமக் குடிசை




சாரண வீரர்

# பூச்சிகள்



## கரப்பான் பூச்சி.

கோடானுகோடி யுகங்களாய் இப்பூச்சி இவ்வுலகி லெங்கு மிருந்து வருகின்றது. இப்பூச்சிகளை இரவில் எங்குங் காணலாம். ஒளியைக் கண்டவுடன் ஓடி ஒளியும்.

இதற்கு இரு ஜோடி இறகுகளிருக்கின்றன. மேல் ஜோடி கடினமுள்ளது. பளபளப்பானது. கீழ் ஜோடி மிருதுவாயும் அடுகடுக்காயுமிருக்கும். தண்ணீர் பட்டுக் கெட்டுப் போகாதபடி முட்டையிட்டு மூடி வைக்கும். கால்களில் நீண்ட முட்களுள. தன் நீண்ட உணர்ச்சிக் கருவிகளை தன் வாயினால் சுத்தம் செய்யும். தன் உறுப்புகளைத் தானே சுத்தஞ் செய்யும். சுத்தமுள்ள ஜெந்துவாயினும் நாம் அதை விரும்புகிறதில்லை. வேகமாய் ஓடி ஒளிந்து கொள்ளக்கூடியது. உணர்ச்சிக் கருவிகள் எப்பக்கமும் திரும்பக்கூடியது. அதினுடைய வாய் மேலுங் கீழும் அசையாமல் பக்கங்களி லசையும். கண்கள் கரியவை. நாம் காணக் கூடாதபடி அமைந்திருக்கின்றன. கரப்பான் பூச்சி மோசமானது. அழிக்கும்; ஆகாரத்தை அசுசிப்படுத்தும்; ஆடை, புஸ்தகம், தோல் முதலியவற்றைத் தின்னும். சோடியம் புளுவோரைட் (Sodiume Fluoride) என்னும் வெள்ளைத்தூள் மருந்து இப்பூச்சிகளை கொல்லக் கூடியது. மனிதருக்கும் மிருகத்துக்கும் இம்மருந்தினால் மோசமில்லை.

## பேன்.

மனிதருக்கும் மிருகங்களுக்கும் துயருறுத்தும் பேன் ஒரு சிறகில்லாப் பிராணி. இதற்கு இரத்தம் உறிஞ்சும் வாயுறுப்புகளுள. பேன் மூவகைப்படும்—அதிலொன்று தலையில் வாழும் பேன். இப்பேனைப்பற்றி இங்கு பார்ப்போம்.

பேன் முடியோடு முடியாய் ஒட்டிக் கொள்ளும். தட்டிவிட முடியாது. தலையில் வாழும் பேன் இரண்டு மாதத்திற்குமே லுயிரோ டிருக்காது. முட்டைப் பருவத்தில் ஏழு நாளும் புழுப் பருவத்தில் நான்கு நாளுமாகக் கழித்த பிறகு வேறு ஏழு நாளுக்குள் வேறு மூன்று பருவங் கடந்து பெண் பேன் பதினெட்டாம் நாளில் முட்டையிட ஆரம்பிக்கும். நாளொன்றுக்கு ஒன்பது முட்டை வீதம் தான் உயிரோடிருக்கும் முப்பது அல்லது நாற்பது நாட்களாக முட்டை யிட்டுக்கொண்டே யிருக்கும். ஒரு பெண் பேன் தன் ஜீவிய காலத்திற்குள் ஆயிரக் கணக்காய்ப் பலுகிப் பெருகுகின்றது. ஒரு பெண் பேன் 'ஈர்" என்று சொலலுகிற முட்டைகளை முடியின் மேலிட்டு ஒருவகை பசைபோன்ற திரவத்தின் மூலமாய் முடியோடு ஒட்டி வைத்து விடுகின்றது.



தலையில் பேன் இரத்தம் உறிஞ்சும்போது தன் உமிழ் நீரை இரத்தத்தோடு கலக்கச் செய்கின்றது. இதன் மூலமாய் சில வியாதிக் கிருமிகள் இரத்தத்தோடு கலந்து அநேக வியாதிகளைப் பிறப்பிக்கின்றன.

தலையிற் பேனைப் பேணி வளர்ப்பது ஒரு அசுத்த வழக்கம். சுகக்கேடான காரியம். விஷக் காய்ச்சல்களுக்குக் காரணம். தோலைப் பற்றின வியாதிகளுக்கு ஆதாரம். உறக்கமின்மைக்கும் பலவீனத்திற்கும் வேறு காரணம் வேண்டாம். பேன் ஒன்றே போதும்.

ஈரும் பேனும் எளிமைக் கடையாளம். சுகக்கேட்டுக்குக் காரணம். அசுத்தமானவர்களே பேனைப் பேணி வளர்ப்பர். பேன் பிடித்தவர்கள் அசுத்தப் பேய் பிடித்தவர்கள். தரித்திரம் தானே வரும்.

சுத்தம் சுகம் கொடுக்கும் என்பதை யுணர்ந்தோர் தலையில் பேன் வளர்க்கமாட்டார்கள். பேனை நீக்க இலகுவான அதிக செலவில்லா வழி யென்னவென்றால் மண்ணெண்ணெயையுங் காடியையும் சம பங்காகச் கலந்து தலையில் தேய்த்து குளிக்கவேண்டும். மண்ணெண்ணெய் தான் பேனையும் ஈரையும் கொல்ல வல்லது. காடியோ முட்டையை முடியோடு ஒட்ட வைத்திருக்கும் பசைபோன்ற வஸ்துவைக் கரைக்க வல்லது.

இவ்விரண்டையும் கலந்து தலையில் தடவி அநேக மணி நேரமாக தலையைத் துவாலையினால் கட்டிவைக்கவேண்டும். பிறகு பேன் சீப்பினால் தலை வாரிப் பேனையும் ஈரையும் சீவியெடுக்கவேண்டும். பிற்பாடு வெந்நீரையும் சோப்பையும் உபயோகித்துத் தலை குளிக்க வேண்டும்.

மண்ணெண்ணெயையும் தேங்காய் எண்ணெயையும் சம பங்காகக் கலந்து தேய்க்கலாம். அப்படியானால் இரவில் தேய்த்துத் தலையைத் துணியாற் சுற்றி வைத்து அதிகாலையில் காடி தேய்த்துக் குளிக்கலாம். தொடர்ச்சியாய் மூன்று இரவு இவ்வாறு செய்யவேண்டும். மண்ணெண்ணெய் உபயோகிக்கும்போது நெருப்பைப்பற்றிக் கவலையாயிருக்கவேண்டும்.

மேற்கத்தியர் பேனையும் பேன் பிடித்தவர்களையும் வெறுக்கின்றனர். பேனைப்பற்றிப் பேசுவதே அவர்களுக்குக் கேவலம். பள்ளிக்கூடத்தில் படிக்கும் பிள்ளைக்குப் பேனிருக்குமானால், சோதித்துப் பார்த்துக் கண்டு பிடிக்கும்போது, பெற்றோருக்கு எழுதும் கடிதத்தில் பேன் என்ற பதம் உபயோகிக்காமல் கவலையாய் எழுதுவார்கள். லத்தின் பதத்தை உபயோகித்து மரியாதையாய் எழுதுவார்கள்.

இந்தியாவிலும் இப்படிப்பட்ட பொதுஜன அபிப்பிராயம் உண்டாகும் வரை இப்பேனை அகற்றுவது அதிகக் கஷ்டம். பேனைக் கண்டால் பேயைக் கண்டாற்போல் பயப்படும் காலம் வரவேண்டும்.

# மௌன மணி நேரம்

## தப்பிதத்தை ஒப்புக்கொள்ளும் தைரியம்.

தப்பிதத்தைத் தப்பித மென்று ஒப்புக்கொள்ள தைரியம் அவசியம். நம்மை நாமே தாழ்த்தவேண்டிய திருப்பதால் தயங்குகின்றோம், தப்புச் செய்தோ மென்று ஒப்புக்கொள்ளுந்

தைரியத்தைவிட தைரியம் வேறுளதோ? எழுதும்போது ஏதாகிலும் தப்பிதம் நேர்ந்தால் பக்கத்துப் பையன் தன் கையைத் தட்டி விட்டு மையைக் கொட்டி விட்டான் என்று ஒட்டியடிக்கிற உண்மையற்ற பையன்களில்லையோ? பொய் சொல்லவேண்டுமென்று சொல்லுகிறதில்லை. தெரியாமல் வாயில் வந்துவிடும். எதற்கும் "இல்லை" என்றே ஆரம்பிக்கும் வழக்கம் ஆட்களுக்கு இல்லையோ? பக்கத்துப் பையனைக் கேட்டால் அவனும் இல்லை என்றே சொல்லுவான். ஆசிரியர் அவர்களில் குற்றமுள்ளவனைக் கண்டுபிடிக்கக் கூடுமோ? அதைவிட நான் தெரியாமல் வழக்கம்போல் சொல்லிவிட்டேன் என்று பொய் சொன்னவன் ஒப்புக்கொள்வானானால் அவன் தைரியசாலி. 'ஒரு பொய் ஏராளமான பொய்யைப் பிறப்பிக்கும்' என்பது மெய்.

யெப்தாவின் கதையில், தான் அம்மோன் புத்திரரோடு செய்யும் யுத்தத்தில் சித்தி பெற்றால் திரும்புகாலில் வீட்டிலிருந்து தனக்கெதிர் கொண்டு வருவது எதுவோ அது கர்த்தருக்குரியதாகும், அதை சர்வாங்க தகன பலியாகச் செலுத்துவேன் என்று பைத்தியகாரத்தனமாய்ப் பொருத்தனை பண்ணினான். யுத்தத்தில் சித்திபெற்றான். தன் வீட்டிற்கு வருகிற போது அவன் குமாரத்தி அவனுக்கு எதிர்கொண்டு வந்தாள். அவளைப் பலியிடவேண்டியதாயிற்று. அது தப்பிதம் என்று அவனுக்குத் தெரியும். அருமையான ஆள் விசேஷமா? அக்கிரமமான பொருத்தனை விசேஷமா? ஆளை அதம் பண்ணுவதைவிட அப்பொருத்தனையை அவமாக்குவதே உத்தமம்; அதுவே வீரச்செயல். வாக்கு மாறா தன்மையாயிருத்த லவசியம். ஆனாலும் தப்பிதமான வாக்கை நிறைவேற்றுவது அவமானம். "நான் செய்தது தப்பிதம்" என்று ஒப்புக்கொள்ளும் பையனே தைரியசாலி.

"குணலட்சணத் தீர்மானம்" என்று ஜான் பாஸ்டர் எழுதிய வியாசம் சிறந்தது. தன் தகப்பன் சொத்தையெல்லாம் அழித்ததின் பலனைக் கடனுக்காக தன் தகப்பன் வீட்டை விற்கும்போது வெட்கத்தோடே உட்கார்ந்து கொண்டிருந்த பையனைப்பற்றிய கதை—அச்சமயம் ஒரு புது தீர்மானம் பண்ணினான். தன்னிடமிருந்த மீதிப் பணத்தை எண்ணிப் பார்த்தான். ஒரு விளக்குமாறு வாங்கப் பணமிருந்தது. அதைக்கொண்டு ஒரு விளக்குமாறு வாங்கி ஆட்கள் கூடுமிடத்தில் தெருவைப் பெருக்கிச் சுத்தம் செய்து பணம் சம்பாதித்தான். சேற்றில் மிதித்து நடக்காதபடி முச்சந்தியில் மணல் வாரிப்போட்டுப் பணம் சம்பாதித்தான். கஷ்டப்பட்டு வேலை செய்து முன்னுக்கு வந்த தன் தகப்பன் விற்ற வீட்டைத் தனக்கே சொந்தமாகத் திருப்பத்தக்க நிலைமைக்கு வந்தான். உடன் சிநேகிதர் இவன் செய்த வேலையை பார்த்தபோது சிரித்தனர். அவர்கள் மத்தியில் இவன் வேலை செய்து சம்பாதித்தது தைரியமான காரியமே!

இளைய குமாரனைப்பற்றி இயேசு ஒரு கதை சொன்னார். தனக்குப் பின் தனக்குச் சேரவேண்டிய பாகத்தைப் பிரித்துத் தூர தேசங் கொண்டு போய் துஷ்டர் சகவாசஞ்செய்து நாசஞ் செய்தான். அவன் தாழ்த்தப்பட்டுப் பசியுற்றபோதோ தகப்பன் வீட்டிற்குத் திரும்பித் தான் செய்தது தப்பு என்று ஒப்புக்கொண்டான். தூரத்திலே மகனைக் கண்ட தகப்பன் ஓடி அவனை ஏற்றுக்கொண்டான். பெரிய விருந்து வைத்து ஆடல் பாடல்களுடன் வரவேற்றான்.

மூத்த குமாரன் இதைக் கண்டு பொறாமையுற்றுக் கோபங்கொண்டான். தன் தகப்பன் எவ்வளவாய் வேண்டிக் கொண்டபோதிலும் அவன் முகம் வேறுபட்டது. இது தப்பிதம். இதைத் தப்பு என்று ஒப்புக்கொள்ள அவனுக்குத் தைரியம் இல்லை.



தப்பிதத்தில் இன்னுமிருந்தோமானால் இப்பொழுதே அதை விட்டுவிடவேண்டும். தப்பிதஞ் செய்வதில் வெகு தூரம் சென்றால் திரும்பும்போது வெகு நேரஞ் செல்லும்; கஷ்டம் அதிகம். இயேசுவின் போதனையின்படி நடந்தால் நல்வழிப்படுவோம். அது ஒடுக்கமான பாதை. அது கடமையின் பாதை. அது நேர் பாதை. சீரற்ற வழியில் செல்வோரைச் சீர்பாதைக்கு நேராகத் திரும்புவோமாக.

வேளா வேளைகளில் இயற்கையின் ஈவு நம்முடையதாகும். விரலை நெருப்பில் வேக வைத்தால் எத்தனை ஜெபம் பண்ணினாலும் வீண். கடந்த காலத்தில் நடந்தவை நடந்தவையே! எக்கண்ணீர் சிந்தினும் இனித் திரும்ப வரா. நறுமணம் வீசும் நல் மலரைப்போல இளமையிற்றானே இயேசுவின் பொற் பிரமாணத்தை நற் பிரமாணமாக எண்ணி அதைப்பின்பற்றி நம் ஜீவியத்தைச் சீர்ப்படுத்துவோமாக!

---

## கடிதம்

தாவர லோகம்,
1—6—1937.

என் இன்ப இளைஞர்காள்!

என்னை உங்களன்பு! எப்படிப் பதில் செய்வேன்? உங்கள் ஊரில் மழை தண்ணீர் உண்டா? இங்கு வெயிலதிகம். இக்காலத்தில் எனக்குத் தண்ணீர் ஊற்றச் சிநேகிதரில்லை. எனினும் யானுலகை உவப்பாக்க உழைக்கின்றேன். எனக்குதவ ஆளில்லாவிடினும் என்னைப் பின்பற்றி உலகுக்குதவ உங்களைக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

உருவத்தில் சிறியோன் யான். ஆயினும் அடுத்த ஆகாயத்தைக் குளிரச் செய்வேன். ஆகாயத்தைக் குளிரச் செய்வதால் அதனருகேயுள்ள ஆட்களுக்கும் வெயிலின் அகோரத்தைத் தணிக்கின்றேன். இந்த நன்மையை அடையுமட்டும் என்னை வந்தடைபவர் அனந்தம் பேர். பாதிரிமார் பங்களாக்கள் காலியாயிருக்கும் இக்காலத்தில் தனிமையாயிருக்கிறேன் என்று எண்ணுதீர்கள். என்னைத் தேடி ஏராளமான பேர் பாதிரிமார் பங்களா தாவரத்திற்கு வந்து சேருகின்றனர். இப்போது என்னைத் தஞ்சம் என்றடையும் நண்பருக்குப் பஞ்சமில்லை.

கண்ணுக்குக் குளிர்ச்சியாயிருக்கிறேன் என்று கண் வைத்துப் போகிறவர்கள் ஏராளம். கைக்குக் குளிர்ச்சி யென்றெண்ணி என்னை ஒடித்து விளையாடும் பிள்ளைகள் ஏராளம். காலியான வீட்டில் காவலில்லை யென்று களவாய்க் கடைவாய்க்குள் செலுத்துகிற ஆடு மாடுகள் ஏராளம். நானீயும் நிழலை நன்கு மதித்துத் தங்கி நன்றி பாராட்டுபவர் ஏராளம். அலங்காரத்துக்காக என்னை வைத்து வளர்க்கும் சிங்கார வனங்கள் ஏராளம். "வெயிலில் போனால் நிழலின் அருமை தெரியும்" என்றவாறு இக்காலத்தில் என்னருமையை அறியும் ஆட்களும், ஆடு, மாடுகளும் என்னை என்றும் மறவார். எனது நிழலால் காக்கப்படும் கனிகள் என்னை விட்டுப் பிரிய மனமற்றோராய் என்னோடு ஒட்டிக்கொண்டிருக்கின்றனர். அக்கனிகளில் ஆசை கொண்ட பையன்கள் கனிகளைக் காயப்படுத்தும்போது அறியாமலே அவர்கள் நண்பனாகிய என்னையும் காயப்படுத்தி வேதனைக்குள்ளாக்குகின்றனர். என்னிமித்தம் அப்படிப்பட்ட பிள்ளைகளிடம் பரிந்து பேசமாட்டீர்களா? உங்களைக் காக்க வல்ல என்னைக் காப்பது தர்மம்.

நீங்கள் சுவாசிக்கும்போது அசுத்த வாயுவை வெளி யேற்றுகின்றீர்கள். நான் அதை உட்கொண்டு உங்களுக்குத் தேவையான பிராண வாயுவை வெளி விடுகின்றேன். நீங்கள் தந்த நல்ல ஈவுக்காக மனமார்ந்த வந்தனமளிக்கின்றேன். என் அன்புக்கும் நன்றிக்கும் அடையாளமாக நான் அளிக்கும் பிராண வாயுவை அங்கீகரிக்கும்படி வேண்டிக் கொள்ளுகின்றேன்.

உங்களைச் சுற்றிலுமுள்ள ஆகாயம் குளிரும்படி என் தண்ணீரை வெளி விடுகின்வேனே. அதற்கு ஈடாக ஒரு நாளைக்கு ஒரு நேரமாகிலும் யான் குளிரும்படி எனக்குக் கொஞ்சம் தண்ணீர் ஊற்றமாட்டீர்களா? நான் நடந்து போய் தண்ணீர் குடிக்க முடியாத முடவன். தாக சாந்தி செய்யமாட்டீர்களா?

ஏதேனும் தேவையாயின் எனக்கு எழுதுங்கள். என்னாலியன்ற உதவி செய்ய ஆயத்தமாயிருக்கின்றேன் உங்கள் ஊர் விசேஷமென்ன?

யாவரும் சுகம். உங்கள் சுகத்தைப்பற்றி அறிய அதிக ஆசை.

உங்களுக்கு என் அன்பு.

இப்படிக்கு உங்கள் அன்பை ஆசிக்கும்,

இலை.

---

## சத்தியமே சக்தி வாய்ந்தது

(தள்ளுபடி ஆகமம் I எஸ்த்ராஸ் 3ம் 4ம் அதி.

யோவேல் H. மெட்காவ் எழுதியது)

பாரசீகத்தை ஆளும்படி தரியு பட்டம் சூட்டப்பெற்றபோது நூற்று இருபத்தேழு மாகாணங்களிலுள்ள தன் குடிகள் யாவருக்கும் ஒரு பெரிய விருந்து பண்ணினான்.

பண்டிகை முடிந்து எண்டிசையோரும் ஏகின பின்னர் அம்மன்னர் அரண்மனைக்கேகி அயர்ந்த நித்திரைக்குள்ளானார். மெய்க்காவலாளராகிய மூன்று வாலிபர் சம்பாஷித்துக் கொண்டிருந்த சத்தங் கேட்டு அவர் தூக்கம் விட்டெழுந்தார்.

உலகின் கண் சக்தி மிகுந்ததெது என்பதே அவர்கள் தர்க்கம் பண்ணின விஷயம். தர்க்கம் மூர்க்கநிலை யடைந்தபோது அவர்கள் போட்ட கூச்சலினால் அரசன் தூக்கங் கலைந்தது. ஆயினும் அரசன் அவர்களை அமர்த்தாது, அவர்கள் தர்க்க சமர்த்தெம்மட்டுமுளது என்று கவனித்துக்கொண்டே படுத்திருந்தார். முடிவில் அவர்கள் பேசியது யாதெனில், "சக்தி மிகுந்த தெதுவென்று நம் யுக்திக்குத் தகுந்தவாறு ஒவ்வொருவரும் ஒரே வரியில் எழுதி அரசனின் தலையணையின் கீழ் வைத்து விடுவோம். அதிகாலையில் அவரும் அவரது பிரபுக்களும் சக்தி மிகுந்த தெதுவென யெழுதப்பட்ட வரிகளுள் யுக்தி மிகுந்த தெதுவெனத் தீர்மானம் சொல்லட்டும். வெற்றியுற்றவனுக்கே வெகுமதி யுரியது."



அதற்கிணங்கி முதல்வன் "சக்தி மிகுந்தது எது? அது மது." என்றெழுதி வைத்தான். அடுத்தவன் "சக்தி மிகுந்தோன் ஒருவனே. அவன் இறைவனே." என்றெழுதினான். மூன்றாவது ஆள், "சத்தியமே சித்தி யுறும்." என்றெழுதி வைத்தான். இவை மன்னன் படுக்கையில் மறைத்து வைக்கப்பட்டன. மறுநாள் மன்னன் சபா மண்டபத்தில் பிரபுக்கள் பிரதானிகளுடன் வீற்றிருக்கும்போது, தன் மெய்க்காவலாளரை வரவழைத்துத் தங்கள் தங்கள் நியாயத்தை எடுத்துரைக்கக் கூறினான்.

சக்தியில் மதுவுக்கு மிஞ்சினது எதுவுமில்லை என்று சாதித்தோன் சொன்னதாவது :—

மானிடரே! பானத்துட் பலமுள்ள பானம் மதுபானம். பெரியோரையும் பரிகாசம் பண்ணும். மதியுள்ளோரையும் மதிகேடராக்கும். மதுபானம் மதியை மயக்குங்கால் மன்னாதி மன்னனும் மதியற்ற பிள்ளை நிலை யடைகின்றனன். துன்புற்றோரை இன்புறச் செய்ய வல்லது இம மது. ஜனத்தில் எளியோரையும் தனவந்தர் என எண்ணும் மனமுடையோராக்கும். சாராயத்தைக் கொடுத்துப் பூராயத்தைக் கேட்கலாம். ஞாபக சக்தியைக் கொல்ல வல்லது இம் மது. வேதனை யாவையும் வெல்ல நல்லது இம் மது. ஆதலின் சக்தியில் இம் மதுவுக்கு மிஞ்சினது இவ்வுலகில் வேறு எதுவுமில்லை யென்றே சொல்லவேண்டும்."

அடுத்தவன் தன் சார்பாக எடுத்துரைத்தது என்னவெனில் :—

"என்ன சக்தியும் மன்னன் சக்திக்கு மிஞ்சினதன்று. மன்னன் போருக்கு ஏகுக என்றால் யாவரும் மடியப் போகவேண்டியதுதான். மன்னன் சொல்லுக்கு மறு சொல்லில்லை. செடியோ. கொடியோ என்று பாராமல், நடந்து, காடோ, மேடோ கடந்து, கோட்டை கொத்தளங்களைத் தகர்த்து கூடகோபுரங்களை இடித்து பட்டணங்களைப் பிடித்து சர்வ கொள்ளையடித்துக் கொள்ளைப் பொருளைக் குடிகள் அரசனிடம் ஒப்புவிக்க வேண்டியவர்களா யிருக்கின்றனர். அவ்வாறே சமாதான காலத்திலும் சமுசாரி உழுது பயிர்செய்து அறுத்துப் போரடித்து அரசனுக்கு வரி செலுத்த மூட்டை மூட்டையாகத் தானியம் அனுப்புகின்றான். அரசன் ஒருவனே சிரசாக்கினை செய்ய வல்லோன். உயிர்ப் பிச்சை ஈய வல்லோனும் இறையோனே. சர்வ குடிகளும் முடி மன்னனுக்கு அடி பணிபவர்களே! அவன் இட்டது சட்டம். அது திட்டம். நீதிபரரே! செங்கோலானுடைய சக்திக்கு ஈடு வேறெங்குமுளதோ?"

மூன்றாவது ஆள் பின் தோன்றினான். செருபாபேல் என்பதவன் நாமம். அவன் கூறியதாவது :—

மன்னா! உண்மை வன்மை வாய்ந்தது. உன்னதமானது. மது கெட்டது. மன்னனும் கெட்டவன். மானிட மைந்தர் யாவரும் கெட்டவர். கேட்டுக்கே உரியவர். அனைவரும் அழிவர். சத்தியமோ நித்தியமானது. என்றும் சக்தி வாய்ந்தது. என்றும் மடியாதது. சத்தியம் சித்திபெறும். ஆளைப்பார்த்து வேலை செய்யாது. கொஞ்சமும் நெஞ்சம் அஞ்சாது லஞ்சம் வாங்காது. நீதியே அது செல் வீதி. சத்தியமே ஜெயம். சத்தியமே பலம். ராஜ்ஜியம், வல்லமை, மகிமை யதற்கே உரிய எக்காலமுமே! சத்தியத்தின் நித்தியர் வெகு பாக்கியர்."

இவ்வாறு பேசி முடித்தவுடன் யாவரும் ஏகமாய் சத்தியமே சத்தியுறும் சத்தியமே சித்திபெறும் எனக் கூவினர்.

அதன்பின் அரசன் ‘அரும் மதியோய்! விரும்பியதை விளம்புக’ என

அவ்வாலிபன், ‘அரசே! அரசு ஏற்கும் நாளில் எருசலேமைக் கட்டுவதாய் வாக்களித்தீரே! ஞாபகமிருக்கட்டும். ஆலயத்தையும் எடுத்துக் கட்டுவதாய் எடுத்துரைத்தீரே! செங்கோலா னுண்மைக்குப் பங்கம் வாராதிருப்பதாக! போக்குச் சாக்குச் சொல்லாது விண்வேந்தர் முன்னுரைத்த வாக்கை நிறைவேற்றும்’ என்றியம்பினான்.

பின்பு அரசன் அவனை முத்தமிட்டு மகிழ்ச்சியோடு எருசலேமுக்குச் செல்ல வழி செய்தான். அவ்வாலிபன் வானத்தை அண்ணாந்து பார்த்து, ஏகோவாவுக்கு நேரே தன் கண்களை ஏறெடுத்து வெற்றி உம்மிடத்திலிருந்து வரும். ஞானமும் உம்மிடத்திலிருந்தே வரும். மகிமை உமதே! அடியானுமதடிமை! என்று விண்ணப்பம் பண்ணினான்.

இவ்வாறு செருபாபேலின் ஞானத்தினால் பாரசீக இறைவன் எருசலேமை எடுத்துக் கட்ட ஏவப்பட்டான்.

---

## சாஸ்திர சம்பந்தமான சம்பவங்கள்

### ஆப்பிரிக்காவில் எரி மலை.

---

பெல்ஜியத்திற்குச்சேர்ந்த காங்கோ மாகாணத்திலுள்ள நிம்லாஜிரா என்னும் எரிமலை கக்கப்போகின்றது. அது 10000 அடி உயரமுள்ள பழைய மலை அதனருகே போனால் கடலிறைச்சல்போன்ற இறைச்சல் கேட்கலாம், புகை கிளம்புகிறதையும் காணலாம். எரிமலையின் பழைய அகன்ற வாய் இரண்டு மைல் குறுக்களவுள்ளது. இதற்குள் எரிமலை கக்கின உருகின உலோகங்களால் உண்டான உள் வாய் ஒன்றிருக்கின்றது. அதன் குறுக்களவு 1½ மைல். கடந்த இரண்டு வருஷங்களாய் மாதத்திற்கு 10 அடி வீதம் அக்கினி உயர்ந்துகொண்டே வருகிறது. இப்பொழுது வாய் மட்டத்திற்குச் சமீபமாய் வந்து விட்டது.

பழைய வாயிலுள்ள கீறல்கள் வழியாய் நீராவியும் கெந்தகப் புகையும் வெளியேறுகின்றன. இங்கும் அங்கும் உள்ள புகைப் போக்கிபோன்ற துவாரங்கள் மூலமாய் அக்கினி ஜுவாலையும் புகையும் காணப்படுகின்றன. எரிமலை வாயிலுள்ள கற்பாறையின் பரப்பு 600 ஏக்கர்.

இரவும் பகலும் எரிமலை குமுறிக் கொண்டே இருக்கின்றது. வேளா வேளைகளில் பீரங்கி வேட்டுப்போன்ற தொனி கேட்டுக் கொண்டே யிருக்கும். எரிமலையின் ஒளி சுற்றிலும் பிரகாசித்துக் கொண்டே யிருக்கும்.



## ஆகார சம்பந்தமாய் அகில லோக ஐக்கிய சங்கத்தின் அறிக்கை.

அகில லோக ஐக்கிய சங்கம் ஆகார சம்பந்தமான ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கின்றது. அதிற் சில நம் கவனத்துக்குரியன:—

உலகத்தில் ஒரு தேசமாயினும் கொடுக்க வேண்டிய அளவு சரீர தேர்ச்சி தன் ஜனத்திற்குக் கொடுக்கவில்லை. காரணம் ஆகாரத்தின் தன்மையும் அளவுமே.

சரியான ஆகாரம் அருந்துவதில் அறிவீனம் எங்கும் உளது. செல்வம் மிகுந்த தேசங்களிலும் குறையுண்டு. சரியான, அளவான, தெரிந்தெடுத்த ஆகாரம் அருந்துவதில்லை.

தேகத்தைப் போஷித்துக் காக்கும் ஆகாரம் அருந்த செலவு அதிகம். ஏழைகளுக்குக் கூடாத காரியம்.

தேசப் பாதுகாப்புச் சங்கங்களும் சிக்கன விருத்திச் சங்கங்களும் இருப்பதுபோல் ஆகார அபிவிருத்திச் சங்கங்கள் ஏற்படுத்தப்படுவது அவசியம்.

பால், வெண்ணெய், முட்டை, பாற்கட்டி, கல்லீரல், நெய், மீன், காய் கனி, மீன் எண்ணெய் முதலியவை தேகப் பாதுகாப்புக்கு முக்கியமானவை என்றும் பால் பரிபூரண ஆகாரப் பொருளுக்கு அடுத்து வருகிறதென்றும் தங்கள் அறிக்கையில் எடுத்துக் கூறியிருக்கின்றனர்.

இந்தியாவிற்கேற்ற ஓர் ஆலோசனை கூறுகின்றனர். அதாவது, விவசாயத் தொழிலில் கோதுமை, நெல் விளையச் செய்வதைக் காட்டிலும், காய் கனிகள் தோட்டம் வைப்பதும், ஆடு, மாடு வைத்து வளர்ப்பதும் தேகப் பாதுகாப்புக்குரிய ஆகாரப் பொருட்களை விருத்தி செய்ய உதவும் எனக் கூறுகின்றனர்.

---

## இது தெரியாதா?

தண்ணீர்க் குழாய் சரியாய் அடைக்காவிட்டால் ஒரு செக்கண்டுக்கு ஒரு சொட்டுத் தண்ணீர் வீதம் ஒழுகினால் ஒரு நாளுக்கு நான்கு காலன் தண்ணீர் வீணாகின்றது.

நமது தலை முடி வருஷம் ஒன்றுக்கு ஆறு அங்குலம் வளரும்.

ஒரு ராத்தல் தேன் சேர்க்க 30,00,000 புஷ்பங்கள் அவசியம்.

பசிபிக் மகா சமுத்திரத்தைக் கடந்து செல்லும் ஆகாய விமானங்களில் இப்போது ஐந்து பேர் வேலை செய்கின்றனர். அவர்களுக்குத் தங்கள் வேலையுடன் மற்ற நால்வர் செய்யும் வேலைகளையும் செய்யற் திராணி யுண்டு.

உலகத்திலுள்ள பெரும் பாதைகளின் மொத்த நீளம் 90,00,000 மைல். அமெரிக்கா ஐக்கிய மாகாணத்திலுள்ள பாதைகளின் நீளம் 30,00,000 மைல் ஆசியா என்றால் "உதய நாடு" என்பது பொருள் ஆப்பிரிக்கா என்றால் "கரிய நாடு" என்பது பொருள் ஐரோப்பா என்றால் "பாரில் பரந்த முகம்" என்பது பொருள் ஆஸ்திரேலியா என்றால் "தென்னாடு" என்பது பொருள் அமெரிக்கா என்பது இத்தாலியா கப்பலோட்டியின் பெயர்.

உலகத்தில் ஜனத்தொகையில் ஆறில் ஒன்று ஆறுவது ஜியார்ஜ் சக்கரவர்த்தியின் குடிகள் இதில் பற்பல ஜாதிக்காரரும், பாஷைக்காரரும், மார்க்கத்தாரும் இருக்கின்றனர்.

ருஷியா தேசத்தில் 18 வயதுக்கும் 45 வயதுக்கும் இடையிலுள்ள ஒவ்வொரு ஆளும் வருஷத்துக்கு ஆறு நாள் கூலியில்லாமல் பெரும் பாதைகள் போடும் வேலையில் பங்கெடுக்க வேண்டும். இவ்வுதவி பேருதவி.

## கீர்த்தனை

இராகம்—மத்யமாவதி | தாளம்—ஆதி

பல்லவி.

சீராய் சிநேகம் செய்குவோம்
செம் சேவை செய்திடச் — சீராய்

அநுபல்லவி.

பாராய் இப்பாரில் பகைவர்பால்
சாராதிருப்பது தர்மமோ?
போரால் மிகும் பகை போகும் புகையைப்போல்
சோரா துழைப்போமே சுத்த சிநேகத்தாற் — சீராய்

1

ஏராளமாக ஈயவே
ஏற்பதற்கல்லவே—ஏரா

பாராளும் வேந்தருள் வேந்தர்
தாராள மா யளித்தனர்
சீரார் சிறப்புறு செல்வ மிழக்கினும்
சோரா ரெவரையும் சேர்க்க உழைக்கினும் — சீராய்

2

நண்பரில்லாரை நாடுவோம்
நானில மீதினில்—நண்

அன்பில்லா வம்பன் பூதாசையும்
நண்பா வென்றழைத்தன ரேசுவும்
துன்பந்தரும் பல போலி சிநேகிதர் — சீராய்
இன்பமுறச் செய்ய ஈயும் நற் சிந்தையாற்

T.A.Fenn.

Printed at the N. M. S. Press, Royapettah

and

Published by Rev. T. A. Fenn,

College Church,

12, Venkata Maistry Street,


George Town, Madras.

1296

# விதயாதனம்

(TAMIL TREASURE CHEST)

Vol 1. ஆகஸ்டுமீ 1937ஷ No 5.



# பொருளடக்கம்.


| | | பக்கம். | | | பக்கம். |
|---|---|---|---|---|---|
| 1. | பத்திராதிபர் குறிப்பு | 1 | 9. | கடிதம் | 16 |
| 2. | வௌவால்க் கதை | 2 | 10. | புதைத்து வைத்த பொக்கிஷம் | 17 |
| 3. | ஜெபத்திற்குச் செவி கொடுப்போர் | 4 | 11. | உலக செய்திகள் | 19 |
| 4. | மௌன மணி நேரம் | 5 | 12. | முசோலினியின் எஜமான் | 20 |
| 5. | கடவுளி னுடை னூழியர் | 7 | 13. | ஹிட்லரும் பாலகரும் | 20 |
| 6. | குடும்ப ஜீவியப் பயிற்சி | 11 | 14. | பிள்ளைகளுக்குரிய படங்கள் | 21 |
| 7. | சுகாதாரக் குறிப்புகள் | 13 | 15. | "வந்து பாருங்கள்" | 22 |
| 8. | சீனர் பழமொழிகள் | 15 | | | |


## பத்திரிகையின் சந்தா விபரம்.


| | | |
|---|---|---|
| பிரதி ஒன்றுக்கு | ... | அணு 1 |
| வருஷ சந்தா | ... | ரூ. 1—0—0 |
| வெளி நாடுகளுக்கு | ... | ரூ. 1—8—0 |



REV. T. A. FENN,
Editor, Vidyadhanam,
12, Venkata Maistry Street,
George town,
MADRAS.



# வித்யாதனம்
# VIDYA DHANAM
## TAMIL TREASURE CHEST

தொகுதி 1. | ஆகஸ்ட்மீ 1937ஞு | பகுதி 5.



OFFICE OF THE ... 18 SEP 1937


## பத்திராதிபர் குறிப்பு

விசேஷித்தவை சில இம்மாதம் வெளியாகின்றன. அவற்றைக் கவனித்து வாசிக்கும்படி கேட்டுக்கொள்ளுகின்றோம். 'அங்கும் இருப்பான், இங்கும் இருப்பான், ஆக்கின சோற்றுக்குப் பங்கும் இருப்பான்' என்பதை விளக்க ஒரு கதையுண்டு. கண்டு பிடியுங்கள். கிறிஸ்தவ முயற்சி சங்கக் கூட்டத்தில் சொல்வதற்கேற்ற கதையுமுண்டு. குரங்குகள் ஆசிரியராய் விளங்கும் படத்தைப் பாருங்கள். குடும்பப் பயிற்சியை விரும்பும் பிள்ளையைப் பற்றிக் கேள்விப்பட்டதுண்டா? இம்மாதம் புதைத்து வைத்த பொக்கிஷம் வெளியாகின்றது. அறுபத்து நான்கு நாட் செல்லும் பயணம் அறுபத்து நான்கு மணி நேரத்துக்குள் முடிந்த விந்தையே விந்தை. நேப்பாள தேசத்துக்கு வாருங்கள். அங்குள்ள பால்க்காரியைப் பாருங்கள்.

விடு கவிக் கதைகள் சில எழுதி யிருக்கிறோம். விடுவிக்கும் சக்தியைப் பரிசோதித்துப் பாருங்கள். சுகாதாரக் குறிப்புகளைப் படித்து சுற்றத்தாருக்குச் சொல்லுங்கள். சீனர் பழமொழிகளுள் சிறந்தவை சில மொழி பெயர்த்திருக்கின்றோம். சிறுவருக்கேற்ற படங்களும் உள. அமெரிக்காவிலுள்ள அமேசான் நதி அரசனைக் காண ஓர் அழைப்புக் கடிதம் வந்திருக்கிறது. வாசியுங்கள்.

T. A. Fenn.

# வெளவால்க் கதை

Blanche Winder

மலையடிவாரத்தின் மத்தியில் இரு சேனைகள் யுத்த சன்னத்தாராயிருந்தனர். கொம்புத்தலைகளும் ரோமமுள்ள தலைகளும், நெட்டை வால்களும், குட்டை வால்களும் உடைய மிருக சேனை ஒரு பக்கம் போருக் காயத்தமா யிருந்தது. மறு பக்கம் பல வர்ணமுள்ள செட்டைகளடித்து, சூரிய ஒளியில் ஜொலிக்கும் ஆபரணங்களைப்போல ஆயிரக்கணக்கான பறவைகள் அணி வகுத்துப் பறந்து நின்றன. மேலிருந்து காணக் கண்ணுக்குப் புஷ்பத் தோட்டம்போல் தோன்றிற்று. இவர்கள் சேனாதிபதி கழுகு மிருக ராஜனாகிய சிம்மம் எதிர் சேனையை நடத்துவதால் தங்களைத் தாக்கட்டும் என்று காத்திருந்தது. எனினும் மிருகாதிகள் தாமதித்தனர். ஏனெனில், தங்கள் மத்தியில் வந்து இறங்கின ஒரு நூதன, சிறு சிறகுள்ள பிராணியைச் சுற்றிலும் சேனா வீரர் நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர். "யாவன் நீ? சிறகுடையோனாகையால் மிருகமல்ல." எனக் கேட்டனர். அதற்கு அப்பிராணி "யான் ஒரு வெளவால். எனக்கு ரோமமுண்டு, நான்கு காலுண்டு, பல்லுண்டு, பாருங்கள். யான் ஒரு மிருகமே!" என்று சொல்லித் தன் பற்களைக் காட்டிற்று.

"எம் சேனையைச் சேர்ந்து எமக்காய்ப் போர் புரிவாயா?" எனக் கேட்டனர்.

ரோமம் இருந்தது. நான்கு கால்களும் பற்களும் இருந்தன. ஆனதுபற்றி ஏதோ ஒரு விநோதப் பிராணி என்று எண்ணினர். நடு விரல் தலை முதல் உடல் வரை நீண்டிருந்தது. பெருவிரலுக்குப் பதிலாக ஒரு கொக்கி யிருந்தது.

"என்ன வந்தாலும் பறவைகளோடு சேரவேமாட்டேன். உங்களோடு சேர்ந்து போர் புரிவேன்" என்று வெளவால் சொல்லிற்று.

மிருகங்கள் வெளவாலைத் தம்முடன் சேர்த்துக் கொண்டன. யுத்தம் ஆரம்பித்தது, வெளவால் மிகவும் பயந்து உயரப் பறந்து வேடிக்கை பார்த்தது. மிருகங்கள் தோல்வியடையப் போகின்றன என்று கண்டபோது, அது பறந்து போய் இருண்ட காட்டில் ஒளித்துக் கொண்டது. இரகசியமாய்ப் பறந்து செடி நிழலில் மறைந்து வந்து பறவைகளண்டை சேர்ந்தது.

"யாவன் நீ? எங்கு வந்தனை?" எனப் பறவைகளின் சேனாதிபதி கேட்டது.

"என் பேர் வெளவால். நான் உண்மையில் ஒரு பறவையே! நான் பறக்கக்கூடும் என்று நீங்கள் பார்க்கவில்லையா? நம் சத்துருக்களாகிய மிருகங்கள் என்ன செய்து கொண்டிருக்கின்றனர் என்று சொல்லவே இங்கு பறந்து வந்தேன்." என்று சத்துருக்களின் சங்கதிகள் சகலத்தையும் வெளவால் கூறி அவர்கள் தோல்விக் கடுத்திருக்கின்றார்கள் என்பதையும் எடுத்துரைத்தது. அதுகேட்ட பறவைகள் ஊக்கத்துடனும் உற்சாகத்துடனும் போராடின. முன்போல் வெளவால் வசதியான மோசமில்லாத இடத்தையே நாடிச் சென்றது."


யுத்த சித்தி நிலை மாறி பறவைகள் பக்கம் தோல்வி யேற்பட்டது. வெளவாலுக்கோ தன் புத்தி நிலை மாறி மிருகங்களோடு சேரப் போனது. அதுகண்ட காவற் பறவைகள் அதை ஓடிப் பிடித்துக் கைதியாக்கின.



"யாவன் நீ? எங்கு செல்கின்றனை?" எனக் காவற் பறவகள் கோபமாய்க் கேட்டன.

வெளவால் பயந்து நடுங்கிற்று. விடை பகர முடியாதிருந்தது. மிருகம் என்றால் காவற் பறவைகள் கொன்று போடும். பறவை என்றால் வேவுகாரன் என்றெண்ணும். பதில் கூற முடியாமல் உளறினதைக் கேட்டுக் காவற் பறவைகள் சேனாவீரரிடம் வெளவாலை அழைத்துச் சென்றன.

"என்ன, இந்நூதனப் பிராணி என் செய்தது? பறவையோ? மிருகமோ?" எனக் கேட்டனர் சேனாவீரர்.





"யான் ஒரு பறவை! யான் ஒரு பறவை!!" என வெளவால் சொல்லிற்று. "இரகசியமாய் செய்தி கொண்டு வரப் பறந்து சென்றபோது காவற் பறவைகள் சிறைப் பிடித்தன. முன்னே அநுகூலமான செய்தி கொண்டு வந்தேனே!" எனக் கூறிற்று.

கைதிகளுள் சில மிருகங்களிருந்து வௌவால் தங்களுக்கும் அனுகூலமாயிருந்து வந்ததற்காக வாழ்த்துக் கூறின. சேனைவீரர் விசாரணை செய்து மரண தண்டனை விதிக்காது பின் வரும் தீர்ப்புக் கூறினர் :—

1. நீ மிருகமுமல்ல பறவையுமல்ல.
2. இரவில் சஞ்சரிக்கக் கடவாய்.
3. பகலில் பெருவிரலை மாட்டி இருண்ட மூலைகளில் தொங்கிக் கொண்டிருக்கக் கடவாய்.
4. உன் முட்டுகள் நடக்க முடியாமல் உள் வளைவுள்ளதாயிருப்பதாக.
5. சிருஷ்டிப்பில் நிகரற்றதாயிருப்பாய்.

இதனுண்மையை கவனித்துப் பாருங்கள். வௌவாலின் கதிக்கு வௌவாலே காரணம்.

---

## ஜெபத்திற்குச் செவி கொடுப்போர்

இந்தியாவில் ஊழியஞ் செய்யும்படியாக வந்த ஆங்கிலேயர் ஒருவர் தான் பிரயாணஞ் செய்த கப்பலில் தனக்குக் கிடைத்த ஓர் அநுபவத்தை விஸ்தரித்துப் பின் வருமாறு கடிதம் எழுதினர்:—

"இந்து மகா சமுத்திரம்,"

"கப்பலோட்டியின் உத்தரவின்பேரில் நேற்றிரவு கம்பி யில்லாத் தந்தி பேசும் அறைக்குச் சென்றேன். வெளித் தோற்றத்துக்கு சாதாரணமான ஓர் அறைபோலிருந்தது.

உட்பிரவேசித்தபோது இயந்திரத்தை உபயோகித்துக் கொண்டு உட்கார்ந்திருந்த உத்தியோகஸ்தரைக் கண்டேன். அவர் முக்கியஸ்தரில் ஒருவர். காணக்கூடாதவர்களோடு கம்பி யில்லாத் தந்தி மூலமாய் பேசக்கூடியவரா யிருந்தனர்.

அவர் அறையில் நான் உட்கார்ந்து கவனித்தபோது 800 மைலுக்கப்பாலுள்ள பம்பாய் பட்டணத்தோடு சம்பந்தம் ஏற்படுத்த விரும்பியும் பொருத்தமில்லாமல் போயிற்று. அவர் இயந்திரத்தை பம்பாயோடு பொருந்தும்படி பொறுமையோடு திருப்ப வேண்டியதிருந்தது.

இயந்திரத்தைத் திருப்பி பம்பாயோடு பொருந்தும்படி அமைத்த பிறகு பிரயாணிகளிலொருவருக்குச் செய்தி வந்தது. உத்தியோகஸ்தர் முகம் சந்தோஷத்தால் நிறைந்திருந்தது. அவருக்குப் பக்கத்தில் என்ன நடக்கிறது என்பதையும் அறியாதிருந்தார். செய்தியில் ஓர் அசைகூட தவறிவிடக்கூடாது—அதன் பின் பம்பாய்க்கு மூன்று செய்திகள் அனுப்பினர்.



நான் இதைக் கவனித்துக் கொண்டிருந்தபோது யாவும் ஆச்சரியமாயிருந்தது. அவருக்கோ நூதனம் ஒன்றுமில்லை. அவ்வாறு செய்தி அனுப்புவதும் அடைவதும் அவருக்குப் பழகின காரியம். அடுத்தவர் கூட இருந்து பேசுகிறதுபோலவே பேசுவார்.



அன்று இரவு ஜெபிக்க முழங்காலூன்றினேன் ஜெபிப்பதற்குப் புதிய கருத்துண்டானது என் ஜீவியம் கடவுளுடன் பொருத்தமாய் அமைக்கப்பட்டிருந்தால் மாத்திரம் அவரோடு பேச முடியும் அவர் சத்தம் நமக்கும் வந்து எட்டும் என்பதை உணர்ந்தேன்.

மறைந்த சக்தியை உபயோகிக்க உத்தியோகஸ்தருக்குப் போதிய புத்தி யிருந்தது. உபயோகித்தனர்."

---

## மௌன மணி நேரம்

### ஞானமுள்ள மூன்று குரங்குகள்.

"Expository Times"

கலிபோர்னியாவில் ஒரு நூதனப் பொருள் வாங்கி என் சிநேகிதன் எனக்குக் காண்பித்தனர். அதில் முதுகுக்கு முதுகு காட்டி உட்கார்ந்திருந்த மூன்று குரங்குகளின் உருவம் அமைந்திருந்தது. கைகளால் ஒரு குரங்கு தன் வாயையும், மற்றொரு குரங்கு தன் காதுகளையும் மூன்றாம் குரங்கு தன் கண்களையும் மூடின பாவனையிலிருந்தன. ஜப்பான் தேசத்தில் ஒரு ஆலயத்தில் சித்திரிக்கப்பட்ட உருவத்தைப் பார்த்து செய்யப்பட்டதாம். "ஞானமுள்ள மூன்று குரங்குகள்" இவைகளே!



ஒரு குரங்கு பொல்லாங்கு பேசாது.
இரண்டாங் குரங்கு பொல்லாங்கு கேளாது.
மூன்றாங் குரங்கு பொல்லாங்கு காணாது.

இதைக் கண்டவுடன் புத்தியுள்ள பிள்ளைகள் ஞானமுள்ள மூன்று குரங்குகளையும் பின் பற்றினால் எத்தனை இன்பமாயிருக்கும் என்று எண்ணினேன்.

1. புத்தியுள்ள பிள்ளை தன் கைகளால் வாயை மூடும். ஒருக்காலும் பொல்லாங் குரையாது. "என் வாய்க்குக் காவல் வையும்; என் உதடுகளின் வாசலைக் காத்துக்கொள்ளும்" என்று தாவீது ஜெபித்தனன். கசப்பும் கடூரமுமான வார்த்தைகள் எவ்வளவு சீக்கிரம் எளிதில் புறப்பட்டு என்னென்ன கெடுதிகள் உண்டு பண்ணும் என்பதை அறிந்திருந்தனன். ஆனதுபற்றி தன் கையால் வாயை மூடும்படி கடவுளின் உதவி தேடினன். நாமும் புத்தியுள்ளவர்களானால் அவ்வாறே செய்வோம். பையன்களே! கெட்ட வார்த்தைகளைப்பற்றி எச்சரிக்கையா யிருங்கள். உங்கள் பெற்றோர் முன் உபயோகிக்கத் தகாத வார்த்தைகளை எங்கும் உபயோகிக்கவேண்டாம். "உங்கள் வாயினின்று அசுத்தமான சம்பாஷணை புறப்படவேண்டாம்" பெண் பிள்ளைகளே! ஜாடைப் பேச்சைப் பற்றி எச்சரிக்கையா யிருங்கள். கோபப்படவோ அசுத்த வார்த்தை பேசவோ தூண்டப்படும்போது உங்கள் கைகளை வைத்து வாய்களை மூடுங்கள். நாவினால் பாவம் செய்யாதபடிக்குக் காக்கப்படுவீர்கள்.

2. புத்தியுள்ள பிள்ளை கைகளால் தன் காதுகளை மூடும். பொல்லாதவற்றிற்குச் செவி கொடாது. "நீங்கள் கேட்கிறவற்றைக் குறித்துக் கவனமாயிருங்கள்" என்று இயேசு எச்சரித்தனர். பொல்லாதவற்றிற்குச் செவி கொடுத்தால் நமது இதயமும் மனமும் கெட்டுப் போகும். அசுத்தப் பேச்சுக் கேட்டால் காதுகளை அடைத்துக் கொள்ளவேண்டும். சுத்தாங்க சபை வீரனாகிய கர்னல் ஹட்சின்சன் என்பவரைப்பற்றி அவர் மனைவி சொன்னதாவது :— "தமாஷான ஞான மொழிகளில் அவர் பிரியங் கொண்டபோதிலும் அசுத்த சம்பந்தமானவை யொன்றையும் அவர் சகியார். நிந்தனைக்குரிய சம்பாஷணையை அவர் வெறுத்தார்" உகண்டா வில் கிறிஸ்துவுக்காக உயிரிழந்த வீரனாகிய ஹானிங்டனைப்பற்றி ஒரு கதை யுண்டு. அவர் பள்ளிக்கூடத்தில் படித்த காலத்தில் பாடசாலைப் படகு ஓட்டினர். படகில் ஏறின பையன்கள் கெட்ட வார்த்தை பேசினர். அவ்வார்த்தைகளைக் கேட்பதைவிட படகு ஓட்டுவதை விட்டு விடுவதே உத்தமம்" என்று அவர்களிடம் கூறினர். நாமும் புத்தியுள்ளவர்களானால் பொல்லாத வார்த்தைகளுக்குச் செவி கொடாதிருப்பது உத்தமம். புறங் கூறுதிருத்தலும் அதற்குச் செவி கொடாதிருத்தலுமே உண்மையான குல மக்கட்கழகு.

3. புத்தியுள்ள பிள்ளை தன் கைகளால் தன் கண்களை மூடும். பொல்லாங் கானதைப் பாராது. சிலவற்றைப் பாராதிருப்பதிலேயே நமது பாதுகாப்பு இருக்கின்றது. "திராட்சரசம் சிகப்பு வர்ணமாய் இருக்கும்போது அதைப் பாராதே" என்று வேதம் சொல்லு கின்றது. மாயாபுரிச் சந்தையில் கிறிஸ்தியானும் சத்தியவானும் கடந்து செல்கையில் கண்ணைக் கவரும் காட்சிகள் அவர்கள் கண் முன் இருந்தன. ஆயினும் அவர்கள் அவற்றைப் பார்க்கவுங் கூட மறுத்தனர்.

அவர்கள் பயணமும் வியாபாரமும் பரத்துக்கடுத்தவை எனக் காட்ட தங்கள் பார்வையைப் பரத்துக்கு ஏறெடுத்து "மாயையைக் காணாதபடி எம் கண்களை காத்தருளும்" என பிரார்த்தித்தனர். நாமும் கீழான, தீதானவற்றை காணாதிருப்போமாக!



"தூயப் போர்" என்னும் புஸ்தகத்தில் ஜான் பன்யன் கூறுவது யாதெனில் :—

"மானிட ஆத்மாவிற்கு ஐந்து வாயில்களுள. அவையாவன, செவி வாயில், கண் வாயில், வாய் வாயில், நாசி வாயில், கால் வாயில். இவற்றுள் முக்கியமானவை செவி வாயில், கண் வாயில், வாய் வாயில். பொல்லாங்கு கேளாது, காணாது, பேசாது இம்மூன்று வாயில்களை யும் காப்போன் இதயத்தை எத்தீங்கினின்றுங் காப்பான்," என்பதே.

---

## கடவுளி னுட னூழியர்

### கமலாபாய்

சாந்தப்பா ஐயரும் அம்மாளும் ஒரு வருஷமாகப் போதித்ததின் பலனாக நிலங்கரை யுள்ள முதலாளி பிரகாசப்பா தானும் தன் மனைவி மக்கள் மருமக்கள் யாவரும் இயேசுவை ஏற்றுக்கொண்டு அவரைப் பின்பற்றி கிறிஸ்தவர்களின் ஐக்கியத்துக்குள் வருவதாக தீர்மானித் தனர். ஞாயிறு தினம் பக்கத்து கல்லூர் எனும் கிராமத்தில் ஞான ஸ்நான ஆராதனையை எதிர் பார்த்து அனந்தப்பூர் ஜனம் ஆனந்தத்துள் மூழ்கினர். சட்டப்படி இரு பழைய கிறிஸ்தவர் கள் ஞானத் தாய் தந்தையாய் இருக்கவேண்டும். ஐயரம்மாளும் அவர்கள் மகள் தாராவும் பெண்கள் சார்பாகவும் ஐயரும் கி.மு. சங்கத் தலைவர் ஜீவப்பாவும் ஆண்கள் சார்பாகவும் உத்தர வாதம் ஒப்புக் கொண்டனர்.

சபையின் வாலிபர் ஒரு புதிய ஞான ஸ்நான ஆராதனை ஒழுங்கு தயாரித்தனர். அதில் பழைய கிறிஸ்தவர்களின் உதவியை நாடினர். புதிய ஒழுங்கின்படி ஈன ஜாதியிலிருந்து வந்த கிறிஸ்தவன் கையில் புதிதாக கிறிஸ்தவனாகப் போகிற உயர் குலத்தோன் தண்ணீர் வாங்கிப் பானம் பண்ணவேண்டும். ஜாதிப் பெருமையைத் தள்ளி எக்குலத்தாராயினும் கிறிஸ்தவர்கள் ஒரு குலத்தாரென்றெண்ணி அவரோடு கலந்து வாழ்தற்கு அறிகுறியாய் இதை செய்ய எதிர் பார்த்தனர். கலாசாலைப் படிப்பு முடித்தவரும் ஒசூரிலிருந்து ஜீவப்பா வீட்டிற்கு வந்தவரு மாகிய ராஜா தண்ணீர் கொடுக்கும்படியாகத் தெரிந்து கொள்ளப்பட்டார்.

வந்தவர்கள் பரவசமடையத் தக்கதாகவும் வேடிக்கை பார்க்கும் புறமதஸ்தர் காரியத் தைத் தெரிந்துக்கொள்ளத்தக்கதாகவும் ஒழுங்குபடுத்தப்பட்ட ஆராதனையை சரியாய் நடத்தும் படி ஏற்கனவே வாலிபர் முயற்சி எடுத்து செய்ய வேண்டிய காரியங்களையும் பாடவேண்டிய பாட்டுகளையும் கற்றுக் கொடுத்திருந்தனர். அந்த ஒழுங்கை அன்று தான் முதல் முதல் கையாடப் போகின்றனர்.

வார நாட்களில் ஐயரும், தாசப்பா என்னும் உபதேசியார் முதலியோரும் கல்லூர் சென்று யாவரும் ஆயத்தமாவென்று சோதித்துப் பார்க்கப் போயினர்.

"துன்பம் அநுபவிக்க ஆயத்தமா?" என்பது முதல் கேள்வி. ஒவ்வொருவரும் "ஆமா" என்று விடை பகர்ந்தனர். "அது வழக்கமான ஒரு கேள்வி தானே! எங்களுக்கு எங்கிருந்து துன்பம் வரப்போகின்றது? கடவுள் கிருபையால் பணக் கஷ்டம் இல்லை. எங்களை அடித்து ஹிம்சிக்க ஆட்களில்லை." என்று பிரகாசப்பா பேசினர்.

தேவதாசப்பா பேசாதிருந்தனர். ஐயர் சொன்னதாவது :—

"உங்கள் சொந்தக்காரர் ஒருவேளை உங்கள் வீட்டில் பெண் கொள்ளார்கள். கிறிஸ்தவ வாலிபருக்கே கட்டிக் கொடுக்கவேண்டியதிருக்கும்."

"அதுவே நல்லது. கிறிஸ்தவ வாலிபர் தங்கள் மனைவிகளை எவ்வளவு அன்போடு நடத்துகின்றனர் என்று கவனித்திருக்கின்றேன். என் மக்களுக்கு அவ்வளவு கிடைத்தால் போதும்" என்று பிரகாசப்பா சொன்னார்.

பிரகாசப்பாவின் பெரிய வீட்டின் தாவாரத்தில் ஞாயிற்றுக்கிழமை நடந்த ஞான ஸ்நான ஆராதனைக்கு அனந்தப்பூர் முதலிய கிராமங்களிலுள்ள கிறிஸ்தவர்களில் அநேகர் போயினர். ஞானத் தாய் தந்தையரும், ராஜாவும் இரு ஊழியரும் தாவாரத்தில் ஞான ஸ்நானம் பெறுவோரோடு உட்கார்ந்திருந்தனர். மற்ற கிறிஸ்தவர்கள் முற்றத்தில் வீற்றிருந்தனர். அவர்களுக்குப் பின்னேயும், வீட்டின் மேலும், சுவர் மேலும் நின்று புறமதஸ்தர் வேடிக்கை பார்த்தனர்.

பிரகாசப்பா குடிக்கும்படி ராஜா தண்ணீர் வார்த்தபோது, கூட்டத்தில் பெருமூச்சு கிளம்பிற்று. வேடிக்கை வெறுப்பாக மாறிற்று. முடிவில் கிறிஸ்தவர்கள் ஞான ஸ்நானம் பெற்ற புது கிறிஸ்தவர்களை மாலையிட்டு சபையின் ஐக்கியத்துக்குள் வரும்படி நல்வரவு கூறின போது, கூட்டம் கலைந்தது. ஏசுதாசப்பா பேசும்படி எழுந்தபோதோ கிறிஸ்தவர்கள் தவிர வேறு ஒருவருமில்லை.

ஊர் பஞ்சாயத்துக் கூடுமிடத்தில் ஊரின் மூப்பர் சபை கூட்டித் தர்க்கம் பண்ணிக் கொண்டிருந்ததை கிறிஸ்தவர்கள் தாங்கள் அந்த ஊரை விட்டுப் போகும்போது கவனித்தனர்.

அப்பெருங் கூட்டம் பிரசங்கம் கேட்காததைப் பற்றி ஏசுதாசப்பாவுக்கு வருத்தம் அதிகம்.

"அதே கூட்டத்தார்தான். பிரகாசப்பாவுக்கு கஷ்டம் வரும். ராஜா அவருக்குத் தண்ணீர் வார்த்தபோது பெருமூச்சு எழும்பின சத்தங் கேட்டாயா?" என்று ஐயர் ஜீவப்பாவிடம் பேசினார்.

"ஆமா, உடனே கூட்டமும் கலைந்தது தலைவர் சைகை காண்பித்திருக்கலாம். அக்குடும்பத்தார் ஞான ஸ்நானம் பெற்றதில் தடையில்லை போலும். ஆனால் ஜாதி வேற்றுமையை ஒழித்ததுவே அவர்கள் விரோதத்திற்குக் காரணம்" என ஜீவப்பா மொழிந்தனன்.

அடுத்த நாள் ராஜாவும் ஜீவப்பாவும் ஐயரிடமும் உபதேசியாரிடமும் பேசிக்கொண்டிருந்தனர். பிரகாசப்பாவும் அங்கிருந்தனர்.

"நேற்றிரவு நடந்த கூட்டம் மெய்யாகவே பிரகாசப்பாவுக்கும் அவன் குடும்பத்துக்கும் தொந்திரவு கொடுத்து அவர்களை சமாசப்படுத்தவே. ஏனெனில் இன்று அவர்களைத் தண்ணீர் எடுக்கவிடமாட்டோம் என்கிறார்களாம். தோட்டி இவர்களுக்கு வேலை செய்ய மறுக்கின்றானாம். நாசுவன், வண்ணான் முதலியோரும் இவர்களுக்கு வேலை செய்ய மறுக்கின்றனராம். வயல் வேலை செய்யக்கூட கூலியாள் இல்லையாம்." என்று சாந்தப்பா கூறினார்.



"எங்களை ஜாதியை விட்டுத் தள்ளி வைத்திருக்கின்றனர். கல்லூராருக்கும் எங்களுக்கும் இனிப் பங்குமில்லை பாகமுமில்லை. பெண்களெல்லாம் அழுது கொண்டிருக்கின்றனர். துன்பம் வருமோ என்ற கேள்வி கேட்டபோது நான் இப்படி வரும் என்று எண்ணவேயில்லை. நாங்கள் சகித்துக்கொள்ள ஆயத்தம். ஆனால் தண்ணீர் கஷ்டமும் வேலையாள் கஷ்டமும் பெருங் கஷ்டம். உங்கள் ஆலோசனை என்ன?" என்று பிரகாசப்பா பிரலாபித்தனர்.

"கிறிஸ்தவர்களாகுமுன் அனுபவித்த உரிமைகளை கிறிஸ்தவர்களானதினிமித்தம் இழக்கவேண்டியதில்லை என்று ஒரு சட்டமுண்டு" என ஜீவப்பா தைரியப்படுத்தினார்.

"அந்தக் கிணறு உயர்ந்த ஜாதிக்குரியது. வியாச்சியம் பண்ணிப் பார்த்தாலும் நமது பக்கம் தோல்வியே." என்று ஐயர் சொன்னார்.

"கச்சேரி போய்த் தீருமட்டும் காத்திருக்க முடியாது. இன்று குடிக்கத் தண்ணீர் தேவை. என் வயலில் நல்ல கிணறு ஒன்றுண்டு. ஆனால் அது இரண்டு மைலுக்கப்பாலுள்ளது. கூலியாள் கிடைக்காவிட்டால் என் மகனும் நானுமே வயலுக்குத் தண்ணீர் பாய்ச்சவேண்டும்." என்று பிரகாசப்பா கூற,

ஏசுதாசப்பா சொன்னதாவது :—

"உரிமைக்காகப் போராடுவதில் பயனொன்றுமில்லை. அது கிறிஸ்துவின் சிந்தையுமல்ல. எப்படியாகிலும் தண்ணீர் தேவை."

"ஆற்றோரம் உறைகள் வாங்கிப் பதித்தால் ஆற்றில் நீர் வற்றின காலத்திலும் உங்கள் உறைக் கிணற்றில் தண்ணீர் ஊறும்." என்று சொல்லி ராஜா ஒரூரில் நடந்தவற்றையும் விபரமாய்க் கூறினார்.

"வண்ணான், நாசுவன், கூலி முதலியோர் தாமதித்தாலும், தோட்டி வராமல் தீராதே" என்று ஒருவர் கேட்டார்.

அதற்கு ராஜா முற்றத்தில் குழிக் கக்கூஸ் தோண்டும் முறையைப் பற்றிப் பேசினார்.

குழி தோண்ட அனந்தப்பூர் வாலிபர் அனைவரும் உதவி செய்வதாக ஜீவப்பா வாக்குப் பண்ணினர். இச்சம்பவத்திற்காக துக்கப்பட்டபோதிலும் கீழ் ஜாதியார் சகாயமில்லாமலே ஒரு குடும்பத்தார் பிழைக்கலாம் என்பதை தேசத்துக்கு ருசுப்படுத்தும் சிலாக்கியம் பெரிது என்றும் கேவலமான வேலைகளைச் செய்வதினாலேயே சிலர் கீழ் ஜாதியாரானாரென்றும் அவ்வேலையில் நாமும் பங்கு பெற்றால் தீண்டாமை வேண்டாமே என்றும் ஜீவப்பா எண்ணினார்.

"அவர்கள் வேலையை நாம் செய்தால் அவர்களுக்குப் பிழைக்கும் வழி என்ன" என்று ஐயர் கேட்டார்.

"அவர்களுக்கு வேறு வேலை கொடுக்கவேண்டும். வீடு கட்ட, கிணறு வெட்ட, வயல் வேலை, உயர்ந்த வேலை முதலியவற்றில் பயிற்சி கொடுக்கவேண்டும். ஒருவனை தீண்டாதவன் என்று சொல்லத்தக்க எந்த வேலையையும் அவன் செய்யும்படி எதிர் பார்ப்பது கிறிஸ்தவனுக்கு சரியா?" என்று ராஜா பேசினார்.

அனந்தப்பூர் வாலிபர் அநேக வகைகளில் உதவி புரிந்தனர். பிரகாசப்பாவும் அவர் மகனும் நாசுவ வேலை செய்யக் கற்றுக்கொண்டனர். வண்ணான் வேலை செய்யப் பெண்கள் கற்றுக் கொண்டனர்.

தரு நடு விழாக் கொண்டாட ராஜப்பா உதவி செய்தனர். வீடு வெள்ளை யடிக்கக் கற்றுக் கொடுத்தனர். அடிக்கடி வெள்ளை யடித்தால் மூட்டைப் பூச்சி இராது. தரையில் கீல் பூசினால் கறையான் பிடிக்காது. ஸ்திரீகள் மெழுக வேண்டியதில்லை. கழுவினால் போதும். சமையல் அறையில் புகைப் போக்கி வைத்தனர். பப்பாளி மரங்களும் காய் கனித் தோட்டங்களும் வைத்து உண்டாக்கினர். வயல் வரப்புகளெங்கும் மரம் நாட்டினர். கனி விருக்ஷங்களும் விறகுக்காகும் விருக்ஷங்களும் வைத்து வளர்த்தனர்.

பெண்கள் தையல் முதலிய கைத்தொழில்களைக் கற்றுக் கொண்டனர். அவர்கள் தங்கள் கைத் திறமையைக் கண்டு களித்தனர். நெசவு தொழிலும் கற்றுக் கொண்டனர். கைராட்டிணமும் கைத்தறியும் வாங்கிக் கொடுக்கும்படி ஆத்திரப்பட்டனர்.

அவர்கள் குடும்ப ஜீவியத்தை கவனிக்க அநேகர் அவர்களிடம் வந்து நற்காரியங்களைக் கற்றுக் கொண்டு போயினர். கீல் பூசின தரையையும் புகைப் போக்கியையும், குழிக் கக்கூஸையும் அநேகர் வீடுகளில் காணக்கூடியதாயிற்று. அநேக பெண்கள் அநேக நற்காரியங்களைக் கற்றுக் கொண்டனர்.

பிரகாசப்பாவும் அவர் பிள்ளைகளும் தங்கள் வீட்டிலுள்ள பெண்களுக்கு எழுத வாசிக்கக் கற்றுக் கொடுத்தனர். இதைக் கண்ட அயலகத்தார் அனைவரும் படிக்க ஆசைப் பட்டனர்.

குளிர் காலத்தில் கல்லூரில் எலிகள் செத்துவிழ ஆரம்பித்தன. யாவரும் ஊரை விட்டு ஓடினர். அறுப்புக் காலத்தில் போய் இருக்கிற வழக்கம்போல் பிரகாசப்பா தன் குடும்பத்துடன் தன் வயலிலுள்ள வீட்டில் தங்கினர். தன்னோடு தன் வயலில் தங்கி தன் கிணற்றில் தண்ணீர் எடுத்துக் குடிக்கும்படி கல்லூராரில் சிலரை அழைத்தனன். தங்களோடு சமமாக எண்ணித் தண்ணீர் எடுத்து அருந்தார்களென்பதை அறிந்து அக்கிணற்றை அவ்வூராருக்கே சொந்தமாகத் தருவதாகவும் தங்கள் வீட்டாருக்கும் தங்களைச் சேர்ந்த ஈன ஜாதியாரென்று எண்ணப்படுகிற கிறிஸ்தவர்களுக்கும் அவர்களே தண்ணீர் எடுத்து ஊற்ற இவர்கள் பெற்றுக் கொள்வதாகவும் வாக்களித்தனர். "இக்காலத்தில் உங்களுக்கு உதவாமல் எக்காலத்தில் உதவப் போகின்றோம்? சர்க்கார் வைத்தியருக்கு ஆள் அனுப்பி யிருக்கின்றோம். அவர் வந்து இக் கொள்ளை நோய் பரவாதபடி ஊசி குத்தி மருந்து செலுத்துவார்." என்றும் சொன்னார்.

கிராம மூப்பர் அதைக் குறித்து ஆலோசித்தனர். அவர்களுள் ஐந்து பேர் வந்து இவ்வாலோசனையை அவ்வூரார் ஒப்புக்கொள்வதாகக் கூறினர். அதோடு கிணற்றை உபயோகிக்கும் விஷயத்தில் சுத்தமுள்ள சகலருக்கும் சம உரிமையுண்டென்றும் ஒப்புக் கொண்டனர்.

இனித் தீண்டாமை வேண்டாமே என்றாற்போல் காணப்பட்டது.



பின்னும் தலையாரி சொன்னதாவது :—

"உங்கள் மார்க்கத்தைப்பற்றி அறிய ஆசிக்கின்றோம். ஏனெனில் அது தீமைக்கு நன்மை செய்யவும், சத்துருவை மித்துருவாக்கவும், தீட்டான வேலையை மதிப்போடு செய்யவும், பெண்களை மதித்து, அவருக்குப் போதித்து அவரை உயர்த்தவும் போதிக்கின்றது. உங்கள் உபதேசியாரும் அம்மாளும் எங்களோடு தங்கி எங்களுக்குப் போதிக்கட்டும். அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்போம்."

அவ்வாறே அவர்களும் அனந்தப்பூரிலிருந்து இணங்கி வந்தனர். அவ்வூராரும் சிறிது தூரம் வந்து வழிவிட்டனுப்பினர்.

அப்போது தேவதாசப்பா சாந்தப்பாவைப் பார்த்து "நம்முடைய சாட்சி பரவுகிற காட்சியைப் பார்த்தாயா ? அது ஒரு குடும்பத்தைத் தொட்டு அதிலிருந்து ஓர் ஊரையும் அசைக்க வல்லதாயிற்று நமது ஜனங்களுக்கு ஒளியைக் கொண்டுவரும் ஊழியத்தில் கடவுளினுடனூழியரா யிருப்பது எத்தனை அருமையானது." என்றனர்.

---

## குடும்ப ஜீவியப் பயிற்சி

அருந் தாலந்து.

Trella Dick.

பதினன்கு வயதுள்ள ஆனந்தி என்னும் பெண்மணி தன் பெற்றோரிடஞ் சென்று "இதைப் பாருங்கள். நானும் இதில் சேரலாமா ?" என்று கேட்டனள்.

அதில் "குடும்ப சிக்கனப் பயிற்சி. ஆறு வாரப் படிப்பு. பதிமூன்று வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கு மாத்திரம். சம்பளப் பணம் ரூ. 10" என்று கண்டிருந்தது.



வீட்டில் கற்றுக் கொள்ளக்கூடியவற்றிற்கு இவ்வளவு செலவழிப்பானேன் என்று தாயார் எண்ணி இதற்கு இணங்கவில்லை. ஜீவா சங்கீதம் படிக்க எவ்வளவோ செலவானது. இவளும் பள்ளிக்கூடம் போனால் சிறு பிள்ளையைப் பார்க்க ஆளில்லை. ஆனந்திக்கு ஆறுதலில்லை. எனினும் அமைதியா யிருந்தனள். வாத்தியம் வாசிப்பதை விட்டு பதினேழு பிராயமுள்ள ஜீவா வந்து "ஆனந்தி அப்பையனைப் பார்த்துக் கொள்ளக்கூடாதா? எனக்கு எவ்வளவு தொந்திரவு கொடுக்கின்றான் ! அவ்வளவு செய்யக்கூடாதா ?" என்று கோபமாய்ப் பேசினள்.

ஆனந்தி ஓடியும் ஜீவா தன் பேச்சை விடவில்லை. சற்று நேரத்துக்குப் பின் அவள் வாத்தியம் வாசித்த சத்தங் கேட்டது.

“இந்தப் பிள்ளைக்கு எவ்வளவு ஆசை யிருக்கிறது பார்த்தீர்களா?” என்று தாயார் வினவ, தகப்பனார் அது எந்தப் பிள்ளைக்கு என்றறிய விரும்பினர். “ஜீவாவுக்குத்தான்” என்று சொன்ன போது தகப்பனார் “ஜீவாவுக்குச் சங்கீதத்தில் பிரீதி எவ்வாறோ ஆனந்திக்கும் சிக்கன முறையில் பிரீதி அவ்வாறே” என்று மொழிந்தனர்.

“அதிலனேக முறைகள் வீட்டிலேயே கற்றுக் கொடுக்கலாம். பையனைப் பார்க்க ஆள் வேண்டும். ஜீவாவைப் போல் விசேஷ சக்தியோடு கூடிய பிள்ளையுள்ள வீட்டில் மற்றவர்கள் சிலகாரியங்களை விட்டு விட மனதாயிருக்க வேண்டும்” என்று தாயார் தடுத்துப் பேசினர்.

“ஜீவாவுக்கு விசேஷத் தாலந் திருப்பது உண்மையே. பேராசை, முயற்சி முதலியன இருக்கின்றன. ஆனால் ஆனந்தியின் சக்தி விசேஷித்தது” என்று தகப்பனார் சொன்னார்.

“ஆனந்திக்கா? அவள் ஒரு நல்ல பிரீதியுள்ள பிள்ளை தான். ஆனாலும் அவளுக்கு என்ன சக்தி யுண்டு. சங்கீதத்தில் பிரீதியிண்டா? பந்தாட்டத்தில் பிரீதியுண்டா? வேறென்னத்திற்றான் பிரீதியுண்டு. என யானறியேன்.” என்றனள் தாயார்.

“அவற்றால் என்ன பிரயோஜனம். அவற்றில் பிரீதி கொண்டோர் தொகை ஏராளம். ஆனந்திக்கு இருக்கும் சத்தி குடும்ப சம்பந்தமானது. அதை உபயோகிக்க ஏற்ற பயிற்சி கொடுக்க வேண்டும்” என்றனர் தகப்பனார்.

“நான் அவளுக்கு நாள் தோறும் அவ்வித பயிற்சி கொடுக்கின்றேன். சமையல் செய்யச் சொல்லுகின்றேன். வீட்டுச் சாமான்களை ஒழுங்கு படுத்தவும், திரை முதலியன கட்டவும் பயிற்றுவிக்கின்றேன்” என்று தாயார் சொல்லுவதற்குள் “பிள்ளையைப் பார்த்துக் கொள்ளவும்” என்று சொல்லிச் சிரித்தனர் தகப்பனார்:

அதற்கு அவள் “அதுவும் குடும்ப சம்பந்தமான காரியந்தான்” என தகப்பனாரும் ஒத்துக் கொண்டு, “ஜீவாவும் உதவி செய்ய வேண்டாமா? தானுஞ் சில காரியங்கள கற்றுக் கொள்ளும்படி ஆனந்திக்கு வழிதிறக்கக் கூடாதா?” என்று கேட்டனர்.

“குடும்ப ஜீவியப் பயிற்சி பெண்களுக்கு அவசியம் என்றும் அது விருத்தி செய்யக் கூடிய ஒரு சக்தி என்றும் இதுவரை நான் எண்ணவே யில்லை. நீங்கள் சொல்வது சரிதான்” என்று சொல்லி, தாயார் ஆனந்தியை அழைத்து, நீ படிக்கப் போகலாம் என்று அப்பாவும் நானும் தீர்மானித்திருக்கின்றோம்” என்று கூறினள். ஆனந்திக்குண்டான ஆனந்தத்திற்கு அளவில்லை. பெற்றோருக்கு நன்றி கூறினள். பாப்பாவைப் பார்க்கும்படி ஓடினள்.

“அவளுக்கு அச் சக்தியுண்டென்று எனக்கு முன் எவ்வாறு அறிந்தீர்கள்?” என்று தாயார் வினவ.

தகப்பனார் புன்சிரிப்போடு புகன்றது என்னவென்றால் :—

“தாயைப் போல பிள்ளை, நூலைப் போல சேலை”




# சுகாதாரக் குறிப்புகள்

Dr. H. H. Linn

## விஷ பேதி.

விஷ பேதி ஒரு தொத்து வியாதி. இது ஒரு விஷ கிருமியினால் உண்டாகின்றது. இக்கிருமி பலுகிப் பெருகும் இடம் அழுகின ஆகாரப் பொருளும் அசுத்த நீரும் பாலுமே. அதன் அறிகுறி வாந்தியும், வயிற்றோட்டமும், வயிற்று வலியுமே. நீர் வெளி யேறாது. திடீரென மரணம் நேரிடும். ஜுரம் இருந்தாலும் இருக்கலாம். இவ்வியாதியால் நேரிடும் மரணம் ஏராளம்.

சில வேளைகளில் இவ்வியாதி படிப்படியாய் உண்டாகலாம். தேகக் களைப்பு ஏற்பட்டு, வயிற்றேற்றம் கண்டு, வாந்தியும் உண்டாகி, படுக்கையில் வைத்து விடும். சருமம் குளிர்ந்து போகும். அதிக ஜுரம் இருந்தாலும் தேகம் குளிர்ந்து தோன்றும். கன்னம் ஒட்டிப் போகும். சில மணி நேரத்திற்குள் ஆளை மரண கோலத்தில் காணலாம்.



ஆகாரத்தின் மூலமாய் இவ்வியாதி பரவுவதால் நாம் உட்கொள்ளும் உணவைப் பற்றியும் பருகும் பானத்தைப் பற்றியும் எச்சரிக்கையா யிருக்கவேண்டும். சூடான, சுத்தமான உணவு உட்கொள்ளவேண்டும். கொதிக்க வைத்து ஆற வைத்த பாலையுந் தண்ணீரையும் பானம் பண்ணவேண்டும். காய் கனிகளை பெர்மாங்கனேட் கரைத்த நீரில் (Strong Solution of Permanganate) கழுவி உபயோகிக்கவேண்டும். ஈக்களாடின எந்த வஸ்துவும் புசிப்புக்கு ஏற்றதல்ல. பழைய சாதம் சாப்பிடலாகாது.

ஒரு கன சதுர கெஜ தண்ணீருக்கு ஒரு அவுன்ஸ் பெர்மாங்கனேட் (1 oz Permanganate in Solution) வீதம் கிணறுகளில் கலந்துவிட வேண்டும். மாலையிற் கலந்தால் மறுநாட் காலையில் உபயோகிக்கலாம். எப்படி யிருந்தாலும் தண்ணீரைக் கொதிக்க வைத்துப் பருகுவது நல்லது.

விஷ பேதி நடக்குங் காலத்தில், அது வராதபடி தடுக்க ஊசி குத்தி மருந்து செலுத்துவது நல்லது. வியாதியஸ்தருக்கு உதவி செய்கிற ஓர் ஆள் தவிர வேறு ஆட்கள் அங்கு போகவே கூடாது. கழிவு பொருட்கள் அனைத்தையும், கர்பாலிக் அல்லது லைசால் திராவகத்தில் போடவேண்டும் (Carbolic or Lysol). அல்லது அடுப்புக் கரியைப் போட்டு மூடிப் புதைக்கவேண்டும். துணிகளை எரித்துவிட வேண்டும். தரையிலும் கர்பாலிக் அல்லது லைசால் திராவகத்தைத் தெளிக்கவேண்டும்.

சீக்கிரத்தில் சிகிட்சை செய்வதவசியம். குளோரடைன் (Chlorodyne) கிடைத்தால் ஒரு மணி நேரத்திற்கு ஒரு தடவை கருங் காப்பியில் பதினைந்து சொட்டு விட்டுக் கொடுக்கலாம். ஒரு கோப்பை கருங் காப்பியில் ஊடே ஊடே கொடுக்கலாம். சுகத்துக்குத் தக்கதாக மூன்று மணி நேரத்திற்கு ஒரு தடவை அல்லது ஆறு மணி நேரத்திற்கு ஒரு தடவை மருந்து கொடுக்கலாம். ஆகாரம் கொடுக்கவே கூடாது. வாந்தியும் வயிற்றோட்டமும் நின்றால் தேயிலை, காப்பியோடு திரவ உருவமான ஆகாரம் கொடுக்கலாம். வியாதியஸ்தர் படுக்கையிலேயே பல நாட்களாயிருக்கவேண்டும். வேறு ஆகாரம் அருந்தினாலும் வேலை செய்ய எழுந்தாலும் வியாதி மரணத்துக் கேதுவாகத் திரும்பினாலுந் திரும்பும்.

வேறு மருந்தொன்றும் அகப்படாவிட்டால் இரண்டு கிரெய்ன் பொட்டாசியம் பெர்மாங்கனேட் எடுத்து (2 Grains Potassium Permanganate) ஒரு கண்ணாடிப் பாத்திரத்தில் கரைத்துக் குடிக்கக் கொடுக்கவேண்டும். சுகமுண்டாகும் வரை மணிக்கொரு தடவை கொடுக்கவேண்டும். இம்மருந்தில் கொஞ்சம் கரைத்த தண்ணீரே எப்போதும் அருந்தக் கொடுப்பது அவசியம். ஒரு சீசா தண்ணீரில் இரண்டு கிரெய்ன் கரைக்கலாம்.

வியாதியஸ்தருக்கு அனல் உண்டாகும்படி மூடி வைக்கவேண்டும், கை கால்களைத் தேய்த்துவிட வேண்டும். இரத்த ஓட்டமும், உஷ்ணமும் சீர்நிலையிலிருக்கும். நரம்புகள் இழுக்காது. கொதி தண்ணீர் சீசாக்களை அல்லது சூடேற்றப்பட்ட கற்களைத் துணியில் சுற்றி பிணியாளிக்குச் சூடுண்டாக்க வேண்டும்.



## சீனர் பழமொழிகள்



கண்ட நியாயம் செய்யாமை
வேண்டிய வீரம் இல்லாமை. Confucius

ஜீவிய நம்பிக்கைக்கு விடா முயற்சி யாதாரம்
ஆயுதந் தீட்டுதல் ஆசாரி சித்திக் கனுகூலம்.

செதுக்கப் படா மாணிக்கத்திற் குபயோக மில்லை
கல்வி யில்லாதான் சொல்லில் ஞானமில்லை.

பாழுங் கடன் பட்டார் கட்டு மகாப் பெரிது
பாசக் கயிற்றின் கட்டோ அதினு மிகப் பெரிது.

பட்சமற்ற பதம் வெளி யேறுவது எளிது
பரிக ளாறு பூட்டினு மதைக் கொண்டு வருவதரிது.

பொறையோ மிகவும் சக்தி வாய்ந்தது.
காலமும் பொறையு முண்டானால்
இலையான இலையுங் கூட
விலையுயர்ந்த பட்டாகும்.

ஒன்றின் மேலொன்றாய் செங்கல் வைபும்
ஒன்பது மச்சும் ஒன்றாய் ஏறும்.

உலகோர் தாம் ஏற்ற முயற்சியை விடாராயின்
உலகிற் கஷ்டம் ஒன்றும் இல்லை. Confucius

பிற்கால எண்ண மற்றோனுக்கே
தற்காலமும் ஒரு துர்க் காலமே! Confucius

சிக்கன முறை யொன் றில்லாதான்
துக்கத்துக் கோ ராளா வான். Confucius

## கடிதம்

சென்னை,
1—8—1937.

பிரிய பிள்ளைகாள்!

பிள்ளைகளுக்குப் பிரயாணஞ் செய்வது பிரியம் என்பது எனக்குத் தெரியும். ஆகையால் இவ்விசை என்னுடன் ஒரு நீண்ட பிரயாணம் செய்ய அழைக்கின்றேன். நான் நதியரசனைக் காணப் போகின்றேன். என்னோடுவர ஆயத்தமா?

நாம் கப்பலேறி தென் அமெரிக்காவுக்குப் போவோம். உலகிலுள்ள நதிகளுள் மிகப் பெரியதாகிய அமேசான் நதியை உங்களுக்குக் காட்டுவேன். போவோம் வாருங்கள். நதி அரசன் என்பது இந்நதிக்கு நானிட்ட நாமம்.

கப்பல் அமேசான் நதி முகத்துவாரத்தின் வழியாய் நுழைய முடியாது. சமுத்திரத்தினுள் நானூறு அல்லது முன்னூறு மைல் தூரம் வரை தண்ணீர் கலங்கி மரக்கொப்புகளும் செடி செத்தைகளுமாய் வரும். சமுத்திரத்தில் சங்கமாகுமிடத்தில் நதியரசனண்டை சேர முடியாது. உங்களை பாரா என்னும் நதி முகத்துவாரத்தின் வழியாய் அமேசான் நதி அரசனண்டை கொண்டு போய் சேர்ப்பேன். பாரா நதிக்குள் போனவுடன் பாரா எனும் பட்டணத்தைப் பாராமலிருக்க முடியாது. ஆகா, அத்தனை அழகு வாய்ந்த பட்டணம் வேறெங்குளது என்றெண்ணுவீர்கள். இது ஒரு பெரிய துறை முகம். இதில் அநேக கப்பல்கள் வந்து தங்கும். மெனியாக், கொக்கோ, காட் மீன், மண்ணெண்ணெய், சவுக்கு மரத் துண்டுகள் முதலிய சரக்குகளை கொண்டு வந்திருக்கும். அவற்றை இறக்கி விட்டு அவற்றிற்கு பதில் ரப்பரை ஏற்றிக்கொண்டு போகும் காட்சி கண்ணைக் கவரத்தக்கது. கப்பலில் பல ஜாதியார் வேலை செய்கின்றனர். சிலர் கருப்பு நீக்ரோ ஜாதியார்—சிலர் ஐரோப்பியர்—சிலர் பிரேஜர். மாநிறத்தினர்—இவர்களை விட்டுக் கடந்து பாரா பட்டணத்துக்குள்ளே வருவீர்களானால், பல நிறமுள்ள வீடுகளை ஒடுக்கமான வீதிகளில் காண்பீர்கள். வீடுகளுக்கு 5 அல்லது 6 மெத்தையுண்டு. பெரிய பெரிய கடைகளைக் காணலாம். வாடகைக்கு மோட்டார் வண்டி ஒன்று வைத்துப் பட்டணஞ் சுற்றிப் பார்ப்பது எளிது. காலை தோறும் மழை யிருப்பதால் மாலை நேரம் ஒருவரை ஒருவர் சந்திக்கும் சமயம். காலையில் வெயிலின் உஷ்ணம் தோன்றாது. அந்நேரம் மனரம்மியமாயிருக்கும். தென்னை மரங்களும் கமுகு மரங்களும் ஏராளமாய்ப் பார்ப்போம். வீடுகளினுச்சியில் பச்சை இலைகள் ஆடிக்கொண்டிருக்கும். அழகாய் ஆடை அணிந்த



பெண்களும், பிள்ளைகளும் குழந்தைகளைக் கையில் வைத்துக்கொண்டு ஜன்னல் வழியாய் எட்டிப் பார்த்துக் கொண்டிருப்பார்கள். சந்தைக் காட்சி மிக விந்தையானதே. அங்கே எண்ணிறந்த நீக்ரோ ஜாதியார் பல வர்ண ஆடையோடு பாரமான சுமைகளை ஆணும் பெண்ணுமாக தலையிற் சுமந்து வருகிற காட்சி மிக விசேஷம். மீன், வாழைப்பழம், ஆரஞ்சுப்பழம், காய் கனிகள் கூடை கூடையாய் வந்திறங்கும். தென்னை ஓலைகளால் மூடி விற்கிற மாவு வெள்ளை நிறமானது. அது மேனியாக் மாவு எனப்படும். அந்த ஊராருக்கு அதுவே ருசிகரமான முக்கிய ஆகாரப்பொருள். புகையிலை வியாபாரமுங் காணலாம். கிளிகளும் குரங்குகளும் வாங்கப் பணம் வேண்டும். பணம் கொண்டு வாருங்கள். தண்ணீர் தொட்டி மாதிரி நீக்ரோ தலையிற் சுமந்து செல்வது என்ன என்று பார்த்து ஆச்சரியப்படுவீர்கள். ஏனென்றால் கழுத்தும் கால்களும் நீண்டு நீண்டு சுருங்கும். அதுதான் ஆமையென அறிவீர்கள். ஆமை அமேசான் நதிக்கரையில் திரள் திரளாயிருக்கின்றன. அது கரையோரமாய்ப் பள்ளந் தோண்டி முட்டையிடுவது வழக்கமாம். ஒவ்வொரு ஆமையும் 120 முட்டையிடுமாம். அம்முட்டைகளைச் சேர்த்து அதிலிருந்து ஒருவகை எண்ணெய் எடுக்கின்றனர். வெண்ணெயும் செய்கின்றனர். சிலர் சின்ன ஆமைகளை விற்கின்றனர். அதன் மாமிசம் அதிக மதுரமாயிருக்குமாம். நான் ருசித்ததில்லை.

பாராப் பட்டணத்தில் பார்க்கக் கூடியவை யாவையும் பார்த்த பின்னர், கப்பலேறி அமேசான் நதியில் பிரயாணஞ் செய்யலாம். இப்பிரயாணத்தைச் செய்ய ஆயத்தமுள்ளவர்களுண்டென்று கண்டால் இன்னும் முற்றும் முடிய கூட்டிக்கொண்டு போவேன். அதிக ஆச்சரியமான காட்சிகளை யெல்லாம் காட்டுவேன்.

பிரயாணத்தில் பிரீதியுள்ள பிள்ளைகள் எனக்கு எழுதித் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்ளுகின்றேன்.

இப்படிக்கு,
உங்கள் அறிவு விருத்தியை ஆசிக்கும்,
ஜேன் பென்.

## புதைத்து வைத்த பொக்கிஷம்

Blanche Winder

வயது சென்ற தோட்டக்காரன் ஒருவன் தான் சாகுந்தருவாயில் தன் இரு ஆண் மக்களையும் அழைத்து அவர்களுக்குத் தன் கனி விருக்ஷத் தோட்டத்தைக் காட்டி பின்வருமாறு கூறினான்:—

"அநேக ஆண்டுகளாய் அம்மரங்கள் பொன்னிற ஆரஞ்சுப் பழங்களும், செந்நிற செறிப் பழங்களும் நன்னிற ஆப்பிள்காட் பழங்களும் ஈந்து வருகின்றன."

அவனுடைய மக்களும் ஒப்புக் கொண்டனர். அவன் தன் தலையை அசைத்துத் தன் கைகளைப் பார்த்து அவை காய்ப்புக் காய்த்துத் தேய்ந்து போயிருக்கிறதை காண்பித்துத் தன் மக்களின் கைகளையும் ஆராய்ச்சி செய்தனன். அவர்கள் கைகளோ பெண்கள் கைகள்போல் அழகாகவும், மிருதுவாகவும் இருந்தன.

"உங்கள் ஆயுசுக்கும் ஒரு வேலையும் செய்திருக்கமாட்டீர்களே" என்று தந்தை அவர்களைக் கேட்ட பின், "இனி ஒருக்காலும் வேலை செய்யவும் மாட்டீர்கள். ஆதலால் உங்களுக்கென்று தோட்டத்தின் மத்தியில் ஒரு பொக்கிஷம் புதைத்து வைத்திருக்கின்றேன். அதைப்பற்றி சொல்லவே உங்களை அழைத்தனுப்பினேன். அதைத் தோண்டி எடுத்து அநுபவிக்க வேண்டியது உங்கள் பொறுப்பு. இரு மரங்களுக்கூடே இருக்கின்றது. மரங்களுக்கு அதிக சமீபத்திலுமல்ல வெகு தூரத்திலுமல்ல. தோண்டிப் பார்த்தால் கிடைக்கும். பொக்கிஷம் உங்களுடையதே" என்று சொல்லி அனுப்பினபின் மரித்தனன்.



அத்தோட்டம் அவர்களுடையதானது என்று அறிந்தே அவ்விருவரும் அத் தோட்டத்தைச் சுற்றிலும் ஆழமாய்த் தோண்ட ஆரம்பித்தனர்.

நாளுக்குநாள் வாரத்துக்கு வாரம் தோண்டித் தோண்டிப் பார்த்தும் புதைபொருளைக் காணோம். கல்லுங் களைகளுமே வெளியேறின. நிலத்தைத் தோண்டி மண்ணைக் கிளறிக் கிளறி விட்டனரே யொழிய புதைந்த பொருளைக் கண்டடையவில்லை.

காலம் மாறி இலை துளிர் காலந் தோன்றிற்று. எல்லாக் கனி விருக்ஷங்களும் ஒருக்காலும் புஷ்பிக்காத வண்ணம் புஷ்பித்தன. கோடைகாலம் வந்தபோதோ, வெயிலும் மழையும் மரங்கள் ஏராளமான கனி தரும்படி உதவி செய்தன. மரங்களின் வேரினோரத்தில் புதைத்து வைத்த பொக்கிஷத்தைக் காணாவிடினும், வியாபாரிகள அழைக்கப்பட்டபோது அவர்கள் ஆச்சரியப்படத்தக்கதாய்க் கனிகளை காட்டக்கூடியவர்களா யிருந்தனர் அவ்விருவரும்.

"இதற்கு இருபது பைகள் நிறையப் பணம் ஈவேன்" என்றனன் ஒரு வியாபாரி. அவர்கள் ஆனந்தத்துடன் அவ்வியாபாரத்தில் ஈடுபட்டனர். ஆயுசுக்கும் அவ்வளவு பணம் வைத்து அநுபவித்ததில்லை. அந்த வியாபாரி அவர்கள் தோண்டிக் களையெடுத்து நற்கனிகள் விளையச் செய்த விதத்தை மெச்சிப் பேசி அடுத்த வருஷமும் வருவதாகச் சொல்லி விடை பெற்றனன்.



சகோதரர் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்த வண்ணமாகவே பணப் பைகள் முன் உட்கார்ந்து கொண்டு தம் தந்தையின் கைகளைப்போல் மாறின தம் தம் கைகளைப் பார்த்துக் கொண்டிருந்தனர். இப்பொன்னிற ஆரஞ்சும், செந்நிறச் செறியும், நன்னிற ஆப்பிரிக்காட்டுமே தந்தை புதைத்து வைத்த பொக்கிஷம் எனப் பேசிக்கொண்டனர்.

# உலக செய்திகள்

## ருஷியா

வட துருவத்தில் தங்களுக்கு அநுபவ பாத்தியதை யுண்டென்று ருஷியா கூறுகின்றது. வட துருவத்தைக் கண்டு பிடித்தவர் அட்மிரல் பீயரி என்னும் அமெரிக்கர். 28 ஆண்டுகளுக்கு முன் 30 மணி நேரம் அங்கு தங்கினர். பனிக்கட்டி 10 அடி உயரமுள்ளதா யிருக்கிறது என்றும் இன்னும் அநேக இடங்களில் இவ்வளவு உயரமில்லை யென்றுங் கூறினர். வட துருவத்தின்மேல் பறந்து சென்றவருண்டெனினும் அவருக்குப் பின் அதில் தங்கினவரில்லை. ஆனால் ருஷியா தேசத்து சாஸ்திரிகள் அங்கு சென்று தங்கி வந்திருக்கின்றனர்.

பீயரி என்பவர் வட துருவத்தை ஐக்கிய மாகாணத்துக்கு நன்கொடையாக அளித்தனர். பிரஜாதிபதிக்கோ அதை என்ன செய்கிறதென்று தெரியாதிருந்தது. ருஷியா தேசத்தார் பீயரி வட துருவத்துக்கு 100 மைல் இப்பக்கமே இருந்ததாகக் கூறுகின்றனர். ருஷியர் சாஸ்திரீக சம்பந்தமாகவே படிக்கப் போயிருக்கிறபடியால் ஒருவரும் அதற்காக சண்டையிடார். அவர்கள் வெளியிடும் அறிக்கை விசேஷமானதாகும் என எண்ணப்படுகின்றது.

முதல் முதல் ஆகாய விமானத்தில் வந்திறங்கினவர் ருஷியாவிலிருந்து அமெரிக்காவுக்குப் பறக்க சுருக்க வழி வகுக்க வகை தேடினர். மாஸ்கோவிலிருந்து சென்பிரான்ஸிஸ்கோவுக்குப் போகும் வழி வட துருவத்தை அடுத்துச் செல்லவேண்டும்.


பனிக் கட்டியின்மீது ஆகாய விமானம் இறங்குமுன் இரு பரிசோதனை செய்வார்கள். இரும்புக் குண்டை போடும்போது அது துள்ளியோடுமானால் ஆகாயக் கப்பல் அங்கு இறங்கலாம் என்று அறிவார்கள். சிகப்புத்தூள் உள்ள காகிதப் பையைப் போடும்போது அந்த செந்நிறத்தூள் சிதறிப் பறந்து செல்லும் திசையில் காற்றடிக்கிறது என்று கண்டு கொள்ள ஏதுவுண்டு அபாயமின்றி ஆகாய விமானத்தை இறக்கலாம். ஒலி பரப்பும் கருவியினால் ஆறு மணி நேரத்திற்கு ஒரு தடவை கால நிலைக்குறிப்புகள் அறிவிக்கப்படும்.

காற்றடிக்கும் திசையை அறிவிக்க முடியாது. ஏனெனில் வட துருவத்தில் ஒரே ஒரு திசைதான். எத்திசையும் தென்திசையே. ஆனதுபற்றி தேசத்தின் பேரைச் சொல்லித்தான் திசை தெரியப்படுத்தவேண்டும்.

சாஸ்திர ஆராய்ச்சிக்காரர் தகரத்தில் அடைத்த ஆகாரம் பளுவாயிருக்குமென்று தூளாக்கின ஆகாரப் பொருள்தான் வைத்திருப்பார்கள்.

5000 கோழிகளை மாவாக்கினபின் அதின் எடை 66 பவுண்ட் ஆகின்றது. வேறு 48 வகையான தூளாக்கின ஆகாரப் பொருட்களுமுள.

ரப்பரினால் கட்டப்பட்டு ரோமத்தால் மூடப்பட்ட இரட்டைச் சுவர் வீடுகளில் வசிக்கின்றனர். காற்றடிக்கும் குழாயினால் ரப்பர் சுவர்களுக்குக் காற்றடித்துக் கொள்ளலாம்.



மூன்று ருஷியா வீரர் மாஸ்கோவிலிருந்து வான்கூவர் பட்டணத்துக்குப் பறந்து சென்றது மகா விந்தையே! அங்கு மிங்கு மெங்குந் தங்காமல் 5000 மைல் தூரத்தை 63 மணி 17 நிமிஷத்திற் கடந்தனர். இடையில் 1500 மைலுக்குப் பனிக் கட்டியே. வட துருவத்துக்குமேல் 14000 அடி உயரத்தில் பறந்தனராம். அவர்கள் ஆகாயக் கப்பலில் மிதப்புகள் வைத்திருந்தனர்.

அவ்வீரர் யாவரெனில் :—

வாலேரி செக்கலாப் (Valeri Chekaloff).
ஜியார்ஜ் பாய்டுகோப் (George Baidukoff).
அலெக்சாந்தர் பைலியாகாப் (Alexander Byelyakoff).

பறக்க வல்லோருக்கு ஏற இயலாத உயரமுமில்லை, கடக்க முடியாத வனாந்தரமுமில்லை, அடையக் கூடாத காடுகளுமில்லை, தாண்ட மாட்டாத சமுத்திரமுமில்லை.

இவ்வெற்றியின் ஞாபகார்த்தமாக ருஷியர் தபால் முத்திரைகள் அச்சடித்திருக்கின்றனராம்.

## முசோலினியின் எஜமான்


சில நாட்களுக்கு முன் ஒரு பன்றிக் கறி வியாபாரி லாசான் பட்டணத்தில் மரித்துப் போனான். அவன் முசோலினி சிறு பையனாயிருந்தபோது அவரை வேலைக்கு அமர்த்தி வாரத்திற்கு 5 ஷிலிங் வீதம் சம்பளம் கொடுத்து வந்தனன். அப்போது எதைக் கண்டாலும் வாசிக்க வேண்டுமென்ற ஆவல் கொண்டவராயிருந்தாராம். முசோலினியின் எஜமானாயிருந்தபடியினால் அந்தப் பன்றிக் கறி வியாபாரிக்கு மதிப்பு ஏற்பட்டது.


## ஹிட்லரும் பாலகரும்

ஹெர் ஹிட்லரும் ஜெர்மனி தேசப் பாலகருக்கு நாமகரணஞ் சூட்டும்போது ஜெர்மானிய நாமந் தவிர வேறு நாமஞ் சூட்டகூடாதெனத் தீர்மானித்திருக்கின்றார். அவையாவன: ஹேன்ஸ் ஜோஹான் அடோல்ப் முதலியன (Hans, Johann, Adolf) சார்லட், அலீஸ் (Charlotte, Alice) முதலிய சில நாமங்கள் ஜெர்மனி தேசத்துக்குரியன யில்லையாயினும் பெண் பிள்ளைகளுக்கு அந்நாமம் சூட்டலாமாம். சில சந்தர்ப்பத்தில் பையன்களுக்கும் வேறு நாமஞ் சூட்ட இடமுண்டாம்.




## பிள்ளைகளுக்குரிய படங்கள்












## "வந்து பாருங்கள்"

முன்னொரு காலத்தில் நீண்ட காதுகளுள்ள ஆடுகளையும், ஒட்டகங்களையும், எருதுகளையும் மேய்த்த இடம் இதுதானோ? அப்போதிருந்தபடியே மேடுகளும், பள்ளத்தாக்குகளும் மாறாமலிருக்கின்றனவே! நாலாயிரம் வருஷங்களுக்கு முன்னிருந்த நீரூற்றுகளும் இன்னும் ஓயா தோடிக்கொண்டிருக்கின்றன. இப்பட்டி பட்டணமானதும், அப்பட்டணம் மறுபடியும் பட்டியானதுமே யன்றி வேறு மாறுதல்கள் கிடையா.

"என்ன அக்கா, ஆனந்தமாய் ஆடிப்பாடி வெறுங்கையும் வீச்சுமாய் வருகின்றாயே! என்ன விசேஷம்?" என்றாள் ஒரு ஸ்திரீ மற்றவளைப் பார்த்து.





"சந்தோஷ செய்தி! சந்தோஷ செய்தி!! எல்லாம் சந்தோஷ செய்திதான்!!!." என்றாள் மற்றவள்.

"உனக்கு என்றைக்கும் சந்தோஷ செய்திதான்! கேட்கவா வேணும்? ஏன் என்று கேட்கிற ராஜாவுமில்லை. என்ன என்று கேட்கிற மந்திரியுமில்லை. உன்பாடு யோகந்தான்." என்று சொல்ல,

"கேட்கிறதற்கு ஆள் வந்துவிட்டார். அதுதான் சந்தோஷ செய்தி." என்றாள்.

"என்ன அக்கா கேட்கிறதற்கு யார் வந்துவிட்டது?" என, "அவர் ஒரு சன்னியாசி" என்றாள் மற்றவள்.



"சன்னியாசிகளையெல்லாம் நான் நம்புகிறதேயில்லை. எனக்கு நிரம்ப அநுபவம் உண்டு. கதைகளுங்கூடக் கேட்டிருக்கின்றேன். சன்னியாசிகளைக் கண்டாலே எனக்குப் பயம். நீ குள்ளி, மகாக் கள்ளி, பெனுேத்தைப் பிடித்தாய்; நோக்காலே யொடித்தாய்; அசிமாவை அசைத்தாய்; நிரேகாசை சேர்ந்தாய்; தர்தாக்கைத் தாக்கினாய்; அத்தாமலேக்கை அசைத்தாய்; அன்னமலேக்கை ஆட்டிவைத்தாய். யாரைத்தான் விட்டுவைத்தாய்? உன் சமர்த்தே சமர்த்து!! போ!!!"

இதற்குப் பிரதியுத்தரமாக அந்த ஸ்திரீ,

"இல்லையக்கா, நான் சொல்வதைக் கேள். அவர் ஒரு லோக குரு, உயர்ந்த ஜாதி, நானோ தாழ்ந்த ஜாதி; அவர் நம்மை ஏறிட்டுப் பார்க்கக்கூடமாட்டார். அவருடைய ஜாதியார் நம்மோடு பேசக்கூடமாட்டார்களே! உறவாடுவது எப்படி?


இப்படி சம்பாஷித்துக் கொண்டிருக்கையில் ஊரிலுள்ள அநேகர் கூட்டங் கூடினார்கள். பின்னும் அந்த ஸ்திரீ சொன்னதாவது,

"அந்த லோக குரு ஒரு யூதன். நான் தண்ணீர் எடுக்கப்போனேன். அவர் என்னைப்பார்த்து என்னோடு பேசினார். அவர் பார்த்ததிற்கும் மற்றவர்கள் பார்க்கிறதற்கும் பெரிய வித்தியாசம் தெரிந்தது. 'தாகத்துக்குத்தா' என்றார். 'யூதனுக்கே' என்றேன். 'நான் தருவேன் ஜீவ தண்ணீர்' என்றார். 'நீர் யாக்கோபைவிடப் பெரியவரோ' என்றேன். 'என் தண்ணீர் பருகினால் ஒருக்காலும் தாகம் எடுக்காது' என்றார். 'அப்படியானால் அதை எனக்குத் தாரும் என்றேன். 'உன் புருஷனை அழைத்து வா' என்றார். 'ஒருவருமில்லை' என்றேன். 'உண்மையைப் பேசினாய்' என்று என் காரியமெல்லாம் எனக்குச் சொன்னார். அவர் ஒரு மெய்யான தீர்க்கதரிசியென்று கண்டு ஆராதிப்பதைப்பற்றி அவரிடம் பேசினேன். 'ஆவியோடும் உண்மையோடும் ஆராதிக்கவேண்டும்' என்று சொன்னார் அதற்கு நான் 'மேசியா வருவார். அவர் அதைப் பற்றி எங்களுக்குப் போதிப்பார்' என்றேன். 'நான் தான் அவர்' என்றார். உடனே உங்களுக்கு அறிவிக்க ஓடி வந்தேன்" என்றாள்.

அதற்கு அவர்கள் 'அவர் எங்கே?' என்றார்கள். 'வந்து பாருங்கள்' என்று அவர்களை அவரிடம் அழைத்துச் சென்றாள்.

"சமாரியர் அவரிடத்தில் வந்து, தங்களிடத்தில் தங்க வேண்டுமென்று அவரை வேண்டிக்கொண்டார்கள்; அவர் இரண்டு நாள் அங்கே தங்கினார்."

207386



நேப்பாள தேசப் பால்க்காரி.

Printed at the N. M. S. Press, Royapettah

and

Published by Rev. T. A. Fenn,

College Church,

12, Venkata Maistry Street,

George Town, Madras.

# வித்யாதனம்

# VIDYADHANAM

## TAMIL TREASURE CHEST

தொகுதி 1. | செப்டம்பர்மீ 1937ஞு | பகுதி 6.

ரோஜா ... காப்பக நிலை

## பத்திராதிபர் குறிப்பு.

இப்பத்திரிகையை ஆதரித்து வரும் அன்பர்களுக்கு எம் வந்தனம் அளிக்கின்றோம்.

மேன்மைக்கு முன்னனது முதன்மையோ? இக்கேள்விக்கு விடை இதில் காணலாம். பாடசாலைகளில் காணப்படவேண்டிய இன்பம் போய் துன்பம் நுழைவதின் இரகசியம் எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றது. ஆசிரியரும் மாணவரும் அதை வாசித்துப் பயன் பெறுவது அத்தியந்த அவசியம். சந்தோஷம் அடையும் திறவுகோலுமுண்டு. கண்டெடுக்கலாம். "பச்சைப் பட்டாணிகளும் பாலரும்" என்ற பொருளின் கீழ்வரும் பாட்டும் விளையாட்டும் சிறுவருக்கேற்றவை. பிள்ளைகளே! உங்கள் பாடசாலையில் கரு நடு விழா உண்டா? இல்லாவிட்டால் அதின் அவசியத்தைப்பற்றி இங்கு எழுதி யிருப்பதைப் படித்துப் பயிற்சி யடையுங்கள். வழக்கம்போல் சுகாதாரச் குறிப்புகள் வெளிவரும், இதில் முதற்சிகிட்சை செய்யும் முறை வெளியாகின்றது. உலக செய்தியுமுண்டு. இங்கு காணும் வேதக் கதை எங்குளது? விடுகதைகளுக்கு விடை பகருவோருண்டோ? கடைசியில் காணும் படங்களையும் சேர்த்து வைக்கலாம். பழைய கடிதத்தின் தொடர்ச்சியும் எதிர்பாருங்கள்.

கடந்த மாதம் வெளியாக வேண்டிய விடுகதைகள் வெளி வராததைப்பற்றி விசனப் படுகின்றோம். பத்திரிகையில் இடமில்லாதபடியால் அவை யாவும் இம்மாதம் வெளியாகின்றன. கவனமாய்ப் பாருங்கள். தேச சேவைக்கு ஏற்ற கீர்த்தனையும் காஹாப்ரீயா இராகத்தில் எழுதப்பட்டிருக்கின்றது. உபயோகியுங்கள். குரங்கு ஆசிரியராய் விளங்கும் படத்தைப் பிள்ளைகளுக்குரிய படங்கள் வரும் பக்கத்தில் பெரிதாக அச்சடித்திருக்கின்றோம். அதை வெட்டி ஞாபகத்துக்கு உதவியாக ஓரிடத்தில் ஒட்டி வைத்துக்கொள்ளலாம். கடைசியில் காஷ்மீரத்துக் கலப்பையையுங் காணலாம்.

T. A. Fenn.

# "இதை நீ அறியாயோ, இதை நீ கேட்டதில்லையோ?"

களைப்படைந்து இளைப்பாறுங் காலத்திலே செடிகளைப் பிடுங்கி நடவேண்டும். புதுத் துளிர்விடும்போது இடம் பெயர்த்து நடக்கூடாது. இடமாற்றுமுன் வெட்டியெறியவேண்டிய கிளைகள் வெட்டப்படவேண்டும்.

மரங்களின் உச்சியில் எவ்வளவு இடம் வேண்டுமோ அவ்வளவு இடம் வேர்களோடும்படி இருக்கவேண்டும். மரம் நடும் குழி மூன்றடி ஆழமும் உச்சி எவ்வளவு அகலமாய்ப்படருமோ அவ்வளவு அகலமாயும் இருத்தலவசியம். மற்றப்படி வேர்களுக்கு வேண்டிய ஆகாரமில்லாமல் மரங்களின் வளர்ச்சி குன்றிப்போம்.

சிறு மரங்களா யிருக்கும்போது ஒரு வாரத்திற்கு ஒரு தடவையாகிலும் நான்கு அல்லது ஐந்து குடம் தண்ணீர் ஊற்றி வளர்க்கவேண்டும். காலையில் அல்லது மாலையில் தண்ணீர் விடவேண்டும். வெயில் நேரத்தில் தண்ணீர் விடக்கூடாது. மரங்களைச் சுற்றிலும் கொத்தி எருப் போடவேண்டும்.

ஓர் அடி உயரத்திற்கு அதிகமாய் மரத்தைச் சுற்றிலும் மண் போடுவது மரத்திற்குக் கெடுதியை விளைவிக்கும். வேர்கள் வெளியே தெரிந்தால் மண் போட்டு மூடலாம். மரங்களைச் சுற்றிலும் உட்காரும்படி மேடு போடுவது இந்தியாவில் வழக்கமாயிருக்கின்றது. சிலமரங்களுக்குக் கெடுதி செய்யா விட்டாலும், இது அநேக மரங்களின் வளர்ச்சிக்கு ஊனம் உண்டாக்கும் என்பதற்குச் சந்தேகமில்லை.

மரத்தின் தண்டு 10 அல்லது 12 அடி உயரம் இருக்கவேண்டும். அந்த உயரத்திற்குப்பின் கிளைகள் உண்டாக இடங்கொடுக்கலாம். அதற்குக் கீழே பிரியுங் கிளைகளை வெட்டியெறியவேண்டும். ஏனெனில் இவை மரங்களுக்குச் சரியான காற்றோட்டம் இல்லாதபடி தடுக்கின்றன.

நல்ல மரங்களின் அழகைக் கம்பளிப்பூச்சி கெடுக்கின்றன. இதைத்தடுக்க வழியில்லையோ? கம்பளிப்பூச்சிகள் ஏறின மரம் பாழ். இவைஏறிப்போகாதபடி பிடித்துக் கொல்ல ஓர் இலகுவான வழியுண்டு. அதாவது மரத்தண்டை சுற்றி கோணிப்பைத் துணியைச்சுற்றிக் கட்டித் தொங்கவிடவேண்டும். மரத்தில் ஏறும் கம்பளிப்பூச்சிகள் மடிப்புக்குள் பிரவேசித்தவுடன் வெளியேற வழி தெரியாமல் அங்கு இருந்துகொள்ளும். கம்பளிப்பூச்சிகளுக்கு ஏறத் தெரியுமேயொழிய இறங்கத்தெரியாது. மேல்நோக்கிச்செல்வதே அவற்றின் சுயதன்மை ஆனது பற்றி அவற்றை எளிதில் அகப்படுத்திக் கொள்ளலாம். அதன்பின் அவற்றை அன்றன்று அப்புறப் படுத்திக்கொல்லலாம்.

---



# "அன்புக்குப் பொறுமையில்லை"

## Kanta Kumar

பாடசாலை மிசியம்மாள் அறையி லிருந்து பாக்கியம் வேகமாய் வந்து உபாத்திமார் வீடுகளுக்கு முன்னிருக்கும் வாசலண்டை தன் சிநேகிதியாகிய புஷ்பத்தைச் சந்தித்தனள்.

"வசந்தாவையும் சாரதாவையுங் கூப்பிடு. ஒரு விசேஷமானசெய்தி சொல்லவேண்டும்" என்றனள்.

பாடசாலை மூலையிலுள்ள ஒரு மரத்தின்கீழ் சென்றனர். அங்குதான் இரகசியங்கள் யாவும் வெளியாகும். மற்ற மூவரும் வந்தவுடன் பாக்கியம் சொன்னதாவது:—

"மிசியம்மாள் அறையில் நான் வேலைசெய்துகொண்டிருந்தேன். தலைமை உபாத்தினி தமது வேலையை விட்டுவிட்டுப்போவதாகச் சொல்லிக்கொண்டிருந்தபோது மிசியம்மாள் இப்போது இங்கிருக்கும் உபாத்தினிமாருள் ஒருவரைத் தலைமை உபாத்தினியாக்குவதாக சொன்னார்கள். நம்மில் ஒருவராய்த்தானிருக்கவேண்டும். மற்றவர்கள் நம்மைப்போல் படித்தவர்களில்லை."

"நம்மில் யாராய் இருக்கக்கூடும்?" என்று வசந்தா வினவி, "பாடசாலையை நமது இஷ்டம்போல் நடத்துவது எவ்வளவு நல்லது" என்றும் சொன்னாள்.

"உங்களில் யாரைத் தெரிந்துகொள்வார்களோ தெரியவில்லை. எனக்குக் கிடைக்காதென்பது நிச்சயம். அதைப்பற்றிக் கவலையில்லை. என்வகுப்புக்குப் படித்துக்கொடுப்பதே எனக்குப் போதும்" என்றுசொல்லி சாரதா சிரித்தனள்.

இந்த நான்கு பேரும் ஜெயபுரத்தைவிட்டு பட்டணத்துக்குப் போய் உயர்தரப் பாடசாலையில் படித்தவர்கள். முதல் மூவரும் நன்றாய்ப் படித்துப்பத்தாம் வகுப்புப் பரீக்ஷையிலும் தேறினவர்கள். சாராதாவோ தவறிப்போனாள். அவள் கலாசாலைக்குப்போக வழியில்லை. மற்றவர்கள் கலாசாலையில் படிக்கக்கூடிய தேர்ச்சியுடையவர்களா யிருந்தாலும் மிசியம்மாளுக்குப் படிக்க வைக்கப் பிரியமில்லை. ஆகையால் ஜெயபுரத்துப் பாடசாலையில் ஒருவருஷமாய் வேலைசெய்து வந்தனர்.

ஜமுக்காளம் செய்துகொண்டிருந்த சாரதாவிடம் புஷ்பம் வந்து உட்கார்ந்தனள். வருஷத்துக்கு வேண்டிய கைவேலையை தயார்செய்துகொண்டிருந்தனள். இது மாணாக்கர் பார்த்து செய்யவேண்டிய மாதிரிவேலை.

"ரஜா நாட்கள் துவங்கிவிட்டது. நீ வேலைசெய்வதை விட்டோயமாட்டாயோ?" என்று புஷ்பம் வினவ,

"இது எனக்குக்கஷ்டமில்லை. வேலையோடு வேலையாய்க் கைவேலை செய்வதைக்காட்டிலும் இப்போது செய்து வைப்பது எனக்கு இலகுவானது" எனக்கூறினள் சாரதா.

"அதைப்பற்றிக் காரியமில்லை. யாரை, அக்கா, தலைமை உபாத்தினியாக வைப்பார்கள்?" என்று புஷ்பம் கேட்க,

"எனக்குத் தெரியாது. உங்கள் மூவரில் ஒருவரைத்தான் வைப்பார்கள் என்றெண்ணு கின்றேன்" என மொழிந்தனள்.

"அது யார்? தகுதியான அந்த ஆள்யார்?" என மறுபடியும் வினவ,

எனக்குத் தெரியாது. தீர்மானிப்பது என்னுடைய வேலையுமல்ல. பிள்ளைகளுக்கு வேண்டிய கைவேலை ஆயத்தம் பண்ணினால் போதுமானது என்று சாரதா விடை பகர்ந்தனள்.

தங்கை வியாதியாயிருப்பதாய் மிசியம்மாளுக்குத் தந்திவந்தது. தூரமான இடத்துக்குப் போகவேண்டியதிருந்ததால் மிசியம்மாள்உபாத்திமார்கூட்டம் ஒன்றுவைத்துதான் சாரதாவைப் புதுதலைமை உபாத்தினியாக நியமித்திருப்பதாகவும் யாவரும் அவர்களுக்குக் கீழ்படிந்திருக்க வேண்டும் என்பதாகவும், தாயாரம்மாள் ஆலோசனைதந்து உதவிசெய்வார்கள் என்பதாகவும், தன்தங்கையின் சுகத்துக்காக யாவரும் ஜெபம்செய்யவேண்டும் என்பதாகவும் சொல்லி விடை பெற்றுப்போயினர்.

எல்லோரும் தம் தம் இடத்திற்கு ஏகினர். மௌனம் சாதித்தனர். சரியாய் விளங்கிக் கொண்டோமோ என்ற சந்தேகங்கொண்டனர். சாரதாவுக்கும் சந்தேகமே! அவள் தனக்கு அந்தவேலை வேண்டாமென்று சொல்லப்போகிறதாக மூன்று சிநேகிதிகளிடமும் சொல்லச சென்றனள். பாக்கியமும் புஷ்பமும் அவளோடே பேசமாட்டோமென்றிருந்தனர். அவள் ஏதோ நயவஞ்சகமாய் அவ்வேலையை அடைந்ததுபோல் எண்ணினர். வசந்தா கண்ணீர் விடாததுதான் குறை. அவளுக்கு அவ்வேலை வேண்டுமென்றிருந்தது. கிடைக்காதது மிகவும் வருத்தம். வெளியே சொன்னால் வெட்கம் என்றிருந்தனள்.

சாரதா தாயாரம்மாளிடம்போய் தனக்கு அவ்வேலை வேண்டாமென்றுகூறினள். தாயாரம்மாள் ஒன்றும் செய்யமுடியாது. "ஏன் உன்னை வைத்தார்களென்று மிசியம்மாள் என்னிடம் ஒன்றும் சொல்லவில்லை. ஆனால் சரியான காரணமில்லாமல் செய்திருக்கமாட்டார்கள். இப்போது அதைப்பற்றி அம்மாளிடம் பேசமுடியாது. அவர்கள் இட்டது சட்டம். அதின்படி செய்வது நமது கடமை" என்று தாயாரம்மாள் சொன்னார்கள்.

சாரதா தன்னால் இயன்றதைச்செய்ய முயன்றனள். தன் சிநேகிதிகளைக் காணச் சென்றனள். பாக்கியமும் புஷ்பமும் அவளோடு பேசாமல் முகத்தைத் திருப்பிக்கொண்டனர். வசந்தாவோ தலையிடி வந்து படுத்துக்கொண்டனள்.

பாடசாலை துவங்குமுன் சாரதா செய்யவேண்டிய ஆயத்தம் யாவும் செய்தனள். தன் வகுப்புக்கு ஆயத்தம் செய்வதுபோல அவ்வளவு திட்டவட்டமாய் பாடசாலை முழுவதையும் நடத்த ஆயத்தஞ்செய்தனள். மாணவரின் உதவியையும் உற்சாகத்தையும் நாடினள். ஆனால்



அநேக மாணவர் தங்கள் தங்கள் உபாத்திமாரின் அன்புக்கு பங்கம் வருமே என்று பயந்து அவளோடு ஒத்துழைக்கவில்லை. அவள் வகுப்பு மாணவர் மாத்திரம் அவளோடு சேர்ந்துழைத்தனர்.

வசந்தா இணங்கிப்போகும்படி விரும்பினள். பாக்கியமும் புஷ்பமும் விரோதம் பண்ணிக்கொண்டேயிருந்தனர். தகுதியான தலைமை உபாத்தினி வைத்தால் வரும் நன்மைகளைப்பற்றி எடுத்துரைத்து பிள்ளைகளையும் மற்ற உபாத்திமாரையுங்கெடுத்து வைத்தனர். தேறின உபாத்தினிகளிருக்கும்போது தேறாதவளைத் தலைமை வகிக்கச் செய்வதினால் நஷ்டமடைந்த பாடசாலைகளைப்பற்றி எடுத்துக்கூறினர்.

வசந்தாவிடமும்சென்று பேசஆரம்பித்தனர். அவர்கள் அதிசயிக்கத்தக்கவண்ணமாய் அவள் கூறியதுயாதெனில்:—

"அந்த சிந்தையுடன் என்னிடம் பேசவேண்டாம். என் துன்பம் எனக்குப்போதும்."

"அதுசரி அந்த உத்தியோகம் உனக்குக் கிடைத்திருக்கவேண்டியதுதான்" என்றனர். அதற்கு அவள், "அதுபெரியகாரியமல்ல; எனக்கு அந்த உத்தியோகம் கிடைக்கவேண்டுமென்று விரும்பினது வாஸ்தவம். கிடைத்தால் பணம் சேர்த்துக் கலாசாலைக்குப் போக ஏதுவுண்டாயிருக்கும். ஆனால் அது இப்போதுள்ள வருத்தத்துக்குக் காரணமல்ல. என் இதயத்தில் பொறாமை உதயமாகியிருக்கிறதென்று காண்கிறேன்." என்றனள்.

"அப்படிச்சொல்லாதே. அது பொறாமையன்று. உனக்குக் கிடைக்கவேண்டிய ஸ்தானம் தகுதியற்றவளுக்குக் கிடைத்திருக்கிறதினால் ஏற்படும் நீதிக்குரிய கோபம்." என்று மற்ற இருவரும் கூறினர்.

அதற்கு அவள் "இல்லை. அது பொறாமையேயொழிய வேறல்ல. மற்றவள் வைத்திருப்பதை அபகரிக்கும்படி ஆசை கொண்டால் அது பொறாமையினாலுதிக்கும் ஆசையே அவளுக்கு இந்த உத்யோகம் கிடைத்ததில் அவளுடன் சந்தோஷங்கொள்ள ஆசிக்கின்றேன்" என்றனள்.

"அது உனக் குரியதா யிருக்கும்போது அவளுடன் எவ்வாறு சந்தோஷமாயிருப்பாய்?" என்று வினவினர்.

"என்னோடு பேசுவதிற் பயனில்லை. என்னிதயத்தின் அக்கிரம நினைவுகள் எனக்குத் தெரியும். அதைவிட்டுவிலகி அவளுடன் சந்தோஷமாயிருக்க விரும்புகின்றேன்" என்று சொன்னதற்கு,

"அவள் சித்தியடையாவிட்டால் அவ்வேலை வேறொரு ஆளுக்குக் கொடுக்கப்படுமல்லவா?" என்று புஷ்பம் கேட்டனள்.

"அவள் சித்தியடையும்படியாக என்னாலியன்றமட்டும் நான் உதவிசெய்வேன்" என்று உறுதியாய்க் கூறினள்.

"அது என்ன மானங்கெட்ட பிழைப்பு? சுயமதிப்பு வேண்டாமா?" என்று புஷ்பம் கேட்டனள்.

"எனக்கு பெருமையும் வேண்டாம், பொறுமையும் வேண்டாம். நான் இக்ஷணமே அவளிடம் சென்று உங்களிடம் சொன்னவாறே சொல்லி இராசியாக விரும்புகின்றேன். அவளுக்கு வேண்டிய உதவி செய்வதாகவும் வாக்களித்து வருவேன். அப்போதுதான் என் துன்பம் இன்பமாகும்" என்று வசந்தா கூறினள்.

"அவள் உன்னைப்பற்றி என்னசொன்னாள் தெரியுமா?" என்று அவளுக்கு விரோதமாய் மூட்டிவிட்டனர்.

"தெரியாது. எனக்குத் தெரியவும்வேண்டாம். நேரில் பேசிக்கொள்ளுவேன் ஒருவரும் கோள் சொல்லித் திரியவேண்டாம். எலும்பு கடிக்கும் நாய் ஒன்றை எடுத்துக்கொண்டலையும், புறங்கூறுகிறவர்களோ கொண்டுவந்ததோடு கூட ஒன்றை எடுத்துக்கொண்டலைவர்." என்று கடிந்து கூறினள்.

வசந்தா நேராய் சாரதாவிடம் சென்று சகலசங்கதிகளையும்திறந்து பேசினாள். தனக்குப் பொறுமையிருக்கிறதாகவும் அதை வேரற நீக்கப் பிரயாசப்படுவதாகவும் ஒப்புக்கொண்டனள்.

மற்ற இருவரும் அவள்மீது கோபங்கொண்டு எலும்பு கடிக்கும் நாயைப்பற்றி அவள் சொல்லியதைக் கூறி மாணவர் தங்களை வசந்தா நாய்கள் என்று கூறியதாக எண்ணும்படி வம்பு இழுத்துவிட்டனர். வசந்தா எதற்காக சாரதாவுக்கு உதவிசெய்ய எண்ணுகின்றாள் என்பதைச் சொல்லாமல் அவள் சாராதாவைச் சார்ந்திருக்கின்றாள் என்று எடுத்துரைத்தபடியால் ஏதோ லாபத்தைக் கருதி அவள் அவ்வாறு செய்கின்றாள் என்று யாவரும் எண்ணும்படி செய்து விட்டனர்.

வம்புவளர்ந்தது. பிரிவு ஏற்பட்டது. மாணவருக்குள்ளும் உபாத்திமாருக்குள்ளும் கட்சியுண்டானது வெளியிலுள்ளோர் கேள்விப்பட்டு உள் இரகசியங்களை அறிய ஆசைப்பட்டு வந்து மணிக்கணக்காய் பேசிக்கொண்டிருந்தனர். பாக்கியமும் புஷ்பமும் விடாமல் பேசிக்கொண்டேயிருந்தனர். அனுதாபங்காட்டுவதுபோல் மாயம்பண்ணி புறங்கூறுவதிலும் மூட்டிவிடுவதிலும் வெளிஜனங்கள் பங்கெடுத்தனர். வசாந்தாவிடம் அவர்கள் காரியம் செல்லவில்லை. ஏனெனில் எப்பொழுதும் மற்றவர்களைப்பற்றிப் புகழ்ந்தே பேசுவாள். நற்காரியங்களைச் சேட்க அவர்களுக்குப் பிரியமில்லை. வம்பு வார்த்தைகள் பேச வந்தவர்களுக்கு வசதி யேற்படவில்லை.

சாரதாவும் வசந்தாவும் கோள் கேட்கவே மாட்டார்கள். "நல்ல பிள்ளைகள் புறங்கூறார்கள். நல்லவர்கள் கெட்டபிள்ளைகள் சொல்லும் கோள் கேளார்கள்" என்று அடிக்கடி மாணவரிடம் பேசுவர்.

ஒரு நாள் வசந்தாவிடம் ஒரு பிள்ளை வந்து பொறுமை யென்றால் என்ன? அது ஏன் கெட்ட குணம்?" என்று கேட்டனள்.

பொறுமை யென்றால் என்ன என்றும் அதை எவ்வாறு மேற்கொள்ளலாமென்றும் தற்கால காரிய சம்பந்த மில்லாமலே போதிக்கக்கூடியவராயிருந்தனர் அவ்விருவரும். பிள்ளைகள் அதைக்கேட்டு நல்ல பிள்ளைகளாயிருப்போம் என்று தீர்மானித்தனர். இனிஇவர்கள் கோட்சொல்லமாட்டார்கள். கோள் கேட்கவும் மாட்டார்கள் சண்டையிடவும் மாட்டார்கள்



தாயாரம்மாளுக்கு மிகவும் கலக்கமுண்டு, ஆயினும் இதில் பிரவேசிப்பதில பிரயோசனமில்லை என்று எண்ணியிருந்தனர். ஆனால் கோள் ஒன்றும் கேளாது ஜெபம் பண்ணிக்கொண்டிருந்தனர்.

சண்டைபோட ஆளில்லாதபடியால் பாக்கியத்துக்கும் புஷ்பத்துக்கும் கஷ்டமாயிருந்தது. தங்கள் பக்கமாயிருந்தவர்கள் எல்லாரும் பின்பக்கம் தங்களுக்கு விரோதமாய்ப் பேசுகின்றனர் என்றறிந்தனர். அடுத்தவர் சிநேகத்தைக் கெடுத்துவைக்க உதவி செய்கின்ற மித்துருக்கள் யாவரும் சத்துருக்களே என்பதை உணர்ந்தனர். பொறுமையுடையோர் இன்பம் பெருமை ஆச்சரியமன்று என்பதையுமறிந்தனர்.

வசந்தாவைப்பற்றியும் சாரதாவைப்பற்றியும் புறங்கூற வழியில்லை யென்று கண்டு மாணவர் ஒருவருக்கு விரோதமாய் ஒருவர் கோட் சொல்லித் திரிய ஆரம்பித்தனர். பாக்கியமும் புஷ்பமும் யாவரோடும் விரோதம் பண்ணிக் கொண்டனர். அவர்கள் வகுப்பு மாணவர்கூட மதிக்க மாட்டார்கள்.

மற்றவர்களனைவரும் வசந்தாவோடும் சாரதாவோடும் ஒத்துழைத்தனர். இவ்விரண்டு பேரும் துண்டுபட்டனர். சாரதாவின் வேலை சித்திபெற்றது. அவள் வேலையினின்று விலக மாட்டாள் என்று பாக்யத்துக்கும் புஷ்பத்துச்கும் தெரிய வந்தது.

பெருந் துக்கம் இவர்களுக்குண்டானது. ஆகாரம் அருந்தார். கண் துஞ்சார், நாளுக்குநாள் இருவரும் மெலிந்து கருத்துப் போயினர். நடை, உடை பாவனையைப் பற்றி கவனமில்லை. சிநேகிதரை இழந்தனர். மதிப்பை இழந்தனர். எங்கும் எப்போதும் இருவராய் இருந்தனர்.

மிசியம்மாள் இரண்டு மாதங் கழித்துத் திரும்பி வந்தபோது இதுதான் பாடசாலையின் நிலைமை. பாக்கியமும் புஷ்பமும் தவிர மற்ற யாவரும் சீரும் சிறப்புமா யிருக்கக் கண்டனர். இவ்வி வரின் தோற்றமும் மிசியம்மாளை பிரமிக்கச் செய்தது. தாயாரம்மாளிடம் இவ்விருவரைப்பற்றியே விசேஷமாய் விசாரித்தனர்.

தாயாரம்மாள் நடந்தவை யாவற்றையும் எடுத்துக்கூற மிசியம்மாள் நடந்தவற்றை நாடகம் போலெண்ணிக் கவனித்தனர்.

"பிரவேசிக்காமலிருந்தது உத்தமம். ஒவ்வொருவரும் தாங்களே அநுபவத்தால் கற்றுக்கொள்ள வேண்டும். இன்பத்தையும் சுகத்தையும் கெடுக்கும் சக்தி வாய்ந்த கொடும் விஷம் பொறுமை என்பதையும், அதை மேற்கொள்ளும் வழி எவ்வாறு என்பதையும், புறங் கூறுகிறவர்களை நம்ப முடியாதென்பதையும், நமது பிள்ளைகள் கற்றுக் கொண்டால், எழுத, வாசிக்கக் கணக்குப் போடக் கற்றுக்கொள்வதிலும் சிறந்தவற்றைக் கற்றுக் கொண்டனர் என்று எண்ணுகின்றேன். அதே பாடத்தை பாக்கியமும் புஷ்பமும் கற்றுக்கொள்வர். ஒருவேளை இதற்குள் கற்றுக் கொண்டிருப்பார்கள். இதைப்பற்றி அவர்களிடம் நான் பேசமாட்டேன். எனக்குத் தெரிந்ததாகவும் பாவித்துக் கொள்ளேன்." என்று மிசியம்மாள் சொன்னார்கள்.

அம்மாள் எதிர் பார்த்தபடி பாக்கியமும் புஷ்பமும் மனங்கசந்தழுது தாங்கள் செய்த காரியங்களை நினைத்து விசனப்பட்டு, பொருமையின் பலனாக வந்த துன்பங்களைப்பற்றி உணர்ந்து, ஜெபித்து பகிரங்க அறிக்கை செய்து தீய வழிகளை விட்டுவிடுவோம் எனத் தீர்மானித்தனர்.

மிசியம்மாள் மறுநாட்காலை கூட்டம் நடத்தும்போது இவர்கள் எழுந்து தங்கள் பொருமையைப்பற்றியும் சத்தியத்தைப் புரட்டினதைப்பற்றியும், பட்சமற்ற காரியங்களைப் பற்றியும் விசனத்தோடும், வெட்கத்தோடும், அறிக்கையிட்டனர். சாரதாவும் வசந்தாவும் தங்களுக்கு மன்னிக்கவேண்டும் என வேண்டினர். பிள்ளைகளும் தாங்கள் அவர்கள் மதிப்புக் குரியவர்களாகும்படி தங்களுக் கொரு தவணை கொடுக்கவேண்டு மெனக் கெஞ்சினர்.

மிசியம்மாள், உபாத்திமார், பிள்ளைகள் யாவரும் இதைக் கேட்டுக் கண்ணீர் சொரிந்தனர். சாரதா சகலத்தையும் மன்னித்து மறந்து அவர்களை எப்போதும்போல நேசிப்பதாகக் கூறினாள். விரோதமா யிருந்தவர்கள் யாவரும் அறிக்கை செய்து சமாதானமானார்கள்.

"திடீரென்று நான் போக நேரிடாமலிருந்தால் இவை யாவும் நேரிட்டிருக்காது. பத்தாம் வகுப்புத் தேறினவர்கள் கலாசாலைக்குப் போகும்படி பணம் கிடைத்திருக்கிறதென்றும், சாரதா கலாசாலைக்குப் போகமுடியாதபடியாலும் தலைமை வகிக்கும் சக்தி வாய்ந்தவளா யிருக்கிறபடியாலும் அவளை ஏற்படுத்துவது ஏற்ற காரியமென்றும் சொல்லி யிருப்பேன். இதை அறிந்திருந்தால் இக்காரியங்களொன்றும் நடந்திருக்காது. இவைகள் வந்தது எனக்கு துக்கமல்ல. பொருமையின் கொடுமை இன்னதென்று அறிய இடமிருந்தது. எவ்வாறு பொருமையை நீக்கிக்கொள்ளலாமென்று அநுபவத்தில் கண்டிருக்கின்றீர்கள். இவ்வளவு இன்பந்தரும் நன்மையடைவதற்கு நீங்களடைந்த துன்பம் ஈடல்ல. இனி பொருமையென்னும் தீமை உங்களையணுகாது." என்று பேச,

மாணவர் ஏகோபித்து " அணுகவே அணுகாது " என்று கூறினர்.

மிசியம்மாளும் அது அநுபவ சாட்சியென அறிந்துகொண்டனர்.

---

## வேத வாசிப்பு

யோபு 5 : 2 பொருமையின் புத்தியீனம்
சங். 37 : 1 பொருமைக்காரரின் முடிவு
ரோம. 1 ; 23 பொருமையாகிய பாவம்
1 கொரி. 3 : 3 பொருமை மனுஷ மார்க்கத்திற்குரியது
யாக். 3 : 14—18 பொருமையின் பேத்தனம்
கலா. 5 ; 19 பொருமை மாமிசத்தின் கனி

---



## அரிசி ஆசிரியன்


"என்னைப் பின்பற்றுங்கள்; என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்" என்று சொன்ன குருவிடம் கற்ற சிஷன் இந்த அரிசி ஆசிரியன் என்று அபிப்பிராயப்பட வேண்டியதிருக்கின்றது. 'உயர் பதவி யடைய உபத்திரவமே யாதாரம்' என்பதை இயேசு இவ்வுலகிலிருந்தபோது போதித்தும் சாதித்தும் வந்தனர். சிருஷ்டி கர்த்தாவின் சிந்தை இயற்கையில் விளங்குகின்றதே யன்றி இயற்கையிலிருந்து இயேசு இப்பாடங் கற்றுக்கொள்ளவில்லை. இயேசுவை ஏற்றுக்கொள்ள மனமற்றோருக்கும் இயற்கை போதிக்க முன்வருகின்றது.


நெல் விதையை ஊற வைக்கும்போதே முதல் உபத்திரவம் ஆரம்பிக்கின்றது. சேறும் சகதியுமான கழனியில் அந்த விதைக்குள்போது அரிசியானது அசுத்தத்தின் மத்தியில் ஜீவிக்க வேண்டிய திருக்கின்றது. ஆயினும் அசுத்தம் அதை அணுகாது. உமியினால் மூடப்பட்டிருக்கின்றது. துன்பத்தின் மத்தியிலும் மேலுயர்ந்து எழுந்து வளரும் சக்தி யதற்கு உண்டு. உன்னத ஜீவியம் செய்யக் கண்ணுங் கருத்துமாயிருக்கிறபடியினால் அது துன்பத்தைப் பெரிதாகக் கருதுகிறதில்லை. தாது வர்க்கங்களுக்குள் புதைக்கப்பட்டாலும் தான் தாவர வர்க்கத்தைச் சேர்ந்தது என்னும் எண்ணம் உயர்வுறச் செய்கின்றது. அதற்கு மேலான ஜீவ வர்க்கத்தையும் எட்டிப் பார்க்கவேண்டும் என்ற எண்ணம் உண்டு. அதுவே அதின் இலக்கு. "என்ன வந்தாலும் வரட்டும், உயிர் போகட்டும், யான் இலக்கை யடையுமட்டும் சும்மாயிருக்கமாட்டேன். துன்பங்களை சகிப்பேன். மேற்கொள்ளுவேன்" என்று சொல்லும் தன்மை வாய்ந்தது. சேற்றையும் சகதியையும் விட்டுக்கிளம்பி நாற்றாய் வளருகிறது வாஸ்தவமென்றாலும் அந்த சேறு சகதியுள்ள அசுத்தத்தை நீக்கி ஆகாரப்பொருளை அபகரிக்கும் தன்மை மெச்சிக்கொள்ளத்தக்கதே! தீயவை நீக்கி நல்லவை ஏற்குந் தன்மையே சித்திக்கு இரகசியம்.


அழுக்கின்றி வெளிவந்தபோதிலும் அதின் அழகையும் பசுமையையும் பாருங்கள். அந்த நாற்றையும் பிடுங்கி வேறு இடத்தில் நடவேண்டிய காலம் வந்தவுடன் அதைப் பிடுங்கி அந்த வேரில் ஒட்டிக்கொண்டிருக்கும் அழுக்கு நீங்கக் கழுவி சுத்தமாக்கி வேறு இடத்திலே நடுகின்றோம். வேரை அடித்து அடித்துக் கழுவும்போது எவ்வளவு வேதனையுண்டு. அதையெல்லாம் சகித்து வளர்ந்து, ஒன்று முப்பதும், ஒன்று அறுபதும், ஒன்று நூறுமாகப் பலன் தருகின்றது.

தலை நிமிர்ந்து நிற்க வேண்டிய கதிர் பெருமையைக்களைந்து, தாழ்மையை அணிந்து, தரைமட்டும் குனிகிற காட்சியைப் பாருங்கள். எவ்வளவு தாழ்மையை அணிந்தபோதிலும் கத்திக்கு இரை யாகவேண்டியது தான்—அடியோடே அறுத்துக் கொண்டுபோய் அடித்து மணிகளை உதிர்த்து, மாடுகளின் கால்களுக்குக் கீழே மிதிபடக் கொடுத்து கஷ்டபபடுத்தினபோதிலும் நெல் காட்டும் பொறுமையைப் பாருங்கள் தாவர வர்க்கத்தி லுதித்தும் திருப்தியில்லை. உயர் பதவி யடையும்படி இன்னும் உபத்திரவமடைய ஆயத்தமா யிருக்கின்றது.


உமி நீங்கும்படி இயந்திரத்தி லரைக்கப்படுகின்றது. குத்தப்படுகின்றது. இடிக்கப்படுகின்றது. மாவாக்கப்படுகின்றது. நெருப்பின் மே லேற்றப்படுகின்றது—வெந்தபின் மனுஷருக்கு ஏற்ற ஆகாரப்பொரு ளாகின்றது. மனுஷனுடைய இரத்தத்தோடு கலந்து ஜீவ




















வர்க்கத்தில் பிரவேசித்து இலக்கையடைந்த சந்தோஷத்துக்குட் பிரவேசிக்கின்றது. பாடின்றிப் பலனில்லை. குருசின்றிக் கிரீடமில்லை, உபத்திரவமின்றி உயர்வில்லை. சுயதானமின்றி சமாதானமில்லை— பிறா நயமின்றி சுயநயமில்லை. ஆசிரியருள் ஆசிரியன் அரிசி ஆசிரியனே!

சென்னை,
செப்டெம்பர், '37.

பிரிய பிள்ளைகாள்!

நமது பிரயாணத்தைப் பாரா பட்டணத்திலிருந்து இன்று துவங்குவோம். நாம் கப்பல் ஏறி பாரா நதி வழியாய் நதி அரசனாகிய அமேசானை அடைவோம். நதியில் பிரயாணம் செய்வது போல் காணப்படவில்லை. ஏதோ கடலில் பிரயாணம் செய்வதுபோல் தோன்றுகின்றது. பாரா பட்டணத்தார் கடல் என்று சொல்வதும் சரியே. அடுத்த கரையைக் காணவில்லையே! அமேசான் நதியின் முகத்துவாரத்தில் ஸ்காட்லாந்து தேசத்தை வைத்துக்கொள்ளக் கூடுமென்பது நமது காப்டன் அபிப்பிராயம். உலகத்திலுள்ள எல்லா நதிகளைக் காட்டிலும், நமது அரச நதி தான் ஏராளமான தண்ணீரைக்கொண்டு வருகின்றது. எங்கேயிருந்து வருகின்றது? ஏறக்குறைய 2,000 மைலுக்கு அப்பால் ஆண்டீஸ் மலையில் புறப்படுகின்றது. இதற்கு அருகில் ஒரு வெள்ளிச் சுரங்கம் உண்டு. நதி அரசனுக்கு 14 உப நதிகள் உண்டு. ஆண்டீஸ் மலையில் மழை பெய்யும்பொழுது, நமது நதியில் தண்ணீர் வெள்ளம் புரண்டு ஓடும். தென் அமெரிக்காவின் வடபாகம் முழுவதும் தண்ணீரால் நிரப்பப்பட்டு சமுத்திரம் போல் தோன்றும். இதன் நீளம் 4,000 மைல்.

நாம் ஒருநாள் பிரயாணம் செய்து, இரவில் ஓரிடத்தில் தங்குவோம். மறுநாள் முழுவதும் அந்த இடத்தில் நாம் பார்க்கவேண்டிய சில காரியங்கள் உண்டு. இவ்விடத்தில் விசேஷமாய் கிடைப்பது ரப்பர் ஒவ்வொரு ரப்பர் பழத்திலும் 3 விதைகள் உண்டு. இவ்விதைகள் முற்றின பழத்திலிருந்து வெடித்து தூரம்போய் விழுந்து அங்கேயிருந்து முளைக்க ஆரம்பிக்கும் இவ்விதைகளுக்கு ஈரமும் உஷ்ணமும் வேண்டும். நமது இந்தியா தேசத்தில் மலையாளத்தில் ரப்பர் மரங்கள் வளர்க்கின்றார்கள். இவைகள் தென் அமெரிக்காவிலிருந்து கொண்டுவரப்பட்டவை. சிறு செடிகள் முளைத்ததும் வெகு சீக்கிரமாய் வளரும். செழிப்பாய் வளர்ந்தால் ஏழு வருஷத்துக்குள் ரப்பர் பால் எடுக்கலாம். அமேசான் கரையில் ஆயிரக்கணக்கான இந்தியர் ரப்பர் எடுக்கும் வேலையில் இருந்து தம் வாழ் நாட்களைக் கழிக்கின்றார்கள். இவ்விடத்திலிருந்து ஆயிரம் மைலுக்கு ரப்பர் தோட்டங்கள் உண்டு. ஓர் இரவு நாம் ரப்பர் தோட்டத்தில்த் தான் தங்கப்போகிறோம். உங்களுக்கு தெரிந்தபடி தற்காலம் ரப்பர் அதிகமாய் உபயோகப்படுகின்றது. இயந்திரங்களுக்கும், ரப்பர் உடுப்புகளுக்கும், சப்பாத்துகளுக்கும் இன்னும் எண்ணிறந்த காரியங்களுக்கும் ரப்பர் உபயோகப்படுகின்றது.

ரப்பர் தோட்டங்கள் வந்துவிட்டதானால் நாம் இறங்கி, ஒரு தோட்டத்தில் தங்குவோம். இந்த தோட்டத் தலைவர் வீட்டுக்குச் செல்வோம். தலைவர்கள் சாதாரணமாய் ஐரோப்பியர்தான். அவர்களும் ஓலையினால்செய்த வீடுகளில்தான் குடியிருக்கின்றார்கள். இவர்களுக்கு உதவிசெய்ய இந்தியரை அமர்த்துகின்றார்கள். ஆனால் இந்தியரைப்பிடித்து கட்டாயம்செய்து ரப்பர் எடுக்கும் வேலையில் சேவனை வைக்கின்றார்கள். அவனுக்கு ரப்பர் பால் எடுக்கும்படி சில ஆயுதங்கள் கொடுப்பார்கள். ஒரு வகையான உடுப்பும், தங்க ஒரு சின்ன ஓலைக் குடிசையும் கிடைக்கும். ஆனால் இந்த ஆயுதமும், உடுப்பும் விலைக்கு கொடுக்கப்படும். இதின் விலை அதிக

மாயிருக்கும், ஒவ்வொரு இந்தியனும் வேலைசெய்து, சம்பளம்வாங்கி, தான்வாங்கின ஆயுதத்துக்கும், உடுப்புக்கும் விலை கொடுக்கவேண்டும். இந்த தேசத்தின் சட்டம் என்னவென்றால், ஒரு ஐரோப்பியனுக்கு, ஒரு இந்தியன் கடன் கொடுக்கவேண்டுமானால், கொடுத்துத் தீர்க்குமட்டும் வேலை செய்யவேண்டும். இல்லாவிட்டால் தேச அதிகாரிகள் அவனைச் சவுக்கால் அடித்து, கட்டாயப்படுத்தி, வேலையில் வைப்பார்கள். தலைவர்கள்செய்யும் தந்திரம் என்னவென்றால், சேவகர்கள் ஓடிவிடாதபடி, செய்யும் வேலைக்குக் கொஞ்சச் சம்பளமும், உடுப்புக்கும், ஆயுதங்களுக்கும் அதிக கிரயம்வைத்து, எப்பொழுதும், கடன்காரர் ஆகவே வைத்துக்கொள்ளுவது உண்டு.

நமது தலைவர் கூடிய மட்டும் நல்லவர். வேலைக்காரர் சந்தோஷமாய்க் காணப்படுகின்றார்கள். இவர் தமது சேவகர்கள் ஒவ்வொருவனுக்கும் 100 ரப்பர் மரங்கள் கொடுத்திருக்கின்றார். அவன் ஒவ்வொரு மரத்திலும் வெட்டி பால் எடுத்து தினந்தோறும் காய்ச்சவேண்டும். தலைவர் ஒவ்வொருநாளும் 7 பவுண்ட் நிறையுள்ள ரப்பர் சேர்க்கக்கூடும். பின்பு இவர்தன் சாக்குகளை பாரா பட்டணத்துக்கு கொண்டுபோய், வடஅமெரிக்கா ஐரோப்பிய தேசங்களுக்கு விற்பனை செய்கின்றார். இவ்விடத்தில் குடியிருப்பது அதிக கஷ்டம். பலவிதமான காய்ச்சலும், வாத ரோகமும் வரக்கூடிய இடம். இந்தியர்மட்டும் வேலை செய்யக்கூடிய இடம்.

மறு காலையில் ரப்பர் தோட்டத்தைவிட்டு, ஆயிரமைலுக்கு அப்பால் இருக்கும் மனௌஸ் பட்டணத்துக்குப் போகவேண்டும். ஆகா தூரத்தில் கவனித்துப் பார்ப்பீர்களானால் என்ன பயங்கரமான காடு. எவ்வளவுதூரம் போனாலும் ஒரு அடிகூட நிலம் தெரியாது. உயரமான மரங்களும், பலவிதமான படர்செடிகளும் நிறைந்திருக்கின்றன. என்ன அழகான புஷ்பங்கள் பூத்து மலர்ந்து கிடக்கின்றன! ஓர் பெரிய நீண்ட பந்தல்போல் தோன்றுகின்றது. மரங்களுக்கு உச்சியில் சில இலைகளும் பூக்களும் தெரிகின்றது. அடி மரங்கள் படர் செடிகளால் மறைக்கப்பட்டிருக்கின்றன. எவ்வளவு இருட்டாகவும், பச்சையாகவும் தெரிகின்றது. காட்டில் நின்றால் சூரியனைப் பார்க்கவே முடியாது. இதென்ன அதிசயம், பூக்கள் பச்சை, ஊதா, மஞ்சள், வெள்ளை நிறங்களில் காணப்படுவதும், அதின் மத்தியில் பறவைகளும் பல வர்ணங்களுடன் பறப்பதும், இனிய தொனியுடன், பாடுவதும் கேட்கவும், பார்க்கவும் மனதுக்கு ரம்மியமாயிருக்கின்றது. ஆகா இன்னும் நதிக்கரையில் கவனித்து பார்ப்பீர்களானால் அழகான லீலிப் புஷ்பங்கள் பூத்து பலவகையான பச்சை பூண்டுகளின் மத்தியில் கண்ணைக்கவரத்தக்க வண்ணம் தொங்குகின்றன. இந்த காட்டில் நுழைந்துசெல்ல பிள்ளைகளுக்கு இஷ்டம். ஆனால் பயங்கரமான ஊர் வனங்கள் உண்டாம். நம்மைக் கடித்தால் நமக்குப் பிழைப்பு கிடையாது. குரங்குகள் வெகு உல்லாசமாய் மரத்துக்கு மரம் தாவி விளையாடுகின்றன. இக்குரங்குகள் தரையில் இறங்காமல், ஆயிரம் மைலுக்கு கொப்புகளில் தாவித் தாவிச் செல்ல முடியும். இதென்ன வித்தியாசம், இவ்வளவு அடர்ந்த காட்டின் மத்தியில் ஒரு பெரிய பட்டணம், மாடமாளிகைகளும், கூடகோபுரங்களுடன் காணப்படுவது வெகு விந்தை இப்பட்டணம் ஐரோப்பியர்களும், இந்தியரும் நிறைந்தது. இதில் ரப்பர் தோட்டத்தில் வேலை செய்ய ஆட்களைப் பிடிக்கத்தக்க கண்காணிமார் அநேகர் உண்டு. துறைமுகத்தில் பெரிய கப்பல்களில் ரப்பர் ஏற்றுமதி செய்யப்படுகின்றது இப்பட்டணத்தார் எல்லா பட்டணத்தாரைப்போல, எவ்வித சுகபோகங்களையும் அனுபவிக்கின்றார்கள். கம்பியில்லாத தந்திகள், மின்சார விளக்குகள், தண்ணீர் குழாய்கள், ரேடியோ முதலானவைகள் உண்டு. இப்பட்டணம் வியாபாரத்தில் பேர் போனது. சுற்றிலுமுள்ள நாடுகளுக்கு எல்லா சாமான்களும் இங்கேயிருந்துதான்



போகவேண்டும் இதின் பெயர் மனௌஸ். ஆதியில் குடியிருந்த மனௌஸ் என்னும் இந்திய ஜாதியாரின் பேரால் இப்பட்டணம் அழைக்கப்படுகின்றது.

இதற்குமேல் நாம் கப்பலில் பிரயாணம் செய்வது கூடாத காரியம். அமெசான் நதியில் ஆயிரம் மைல் பிரயாணம் செய்துவிட்டோம். முதலாவது ரப்பர் தோட்டங்களையும், காடுகளையும், இப்பட்டணத்தையும் பார்த்தோம். இன்னும் போகப் போக சில ரப்பர் தோட்டங்கள் உண்டு. காடுகளும் உண்டு. பின்பு அமெசான் நதியை மலைச் சரிவில் இறங்கி வரப் பார்க்கலாம். சமுத்திரம் போன்ற இவ்வளவு பெரிய நதி உலகின்கண் எவ்விடமும் பார்க்கமுடியாது. இப்போது நாம் காசிகாகரி என்னும் உபநதியின் முகத்துவாரத்தில் சென்று, இதின் வழியாய் ஓரின்கோ நதிக்குள் செல்வோம். அந்த ஓரின்கோ நதியில் செல்வோமானால், நம்மை அட்லான்டிக் சமுத்திரத்தில் கொண்டுபோய்ச் சேர்க்கும். அதின்பிறகு நாம் அடுத்த பிரயாணம் எங்கே போகலாமென்று யோசித்துப் பின் புறப்படுவோம்.

இப்படிக்கு,
உங்கள் அன்பை மறவாத,
ஜேன்பென்.

சென்னை,
1-9-37.

---

## சுகாதாரக் குறிப்புகள்

### பிளியூரிசி

DR. H. LINN.

இவ்வியாதி சுவாசாசயத்தைச் சுற்றிலுமுள்ள ஜவ்வு போன்ற பிளியூரா என்னும் உறையின் வீக்கத்தினால் உண்டாகின்றது. தோள் பட்டையின் பக்கத்தில் ஒருவிதமான வலியுண்டாகும். இருமலும் இருக்கும். அதனால் வேதனையதிகம். அதிகமாய் காய்ச்சல் ஏறாவிட்டாலும் கொஞ்சம் கொஞ்சம் இருந்துகொண்டே வரும். நன்றாய் சுவாசிக்கும்போது வேதனை அதிகமாயிருக்கிறபடியால் சீக்கிரம் சீக்கிரம் மூச்செடுக்க வேண்டியதிருக்கும்.

இவ்வியாதியைத் தடுக்க ஓர் ஆள் களைப்படைந்திருக்கும்போது பனி வாடையிலிருக்கக்கூடாது. காற்றோட்டமில்லாத அறைகளிலிருக்கவுங் கூடாது. காற்றோட்டமுள்ள அறைகளில் நன்றாய்ப் போர்த்துக்கொண்டு படுத்துறங்கலாம்.

இவ்வியாதிக்கு சிகிச்சை செய்யவேண்டுமானால் வியாதியுள்ள ஆளை காற்றோட்டமான அறையில் படுக்கவைக்க வேண்டும். வாடை யடிக்காத காலமாயிருந்தால் வெளியே படுக்க வைக்கலாம். சுவாசாசயம் வீங்கியிருப்பதால் அதிக ஆகாயம் உட்கொள்ள வழியில்லை. கொஞ்சம் உட்கொண்டாலும் அது சுத்த ஆகாயமாயிருக்கவேண்டும். மார்பின் கீழ் பாகத்தில் அசைவு அதிகமாய் இல்லாதபடி அதன்மூலமாய் அதிக வலி வாராதபடி கொஞ்சம் துணியைச் சுற்றிக் கட்டி வைக்கலாம். சுடு தண்ணீர் சீசாக்களைக் கொண்டு வலியுள்ள பாகத்தில் சூடுண்டாக்கி வேதனையைப் போக்கலாம். இரத்த ஓட்டத்திற்கும் இது உதவும். மார்பில் கடுகு பிளாஸ்திரி போடலாம்.

ஐயோடின், லைம் (Iodine and lime) ஒரு கிரேய்ன் மாத்திரையாக மூன்று மணி நேரத்திற்கு ஒரு தடவை சுடு தண்ணீரில் உட்கொள்ள வேண்டும். ஆரம்பத்தில் மலச் சிக்கலேற்பட்டால் மாக்னீஷியம் சல்பேட் (Magnesium Sulphate) ஒரு தடவை சாப்பிடலாம்.

ஜல பதார்த்தமே தவிர வேறு ஆகாரம் கிடையா. போதிய அளவு தண்ணீர் சாப்பிட வேண்டும். மாத்திரையோடு 1 பாத்திரத்தில் சுடு தண்ணீர் வாங்கி சாப்பிடலாம்.

ஐந்து அல்லது ஆறு நாளுக்குள் சுகங் கிடைக்கவில்லையென்றால் வைத்தியசாலைக்கு அனுப்பவேண்டும். கோத்து நிற்கும் நீரை வைத்தியசாலையில் கிழித்து வெளியேற்ற வேண்டும்.

## இடப்பிசகு.

கை விரலிலாவது கால் விரலிலாவது இடப்பிசகு நேரிட்டால் இடத்தில் விழும் சுடக்குச் சத்தம் கேட்கும்வரையில் இழுத்து விடவேண்டும். கீழ்த் தாடை எலும்பு இடம் விட்டு விலகினால் வாய் மூட முடியாமல் நின்றுவிடும். உதவிசெய்ய விரும்புகிறவர் தன் பெருவிரலில் துணியைச் சுற்றிக் கீழ்த் தாடையை கீழே அமிழ்த்திப் பின்னாகத் தள்ளிவிட வேண்டும். அப்படியானால் அது இடத்தில் போய்ச் சேர ஏதுவுண்டாகும். இரண்டொரு நாள் அதே இடத்தில் இருக்கத்தக்கதாகக் கட்டுப் போடவேண்டும். மற்ற எலும்புகளில் இடப்பிசகு உண்டானால் வைத்தியர் மூலமாய் சிகிட்சை செய்யவேண்டும். எலும்பு இடப்பிசகு நீடித்திருக்கும்படி விட்டு விட்டால் சுகப்படுத்துவது மிகவும் கஷ்டம்.

## வெட்டுக் காயம்.

பெரிய இரத்தக் குழாய்களில் சேதம் ஏற்படாவிட்டால் காயத்தை நன்றாய் கழுவி (1% Chloramine T Solution) 1% குளோரமைன் டி சொலுஷனையாவது அல்லது அது போன்ற விஷ கொல்லிகளைத் தோலைச் சுற்றிலும் தடவி விட வேண்டும். நீர் ஊற்றுப்போல் இரத்தம் வடிந்துகொண்டிருந்தால் சிறு நாடி இரத்தக் குழாய்கள் காயப்பட்டிருக்கின்றனவென்பது தெரிகின்றது. காயப்பட்ட இடத்தில் விரலை வைத்து அழுத்திக் கொண்டிருந்தால் இரத்தம் வடிதல் நின்றுவிடும். கையிலே அல்லது காலிலே உள்ள பெரிய நாடி இரத்தக் குழாய் சேதமடைந்தால் காயத்துக்கு மேலே ஒரு கட்டுப்போட்டு ஒரு பெலமான குச்சியை ஊடே கோத்து முடிப்பு நாடிக் குழாயை அழுத்தத்தக்கதாய் இறுக்கி முறுக்கிச் சுற்றவேண்டும். அரை மணி நேரத்திற்கு அதிகமாகக் கட்டுப் போடக்கூடாது. இரத்த ஓட்டத்துக்கு அபாயம் உண்டாகும். சரீரத்திலும் தலையிலும் ஏற்படும் மற்றக் காயங்களுக்கு சுத்தமான பஞ்சு வைத்து இறுக்கிக் கட்டுப் போடவேண்டும்.


## சுளுக்கு.

திடீரென நரம்போ தசையோ திருகிக்கொள்வதனால் சுளுக்கு ஏற்படுகின்றது. பாதத்திற்கு மேலுள்ள பாகத்தில் அதாவது அங்குள்ள பூட்டில் சுளுக்கு ஏற்பட்டால் நடக்கக் கூடாது. சுடு தண்ணீர் மூலமாய் சூடுண்டாக்க வேண்டும். தாங்கக்கூடாத சூடு அவசியமில்லை. இது பிரயோஜனப்படவில்லையென்றால் குளிர்ந்த தண்ணீர் விட்டுப் பார்க்கலாம். பிறகு அந்த பாகத்தைத் துணியினால் சுற்றிக் கட்டிவைக்க வேண்டும். நடக்கக்கூடாது. வீக்கம் வற்றினவுடன் எண்ணெய் தேய்த்து உருவிவிட வேண்டும்.



## பிள்ளைகளுக்கேற்ற படங்கள்.



## முதன்மையை நாடினேன்

சில வருஷங்களுக்கு முன் பெரிய பட்டணமொன்றில் கைத் தொழிற் கண் காட்சிசாலையை சந்தித்தேன். இது ஒரு பெரிய சிங்காரவனத்தில் அமைக்கப்பட்டிருந்தது. அங்கு பலவிதமான காரியங்கள் காணப்பட்டன. ஒரு பெரிய தொழிற்சாலையும் அங்கிருந்தது. அதில் அநேக அதிசயமான காரியங்கள் செய்யும் முறையைக் காண்பிக்கத்தக்கதாய் வைக்கப் பட்டிருந்தன. இயந்திரங்களசைவினுலோடும் சக்கரங்களின் சத்தம் ஏராளம். அங்கு ஒருவரோடு ஒருவர் பேசுவது கஷ்டம். படக்காட்சிசாலை ஒரு பக்கம் விசித்திர விநோதங்களையுடைய கட்டிடம் ஒரு பக்கம். சித்திரப் பூக் கைத் தயல் செய்யும் ஐயர்லாந்து தேசத்தார் ஒரு பக்கம். பாடகர் கூட்டத்தால் நிறையும் அரங்கசாலைப் பீடம் ஒரு பக்கம். உலகிற் சிறந்த வாத்தியக் கூட்டத்தார் ஒரு பக்கம்.

முதல் நாள் என் சிநேகிதனோடே நான் வெளியே நின்று பேசிக்கொண்டிருந்தேன். திடீரென பக்கத்தில் பெரிய சத்தமிட்டுக்கொண்டு ஒரு சிறிய நீராவி இயந்திரம் ஓடிற்று. வண்டித் தொடரிருந்தன. அதில் சில பிள்ளைகள் ஏறிச் சென்றனர். அது சிரிப்புக் கிடமாயிருந்தது. ஏனெனில் அது "எல்லாரும் வாருங்கள் என் வேலையைப் பாருங்கள்" என்று தன்னையே முக்கியப்படுத்திப் பேசினதுபோல் சத்தமிட்டோடினது. அது பெரிய வேலை செய்யவில்லை சிறிய பிள்ளைகளை வைத்து கொஞ்ச தூரம்மாத்திரம் இழுத்துச் சென்றது பெரிய வேலைக்கு உதவாது. சாமான் வண்டிகளை இழுக்கமுடியாது. ஏற்றம் இறக்கங்களிற் செல்லமுடியாது. எனினும் மேன்மையை நாடினது.

இந்த இயந்திரத்தைப் போன்றவர்கள் ஏராளம். மிகுந்த சத்தம் செய்வார்கள். ஓடி யாடித் திரிவார்கள். ஆனுல் அவர்களால் உலகத்துக்கு யாதொரு நன்மையுமில்லை. முதன்மையை நாடுவர். மற்றவர்கள் தங்களைப் பார்த்துப் புகழவேண்டும் என்று எண்ணுவர். தங்களை மதிக்கவேண்டும் என்றும் தங்கள் சொல் கேட்கவேண்டுமென்றும் விரும்புவர். எவரேனும் அவர்கள் காரியத்தில் தலையிட்டால் கோபப்படுவார்.

நம்மில் அநேகர் இக்கூட்டத்தைச் சேர்ந்தவர்கள். முதன்மையை நாடுகின்றோம். உலகுக்கு உதவி, உயர்வடைய உன்னல் உன்னதமானதே. ஆனுல் மாய ஜீவியத்தோடு வீண் பெருமைக்காக சுய நயத்தைக் கருதி நாடினுல் அது நன்றன்று. மற்றவர்களுக்குரிய உணர்ச்சியையும் உரிமைகளையும் மறக்கும்படி செய்தால் அது நன்றன்று. சுயமதிப்பை நாடி பெரிய எண்ணத்தோடு பாசமற்ற ஜீவியம் செய்தால் அது நன்றன்று.

மேன்மை யடையும்படி மேன்மையான முறை யாதெனில் முதன்மையை நாடுவ தல்ல. பேர் எடுப்பதல்ல அன்பும் பட்சமுமான கிரியைகளால் அநேகருக்குப் பணி புரிவதே!

கடவுளின் மெய்யான பணிவிடைக்காரர் அவருக் கென்று அற்பமான வேலையையும் செய்வதில் களிகூறுவார். இன்பத்துடனும் மகிழ்வுடனும் இரண்டாவது ஸ்தானம் வகிப்பதில் மேன்மையுண்டு. மகா மேன்மைக்குரிய ஸ்தானம் தாழ்மையுடனும் அன்புடனும் பணிபுரியும் கடைசி ஸ்தானமே!

(மௌன மணி நேரக் குறிப்புகள்).

---



## அறைகள் நூறு அமைந்த அரண்மனை

இளவரசன் சத்தியவந்தனுக்கு இருந்த ஆனந்தத்திற்கு அளவில்லை. இதற்கு முன் தன் தந்தையிட மிருந்து எக்கடிதமும் வந்தது கிடையாது ஆதலால் இக்கடிதத்திலுள்ள விஷயம் முக்கியமானது என் றறிந்திருந்தான். மேலும் ராஜ்ய சுற்றுப் பிரயாண காலத்தில் சிறு விஷயங்களைக் கவனிக்க நேர மிராது.

கடிதத்தைப் பிரித்துப் படித்தனன். அதில் பின்வருமாறு எழுதி யிருந்தது:—

"பிரிய பிள்ளாய்!

ஒரு காலத்தில் என் ராஜ்ய மெல்லாம் கட்டி ஆளும் அரச னுவாய். எவ்வாறு அரசு புரிவதெனக் கற்குங் காலம் வந்துளது. கடிதங் கொண்டுவந்த பிள்ளையாண்டான் உன்னை அறைகள் நூறு அமைந்த அரண் மனைக்குக் கூட்டிச் செல்வான்.

இதுவே உனது இல்லம். உனது இன்பம் உன்னுலேயே ஆக்கப்பெறும். உன் பெற்ரோர் புகட்டின யாவும் மறந்தனை போலும். இப்போது நீயே உன் உபாத்தியாயர்.

அன்பார்ந்த தந்தை
அரசன்."

இளவரசனுக்கு அளவிறந்த சந்தோஷம் உண்டானது. கரகோஷம் செய்தனன்.

"வா. என் அரண்மனையை எனக்குத் தா" என்று கடிதங்கொண்டுவந்த பிள்ளையாண்டானைக் கூப்பிட்டு அவசரப்பட்டான்.

அவனும் அரச குமாரனை அவசரமாய் அழைத்துச் சென்று அரண்மனையண்டை கொண்டுவந்து விட்டனன்.

"தா, சீக்கிரம் என் திறவுகோலைத் தா" என்று இளவரசன் கேட்டனன்.

"ஐயோ, அதிக விசனம். உன் தந்தையார் அத்திறவுகோலைத் தரவில்லையே! அதற்காக நீ காத்திருக்கவேண்டும் என்றனரே" என்று பிள்ளையாண்டான் கூறினன்.

"காத்திருக்கவா? எதற்காகவும் இளவரசன் எதற்காகக் காத்திருக்க வேண்டும்?" என்று கோபமாய்க் கேட்டனன் இளவரசன்.

"எனக்கு அதைப்பற்றித் தெரியாது. அரச கட்டளைப்படி நான் இப்பொழுதே போகவேண்டும்" எனப் பிள்ளையாண்டான் பொறுமையுடன் மொழிந்து அகன்றனன்.

காத்திருப்பதன்றி வேறு வழியில்லையாகையால் இளவரசன் படி மீதமர்ந்தனன். ஓர் ஏழை வந்து பிச்சை கேட்டனன்.

அதற்கு இளவரசன் கோபத்துடன் "தூரப் போ" என்று துரத்தினன்.

சிறு பிள்ளைகள் விளையாடிக் கொண்டிருந்ததை வேடிக்கையாகப் பார்த்துக் கொண்டிருந்தனன். அப்பொழுது ஒரு பெண் பிள்ளை அழுதுகொண்டு தரையைத் தடவித் தேடிப்

பார்த்துக் கொண்டிருக்கையில் "அது என்ன?" என்று இளவரசன் வினவ, "என் காலணுக் காணுமற் போய்விட்டது, தேடுகிறேன்" என்று மொழிந்தனள்.

"பரவாயில்லை" என்று இளவரசன் பட்சமாய்ப் பேசிப் பணங் கொடுத்தனன்.

"அதிக வந்தனம்" என்று கூறிப் பணத்தைப் பெற வரும்போது ஏதோ ஒன்றைக் குனிந்து எடுத்தனள். "இது யாருடையது?" என வினவினள். அது பொன்னினுற் செய்த திறவுகோலாயிருந்தது.

"ஏன்? ஒரு வேளை அரண்மனைத் திறவுகோலாயிருக்க வேண்டும்" என்று சொல்லி நன்றி கூறிப் பெற்றுக் கொண்டான்.

படியில் ஏறித் திறவுகோலைக் கதவில் வைப்பதற்குள்ளாகக் கதவு திறவுண்டது. ஆனல் அறைகள் அனைத்தும் அடைபட்டிருந்தன. சுவர்களிலிருந்த அழகிய படங்களைப் பார்த்து மகிழ்ந்தனன்.

கடைசியில் பிள்ளையாண்டான் அநேகப் பணிவிடைக்காரருடன் வந்து சேர்ந்தனன்.

"சாவிகளெல்லாம் ஏன் கொண்டு வரவில்லை?" என்று கோபமாய் வினவினன் இளவரசன்.

"நீர் தாமே திறவுகோல்களைக் கண்டெடுக்கவேண்டும் என்று உம் தந்தையார் கூறுகின்றார்" என்றனன்.

"நானே? நானெவ்வாறு கண்டெடுப்பேன்? சரி எப்படியாவது எடுக்கப் பார்ப்பேன்" எனக்கூறி வேலைக்காரியை நோக்கி பசியாற்ற ஆகாரம் ஆயத்தம் பண்ணச் சொன்னன்.

"சரி, இதோ சமையலறைச் சாவி" என்று சாவியைத் தந்தனள்.

"நல்லது," எனக்கூறி எவ்வாறு இது கிடைத்தது என அரசகுமாரன் ஆராய ஆரம்பித்தனன்.

பிள்ளையாண்டானைக் கூப்பிட்டு "பெரிய அறைச் சாவியைத் தயவுசெய்து தரமாட்டாயா?" என்று தாழ்மையாய்க் கேட்டனன்.

"ஆகட்டும்" என்று சொல்லி கதவண்டை சென்று அங்கு தொங்கிக்கொண்டிருந்த திறவுகோலைப் பிள்ளையாண்டான் எடுத்து இளவரசனுக்குக் கொடுத்தனன்.

"எனக்கு மறைந்திருந்தது அதிசயமே!" எனக் கூறி பெரிய அறைக்குட் பிரவேசித்து, விளையாட்டு சாமான்களை எடுத்து வைத்து விளையாடினன். திறவுகோலின் இரகசியத்தை அறிய ஆசித்தனன். அது கொஞ்சம் கொஞ்சமாய்த் தெளிவானது. பெண் பிள்ளைக்குப் பட்சம் காட்டினபடியால் அரண்மனையின் திறவுகோலை அவள் எடுத்துக் கொடுத்தனள். சமையற்காரியிடம் சாந்தமாய்ப் பேசினபோது அவள் சமையலறைத் திறவுகோலைக் கொடுத்தனள். பிள்ளையாண்டானோடு மரியாதையாய்ப் பேசினபோது மூன்றும் திறவுகோலகப்பட்டது.



"நான் பேசுவதைப் பற்றியும் செய்வதைப் பற்றியும் கவலையாயிருந்தால் அது நன்மை பயக்கும் என்றெண்ணுகின்றேன். இன்னும் அதைச் சோதித்து அறிவேன்" எனக் கூறி, இளவரசன் வெளியேறி வேலைக்காரரோடும், தெரு ஜனங்களோடும் பட்சமாய் பேசி அன்பின் கிரியைகளை நடப்பித்தனன். ஒவ்வொரு நற்காரியஞ் செய்யும் போதும் பேசும்போதும் அரண்மனையின் அறைகளின் கதவுகள் ஒவ்வொன்றாய்த் திறவுண்டன. பொக்கிஷங்கள் வெளியாயின.

பிறரை இன்புறச் செய்வதிலேயே சுய இன்பம் அடங்கியிருக்கிறதென்பதைப் படிப்படியாய் இளவரசன் கற்றுக்கொண்டனன். வருஷங்கள் சென்றன. நன்மை செய்யுந் தன்மையினல் உலகம் சிநேகிக்கும் அரசருக்குட் சிறந்தவனுயினன். அது அறைகள் நூறு அமைந்த அரண்மனை சஞ்சார அநுபவத்தின் பலன் என்பதை அறிந்து கொண்டனன்.

(John Martin's Big Book.)

---

# குடும்பப் பயிற்சி



## மரங்களோடு வளர்தல்

Lydia Lion Roberts.

ஆப்பிரிக்கர் நிலைமையைப்பற்றி லிவிங்ஸ்டன் சொன்னது என்னவெனில்:—"மரங்களில் பிரீதிகொண்டு அவற்றை நடுகிற எந்தக் குலத்தாரும் அவைகள் நடப்பட்ட இடத்தோடு அதிக உரிமை காட்டுகின்றனர். அதுவே அவர்களடைந்திருக்கும் நாகரீகத்தின் ஓர் அடையாளம்."

தற்காலத்தில் தரு வைத்து வளர்ப்பதின் பலனை அறிந்திருக்கிற நாம் மர மடர்ந்த காடுகளிருப்பதின் அவசியத்தையும் லிவிங்ஸ்டன் கூறிய வார்த்தைகளின் உண்மையையும் உணர்ந்தவர்களாய் நமது பிள்ளைகளுக்கு மரங்களினல் வரும் லாபத்தையும் அழகையும் பற்றிப் போதிப்போமாக! சிறு பிராயத்திலிருந்தே வானத்தை அளாவி வளரும் பசுமையான கிளைகளோடு கூடிய மரங்களின் அழகையும் அந்தஸ்தையுங் காணும்படி நமது பிள்ளைகளின் கண்களைப் பயிற்றுவிப்போமாக!

மரங்கள் மிகுந்த ஆசீர்வாதத்தைத் தரும் என்று எதிர்பார்க்கும்படி ஒவ்வொரு பிள்ளைக்கும் கற்பிக்கவேண்டும். நமது வீடுகளில் தரு நடும் வழக்கம் இருக்கவேண்டும். ஒவ்வொரு பிள்ளையும் ஒவ்வொரு மரம் நாட்டித் தண்ணீர் விட்டு வளர்க்கவேண்டும். அதில் பிரியம் உண்டாக்கவேண்டும். தருக்கள் வளருவதைப் பற்றிக் குறிப்பெழுதப் பழக்கவேண்டும்.

சர்க்கார் நடும் மரங்களைக் கவனிப்பதிலும் தங்களுக்கு உத்தரவாதம் உண்டென்று உணர இடந்தர வேண்டும். தங்கள் வீடுகளையும், வீதிகளையும், நகரத்தையும் அழகுபடுத்துகின்றனவென்ற எண்ணம் அம்மரங்களுக்காகக் கவலைப்படவும், தண்ணீர் விடவும், சேதமில்லாமல் வளரும்படி பார்த்துக் கொள்ளவும் தூண்ட வேண்டும். விசேஷமாய் சிங்கார வனங்களிலுள்ள மரங்களைப்பற்றி இவ்வித மன நிலைமை அவசியம். இது விஷயமான அறிவு புகட்டுவது அத்தியந்த அவசியம்.

பாடசாலைகளில் இவ்வித உணர்ச்சி மரங்களைப்பற்றி உண்டாகும்படி பல முறைகளைக் கையாடுகின்றனர். கதைகளும் பாட்டுகளும் மரங்களில் பிரீதி கொள்ளச் செய்கின்றன. தரு நடு விழாவொன்றும் வைத்திருக்கின்றனர். இதன்மூலமாய் மாணவர் எல்லா மரங்களையும் மதிக்கவும் நேசிக்கவும் ஏவப்படுகின்றனர். பெற்றோரும் உபாத்திமாரும் இதில் ஒத்துழைக்கின்றனர்.

பல காரணங்களோடு நாம் தருக்கள் நடுகின்றோம். கைகளின் பிரயாசத்தால் சம்பாதிக்கிறவனும் மனோ சக்தியால் உன்னத அனுபவமடைகிறவனும், சமுசாரியும், சிற்பாசாரியும், வீடே பிரதானம் என்போனும், வெளிப் பிரயாணம் செய்வோனும் மரங்களை எவ்வாறு விசேஷித்துக் கொள்ளுகின்றனர் என்று பிள்ளைகள் அறியும்படி செய்யவேண்டும். பிள்ளைகளின் அபிவிருத்தியில் கருத்துடையோரும், குணலட்சணப் பயிற்சிகொடுக்க விரும்புவோரும், பெற்றோரும், உபாத்திமாரும், சிநேகிதரும், பிள்ளைகளுக்கு மரங்களின் மேல் பிரீதியுண்டாகும்படி செய்வது ஒரு முக்கிய நோக்கமாகக் கொள்வ தவசியம். லிவிங்ஸ்டன் சொன்னதைச் சொன்னேன் லூத்தர் பர்பாங்க் சொன்னது இன்னதெனக் கூறி முடிப்பேன்.

"பொருளுடையோர், சிக்கன முறையுடையோர், கனத்துக்குரியோர், விரும்பப்படத் தக்கவர் யாரும் மரம் நடுவார்கள். பாடசாலை மணிக்கூண்டு, ஆலயத்தின் கோபுரம், மதிப்புக்குரிய கொடி எவ்வாறு நாகரீகத்தின் நிச்சயமான அறிகுறியோ அவ்வாறு பாதுகாவலுடன் வளர்க்கப்படும் மரங்களும் நாகரீகத்தைக் காட்டும் அறிகுறியே!"

---

## பாலரும் பச்சைப் பட்டாணிகளும்

(தென்னை ஓலையால் பின்னப்பட்ட மூடிக்குள்ளே பச்சை ஆடையும் பச்சைத் தொப்பியுமணிந்த ஐந்து பிள்ளைகள் மறைந்திருக்கின்றனர். பின்வரும் பாட்டை வேறு ஐந்து பிள்ளைகள் பாடும்போது பட்டாணிகளாயிருக்கும் பிள்ளைகள் நடித்துக் காட்டுகின்றனர்.)

இராக மெட்டு: "வில்லிப்பூவோடு நல் அல்லிப் பூவும் சேர்ந்து மெல்லியர் கை நிறைய"

**1**

பாடகர்— பச்சை நிறமான பச்சை மூடிக்குள்ளே
பச்சைப் பட்டாணிகள் பார்.
இச்சமயத்திலே இந்த நிறத்திலே
அச்சமின்றி அமரச் செய்தவர் யார்?



சென்னை-600 0

**2**

மூடி விரியுமுன் ஐந்து பட்டாணியும்
கூடி யிருந்தனவே;
பாடிடவும் ஓடி ஆடிடவு மின்னும்
வீடில்லாது வாடி யிருந்தனவே.

(பட்டாணிகளெல்லாம் தலையைத் தொங்க வைத்துக் கொள்ளுகின்றன.)

**3**

மஞ்சள் நிறமான மஞ்சள் மூடிக்குள்ளே
மஞ்சள் பட்டாணிகள் பார்.
கொஞ்ச நேரத்திலே மஞ்சள் நிறத்திலே
நெஞ்சம் அஞ்சா தாடிடச் செய்தவர் யார்?

(பட்டாணிகள் மஞ்சள் தொப்பியைப் போட்டுக்கொண்டு தலைகளை யாட்டுகின்றனர்.)

(ஒரு பிள்ளை தென்னை மூடியை மஞ்சள் துணியால் மறைக்கின்றது)

**4**

இத்தனை காலமாய் இத்தனை பேரையும்
நித்தமும் காத்தவர் யார்?
எத்தனை வகையாய் அத்தனை பேரையும்
பத்திரமாய் அத்தன் வைத்தே யமைத்தார்!

(பட்டாணிகள் பேசுகின்றன)

பட்டாணி 1.

என்ன அழகான உலகம்! நாம் பச்சை மூடிக்குள்ளிருந்ததால் உலக மெங்கும் பச்சையாயிருக்கும் என்று எண்ணியிருந்தோம். இப்போது பார்த்தால் எல்லாம் மஞ்சளாயிருக்கிறது.

பட்டாணி 2.

நாம் எல்லோரும் சிறு பிள்ளைகளா யிருந்தோம். இப்போது எவ்வளவு பெரியவர்களா யிருக்கின்றோம்! ஒவ்வொரு நாளும் உஷ்ணம் அதிகமாகிக் கொண்டே வந்தாற்போற் தோன்றினது.

பட்டாணி 3.

அது மாத்திரமா? வெளியே கொஞ்சம் சத்தம் கேட்டது. தண்ணீருக்குமேல் மிதந்ததுபோலிருந்தது. எனக்கு அப்போது குளிரும் வந்தது.

பட்டாணி 4.

அப்போது என்ன பயமாயிருந்தது. இப்போது எனக்கு எல்லாம் விளங்குகின்றது. சூரிய உஷ்ணம் நமது வளர்ச்சிக்குத் தேவை. அந்த மழையும் நல்லதுதான். இக்கஷ்டங்க ளில்லாமல் நாம் வளர்ந்திருக்க முடியாது. எல்லாம் நமது நன்மைக்காகவே!

(மஞ்சள் தொப்பிகள் வெளியே தெரியவேண்டும்

பட்டாணி 5.

மூடிவிரிந்திருக்கின்றது. ஓடி விளையாட என்ன ஆசை! ஓ பிள்ளைகளே! எங்களை வெளியே எடுத்துவிட மாட்டீர்களா? எங்களுடன் விளையாட மாட்டீர்களா?

(பிள்ளைகள் வந்து எடுத்துவிட்டு விளையாட ஆரம்பிக்கின்றனர்)

பாட்டு.

மெட்டு: ("டம்றி டரிற்றி")

இடது கால். பின் வலது காலை எடுத்து வைத்திடுவோம்
இடதும் வலதும் மாற்றி வைத்தே வட்டம் சுற்றிடுவோம்
பல்லவி—டம்றி டரிற்றி டம்றி டரிற்றி டம்றி டரிற்றி டா—டரி
டம்டம் டரிற்றி டம்டம் டரிற்றி டம்டம் டரிற்றி டா

(பட்டாணிகளும் பாலரும் இரு வரிசையாய் பிரிந்து கொள்ளுகின்றனர்

பாலர்—

மூடியின்றி நாடியிங்கு ஓடி வந்ததால் நீர்—எம்மோ
டாடி விளையாடிப் பாடிக் கூடிச் சேர்ந்திடுவீர்—டம்றி

பாலர்—

மண்ணைத் தோண்டி மண்ணுள் வைத்து மண்ணால் மூடிடுவோம்—

பட்டாணி—

நாம்
மண்ணைக் கண்டு மண்ணை யுண்டு மண்ணாய் மாறிடுவோம்—டம்றி

பாலர்—

தண்ணீர் மொண்டு தண்ணீர் கொண்டு மண்ணில் ஊற்றிடுவோம்—

பட்டாணிகள்—

நாங்கள்
மண்ணீரெல்லாம் உண்ணீராக்கி யுண்டு மகிழுவோம்.

பாலர்—

குச்சி கொண்டு குத்தி உங்களைக் குத்தி வைத்திடுவோம்—

பட்டாணிகள்—

உங்கள்
குச்சியுடனே உச்சி வரையும் ஓங்கி வளருவோம்

பாலர்—

எந்தவித நிர்பந்தம் இனி உங்கட்குத் தந்திடலாம்?—


பட்டாணிகள்—

எவரும்
எந்த விதமும் அந்த நிர்பந்தம் சுற்றி வந்திடலாம்.

T. A. Fenn.



## நிழல் விளையாட்டு




## விடு கவிக் கதை

1. நான் குலக்கை குத்தி வரும்
இரண்டு முரமும் புடைத்து வரும்
துடுப்பு ஒன்று துழாவி வரும்
துரை மக்களே ஏறி வர
துடப்பம் தெரு பெருக்கிவர

2. பேச்சில்லை பெரு மூச்சு விடுவான்
உணவில்லை ஊரைச் சுமப்பான்
உயிரில்லை ஓடித்திரிவான்
சாதமில்லை நீர் குடிப்பான்
கடும்பசி யில்லை கரிகளை யுண்பான்
கண்களில்லை காத தூரம் செல்வான்
குரலில்லை கூச்சலிடுவான்
மழையில் நனைவான் வெய்யிலில் காய்வான்

நோயு மடைவான் மருந்தும் புசிப்பான்
எப்படிச் சொன்னாலும் அப்படியே செய்வான்.

3. சின்ன வெங்காரம்
வீடெல்லாஞ் சிங்காரம்.

4. வண்ணான் வெளுக்காத வெள்ளை
மழை பெய்யாத தண்ணீர்
குசவன் பண்ணாத பாண்டம்

5. ஆயிரம் தச்சன் கூடி
அழகான மண்டபம் கட்டி
ஒருவன் கண்படவும்
உடைந்ததாம் பண்டபமும்.

6. பலபேருக்கு ஒரே குடுமி !

7. ஒரு ஜாடிக்குள் இரு தைலம்.




## கீர்த்தனை

இராகம்-கரஹரப்ரியா          தாளம்-ஆதி.

### பல்லவி

பணி செய்வோம் வாரீர்—பக்தரே
துணிந் தெம் தேசத்துக்கே—கிறிஸ்தவப்—பணி

### அநுபல்லவி

பணிந்தே குனிந்தே யாம்—பாழுமெளிமை
அணிந்தே சிறுமை அடைந்தோர்க்கு தவிப்—பணி

1

அணியும் ஆடை அற்றோர் அநேகர்
பிணியுடன் பீடை யுற்றோர் அநேகர்
துணிவுடனெம் உடலை—கடக் கொடுத்தேனும்
துணிப்போம் தீமை எம் கடனெனக் கணித்தே—பணி

2

துங்கன் ஏசுவின் தூய ஒளியால்
எங்கள் உள்ளத்திருள் ஓடினதால்
எங்கெங்கும் சென்று—பங்கமொன்றின்றி
அங்கெம் ஒளியால் அருளோங்கவே யாம்—பணி

3

பஞ்சம் பசியால் பாடுற்றோரை
தஞ்சமின்றித் தயங்கினோரை
கெஞ்சும் ஏழைகளை—வஞ்சகமின்றி
நெஞ்சம் குளிர நிதம் நேசித்து நற்—பணி

4

புத்தியற்றோர் பக்தியற்றோர்
சித்தியற்றோர் சக்தியற்றோர்
நித்தம் சந்தித்து யாம்—அத்தன் போல்
தத்தம் குறைகள் தவிர்க்க விரைந்து—பணி

5

இந்தியாவின் ஈடேற்றமுமே
வந்திடாதோ யாம் போற்றவுமே ?
இந்து தேசத்தார்—மைந்தன் ஏசு
சிந்தை எய்தி சீர் பெறச் சேர்த்துமே—பணி

Printed by S. T. Rhenius at the N. M. S. Press, 48 B, Peters Road, Royapettah
and Published by Rev. T. A. Fenn, College Church,
12, Venkata Maistry Street, George Town, Madras.

# வித்யாதனம்

# VIDYADHANAM

## TAMIL TREASURE CHEST

தொகுதி 1. | அக்டோபர்மீ 1937ஹு | பகுதி 7.

## பத்திராதிபர் குறிப்பு.

கடந்த மாதப் பத்திரிகை பிந்தினதற்காக விசனப்படுகின்றோம். இரு மாதப் பத்திரிகைகளையும் சேர்த்து இம்மாதம் அனுப்புகின்றோம், இனிமேல் பத்திரிகைகள் மாதந்தோறும் ஒழுங்காய் வருவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்து விட்டோம்.

படங்களும் பக்கங்களும் குறைவாய்க் காணப்பட்டாலும் உபயோகித்த சில எழுத்துக்கள் சிறியவையானதால் போதிய விஷயம் எழுதக்கூடியதா யிருந்தது. கடந்த மாதப் பத்திரிகை காலந்தவறி வருவதைத் தயவாய் மன்னிக்குமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

இம்மாதம் வெளியாகும் பிரஜாதிபதியின் பிரயாணங்கள் பதினுன்கும் பிரயோஜனமா யிருக்குமென்று நம்புகின்றோம். கற்கவேண்டியவை நான்குள. கண்டு பிடியுங்கள். இராட்சதன் ஒருவன் உங்களைச் சந்திக்க வருகின்றான். அண்ணாந்து பார்க்க ஆயத்தமாயிருங்கள். கற்பதெவ்வாறு என அறிய விரும்பினால் இதைப் படித்துப் பாருங்கள்.

இன்னும் அநேக நல்ல விஷயங்கள் இதில் வெளியாகும். நீங்களே தேடிப் பாருங்கள், என்ன விஷயம் தேவை என்பதைப்பற்றியும் எமக்கு எழுதித் தெரிவியுங்கள். உங்கள் வியாசங்களையோ ஊர் சமாசாரங்களையோ எமக்கெழுதி யனுப்பினால் இப்பத்திரிகையில் பிரசுரிப்போம். பத்திரிகைக்கு எழுதப் பழகுங்கள். முந்தின மாதம் விடப்பட்ட விஷயங்களை இம்மாதத்தில் பிரசுரிக்கின்றோம். முன் சொன்ன காஷ்மீரத்துக் கலப்பையையும் கடைசியிற் காணலாம்.

T. A. Fenn.

# உலக செய்தி

## எகிப்து

ஜூலை மீ 29உ தன் 18-வது பிறந்த தினத்தில், பாரூக் I அராபியர் ராஜ்யமாகிய தற்கால எகிப்து தேசத்திற்கு அரசனானார். ஒரு காலத்தில் ட்யுட்டன் காமன் அரசன் அணிந்திருந்த பொன் மகுடத்தால் மகுடஞ் சூட்ட யோசித்திருந்தனர். மகமதிய அரசர் எவரும் மகுடஞ் சூட்டப் பெற்றதில்லையாகையால் இது தடைப்பட்டது. துருக்கி ராஜ்யக் குடிகளாய் எகிப்தியர் இருந்தபோது கையாடின வழக்கத்தை யனுசரித்து மகுடாபிஷேகத்துக்குப் பதில் பட்டய அபிஷேகம் செய்தனர். அமெரிக்க ஐக்ய மாகாணப் பிரஜாதிபதிக்குச் செய்வதுபோல உடன்படிக்கை ஆராதனையும் நடைபெற்றது.

பாரூக் I அரசன் கொரான் வேதத்தைக் கையிலேந்தி செய்த பிரதிக்ஞையாவது:—

'எகிப்தியருடைய சட்ட திட்டங்களைக் கைக்கொள்ளவும் ஜாதியாரின் சுயாதீனத்தையும் மாகாணத்தின் ஒருமைப் பாட்டையும் பாதுகாக்கவும் சர்வ வல்லமையுள்ள அல்லாவுக்கு முன் வாக்குக் கொடுக்கின்றேன்.''

பச்சை யிலைகளாலும் கொடிகளாலும் நகரங்கள் யாவும் நன்றாய் அலங்கரிக்கப்பட்டிருந்தன. பச்சை நிறம் எகிப்தியரின் தேசிய வர்ணம். அவர்கள் கொடி பச்சை நிறம் அதில் வெண்ணிறப் பிறைச் சந்திரனும் மூன்று நட்சத்திரங்களும் தோன்றும். இவ்விதக் கொடிகள் எங்கும் பறந்தன.

ஒலி பரப்பும் கருவியின் மூலமாய் முதல் விசை அரசன் பேச நகரவாசிகள் அனைவரும் கேட்டனர். எகிப்தின் முக்கிய சாரணச் சங்க வீரன், தங்கள் புது அரசனாக, தேசச் சேவை புரிவதில் முதன்மை வகிப்பதாகக் கொடுத்த வாக்கு பின்வருமாறு:—

"என் தேசத்துக்கு யான் முதற் பணிவிடைக்காரனாயிருப்பேன் என்று வாக்குக் கொடுக்கின்றேன். எனைக்கும் என் தாய்நாட்டிற்கும் அபிமானம் காட்டிய என் எகிப்திய ஜனத்திற்கும் அந்நியருக்கும் நன்றி பாராட்டுகின்றேன்."

பாரூக் I அரசன் எகிப்தியரால் நேசிக்கப் பெற்றவர். அவர்களால் ஆதரிக்கப்படுவர். பிரிட்டிஷ்காரரைச் சார்ந்தவர். நான்கு வயது முதல் பதினைந்து வயது வரை ஆங்கிலேய அம்மணியிடம் பயிற்சி பெற்றவர். இங்கிலாந்திற்குப் போய் கல்வி கற்றவர். பொதுஜன அபிப்பிராயத்தை மதித்தவரானபடியால் மதிப்புக்குரியவராயினர்.

அவர் ஆறடி உயரம் வாய்ந்தவர். சிறந்த மேனியுடையவர். அவருடைய தாயார் நாஸ்லி இராணியார் நெப்போலியன் காலத்தில் எகிப்துக்கு வந்த சேனாதிபதிகளுள் ஒருவருடைய வம்சத்தைச் சேர்ந்தவர்களாதலால் அவர் நல்ல நிறமுடையார்.

கணித சாஸ்திரத்தில் கெட்டிக்காரர். பண்டைய காலக் காரியங்களில் கருத்துடையவர். முத்திரைத் தலைகள், நாணயங்கள், பதக்கங்கள் சேர்ப்பதில் பிரீதியுடையார். படம் பிடிப்பதிலும் விளையாடுவதிலும் அவருக்கு அதிகப் பிரியமுண்டு. நீராவி இயந்திரம் ஓட்டுவதில் பயிற்சியுண்டு.

பாரூக் என்றால் "சரி எது தப்பிதம் எது என்று நிதானிக்கும் சக்தி வாய்ந்தவன்" என்றர்த்தங் கொள்ளும்.

400 வருஷ அந்நிய ஆளுகை எகிப்தில் ஓய்ந்து போயிற்று. 1882௵ வரை துருக்கியாண்டனர். அதன்பின் பிரிட்டிஷ்காரர் ஆண்டனர்.



பாரூக் I அரசருடைய தந்தையார் முதல்முதலாக நாட்டை நன்றாய் ஆண்டனர். 14 வருஷத்துக்குள்ளாக கடந்த 2000 வருஷங்களில் செய்யப்பட்ட அபிவிருத்தியை விட அதிகம் செய்யக்கூடியவராயிருந்தனர்.

தந்தையைப் போன்று மைந்தனாயிருந்தால்
எந்த விதமும் நன்மை யுண்டாகும்.

---

## அமெரிக்கா ஐக்கிய மாகாணம்

சீனாவுக்கும் ஜப்பானுக்கும் யுத்த நிலை ஏற்பட்டது என்று இன்னும் ரூஸ்வெல்ற் பிரஜாதிபதி பிரசுரிக்கவில்லை. சீனாவிலிருந்து வரும் செய்திகள் ஒன்றுக்கொன்று முரண்பட்டவையா யிருக்கின்றன. திட்டவட்டமான நோக்கம் காணப்படாதபடியால் விரோதங்கள் சீக்கிரம் முடிவுக்கு வரலாம் என்று எதிர்பார்க்கின்றார்.

அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் நீடித்த சிநேகமுண்டு. ஆகையால் ஜப்பானைப் பற்றி சந்தேகம். ஜப்பானுக்கு அநுகூலமாக ஒன்றும் செய்யமாட்டார். நடுநிலை வகித்தால் சீனாவுக்கு உதவிசெய்ய முடியாது. யுத்தத்துக்கு வேண்டியவற்றை நிறுத்தினால் ஜப்பானுக்கு க்ஷேமம், சீனாவுக்கு மோசம். இவற்றைச் செய்யவும் வாங்கவும் ஜப்பானுக்குத் திறமையும் திரவியமுமுண்டு. எனினும் நீடித்த யுத்தஞ்செய்ய வேண்டுமானால் கடன் வாங்காமற் தீராது. அதற்காகவே ஜப்பான் யுத்தநிலை யேற்பட்டதாகப் பிரசுரிக்கவில்லை. இதன்பலனாக அமெரிக்கா நடுநிலை வகிக்கக் கூடாதிருக்கின்றது.

---

## சீனா ஜப்பான் சண்டை

ருஷியாவோடே சண்டை போட வழியில்லை என்று கண்டு சீனாவோடே சண்டை யிழுக்க ஜப்பான் முன் வந்தது. பைப்பிங் பட்டணத்துக் கருகிலுள்ள பாகத்தை அபகரிக்க எண்ணி ஜப்பான் வம்புக்கு வந்தது. சீன வீரர்களை ஜப்பானியர் வைத்திருந்தனர். சீன வீரர் ஜப்பானுக் குதவி செய்துவந்த சேனா வீரனுக்குக் கீழ்ப்படிய மறுத்து ஜப்பானியர் தங்களுக்குக் கொடுத்த யுத்தாயுதங்களைப் பிரயோகித்து எதிர்த்தனர். சீனர் துரோகம் வெளியானது. ஜப்பானியர் கோபப்பட்டபோது "சீனர் சீனரே" என்று பதிலுரைத்தனர். இவ்வாறு பல இடங்களிற் சீனர் துரோகம் செய்து ஜப்பானியரை முன்னேற விடவில்லை.

சியாங் காய் ஷெக் கூறுவது ;—

"கடைசி மட்டும் கட்சிகட்ட சீனா காத்துக்கொண்டிருக்கின்றது. ஆதி முதல் அந்தம் வரை எம தாளுகையின் நோக்கம் ஒன்றே. எம் நாட்டில் எப்பாகத்தையும் ஈந்திடோம் எம் ஆளுகைக்குள் எதையும் அபகரிக்க இடங் கொடோம். கைகலந்து யுத்தம் புரியினும் புரிந்து சீனாவைக் காப்பதற்காக சர்வ தேசச் சைனியம் திரட்டுவோமாக !"

ஜப்பான் தேசத்திற்கு நம்பிக்கையற்றுப் போயினும் சைனியந் திரட்டுவதில் கொஞ்சமும் குன்றாதுழைக்கின்றது.

---

## சீனாவின்மேல் ஜப்பான் படையெழுச்சி

1894ஆம் முதல் ஜப்பான் சீனாவுக்குள் பிரவேசித்து நாடு சேர்க்க ஆரம்பித்தது. அதன் விபரம்:—

1894—சீனாவைத் தோற்கடித்து பார்மோசாத் தீவைப் பற்றிக்கொண்டது.

1905—ருஷியாவைத் தோற்கடித்து மஞ்சூரியாவைச் சேர்த்துக் கொண்டது.

1910—கொரியாவைச் சுய அரசுக்குள்ளாக்கிச் சேர்த்துக் கொண்டது.

1915—ஜப்பான் ஜெர்மனியிடமிருந்து ஷான்டங் துறைமுகப் பட்டணத்தை அபகரித்தது. அது சர்வதேச சட்டத்துக்குள்ளடங்கித் திருப்பிக் கொடுக்கப்பட்டது.

1932—மஞ்சூரியாவைப் பிடித்து தனக்குக் கீழடங்கின மஞ்சுககூவோ ராஜ்யத்தை ஸ்தாபித்தது.

1933—வட சீனாவிலுள்ள ஜெஹோலைப் பிடித்தது.

அது முதல் பைப்பிங், சக்கார், ஹோப்பை, சயூபியான், ஷான்ஸி, ஷான்டங் என்னும் இடங்களைச் சுற்றிலும் தன் வசப்படுத்திக் கொண்டே வந்தது. ஜப்பானுக்குள்ளடங்கின சீன ராணுகையை ஏற்படுத்தி வந்தது. வட சீனாவிலுள்ள சீனரெல்லாரும் தங்கள் வீரருக்குள் அடங்காமல் விரோதம் பண்ணத் துணிந்து நிற்கிறதாக ஜப்பானிய காரிய ஆலயத்தில் வெளியாகின்றது. இந்த உள்நாட்டுக் கலகத்தில் ஜப்பானுக்குப் பங்குமில்லை பாகமுமில்லையென்று ஜப்பானிய அதிகாரி ஒருவர் கூறுகின்றார்.

---

## தீண்டாமை வேண்டாமே!

மேல்ஜாதிப் பிள்ளைகளும் கீழ்ஜாதிப் பிள்ளைகளும் பேசி விளையாடிக் கொண்டிருந்தபோது மேல்ஜாதிப் பிள்ளைகளின் தாயார் கீழ்ஜாதிப் பிள்ளைகளைக் கோபித்துத் துர்த்தியும் மறுபடியும் மறுபடியும் அப்பிள்ளைகள் கூடி விளையாடினர்.

"எங்கள் அப்பா பட்டணத்திற்குப் போயிருக்கிறார்கள். எனக்கு பொம்மை வாங்கிக்கொண்டு வருவார்கள்" என்று அக்காள் கூறத் தம்பி தனக்குப் பந்து வாங்கிக்கொண்டு வருவார்கள் என்று சொன்னான். கீழ்ஜாதிப் பிள்ளை ஒன்று தன் தகப்பனார் தனக்குக கடலை வாங்கிக்கொண்டு வருவார் என்று சொன்னாள்.

இதற்குள்ளாகத் தாயார் வந்து திட்டி அனுப்பிவிட்டனள். தன் பிள்ளைகளை வீட்டிற்குள்ளே போகும்படி சொன்னாள். இது நாள்தோறும் நடக்கும் காட்சி. பிள்ளைகள் பேதமறியாப் பிள்ளைகளே!

ஒரு மாதமாயிற்று. தாயார் மிகவும் வருத்தத்துடன் அழுதுகொண்டிருந்ததைப் பார்த்த மகன் "அம்மா ஏன் அழுகிறீர்கள்?" என்று கேட்க, தாயார் "அப்பாவைக் காணோம். மூன்று வாரங்களுக்கு மேலாகிறது என்ன நேரிட்டதோ?" என்று ஏங்கினள்.

"அதோ அப்பா வருகின்றார்கள்" என்று பையன் கூவ, தாயார் மறுத்து "என்ன? உன்னப்பா நொண்டியா? நன்றாய்ப் பார்" என்றனள். பையனோ ஓடித் தன் அப்பாவைக் கண்டு காரியத்தையெல்லாம் அறிந்து வீடு கொண்டுவந்து சேர்த்தனன்.

தாயார் தாகசாந்தி செய்தனள். தகப்பனார் சாப்பிடும்போது அவர் தன்னிடம் சொன்னவற்றை ஒன்றும் விடாமல் எடுத்துரைத்தனன் தம்பி. அவரை எவ்வாறு கள்ளர் அடித்துப் போட்டனர் என்பதையும் தன் சொந்த பந்துக்களும் பெரிய மனுஷரும் எவ்வாறு கவனியாததுபோல விலகிப் போயினர் என்பதையும் கடைசியில் ஒருவன் உதவிசெய்தது எவ்வாறு என்பதையும் விஸ்தரித்துக் கூறினன்.





உதவிபுரிந்தவனுக்கு என்ன செய்யலாம் என்று தகப்பனார் கேட்டனர். பிள்ளைகளில் ஒரு மகள் "அவருக்கு மாலை போடவேண்டும்" என்று சொன்னாள். வேறொரு பிள்ளை "அவருக்கு மோதிரம் போட வேண்டும்" எனப் பையன் "அவரையும் அவருடைய மனைவி மக்கள் யாவரையும் அழைத்து விருந்து கொடுக்க வேண்டும்" என்றான். "தாயார் சம்மதிப்பார்களா?" என்று தகப்பனார் வினவ, அம்மாளும் "அப்படியே ஆகட்டும்" என்று சம்மதித்தனர். ஒருவன் ஓடி மாலை வாங்கிக்கொண்டு வந்தான். அவர் யார், அப்பா? நான் போய் கூட்டிக்கொண்டு வருகிறேன்" என்று தம்பி கேட்டான். அதற்கு, அவர் "அம்மா உங்களோடு விளையாடக் கூடாது என்று சொல்லித் திட்டி சில பிள்ளைகளைத் துரத்திவிடுவார்களே அவர்களுடைய அப்பாதான் எனக்குதவி செய்த நல்ல மனுஷன்" என்று சொன்னான். தம்பி ஓடிப் போய் அவரையும் அவருடைய மனைவி மக்களையும் கலப்பு விருந் தருந்த அழைத்து வந்தான் அவனுக்கும் அவன் வீட்டாருக்கும் இவர்கள் வீட்டில் விருந்து நடந்தது பிள்ளைகள் அவருக்கு மாலையிட்டு மோதிரம் போட்டுத் தங்கள் நன்றியைக் காட்டினர் அன்று முதல் "தீண்டாமை வேண்டாமே" என்றாயிற்று.

T. A. Fenn

---

## சித்தியுள்ள ஜீவிய பிரமாணங்கள்

கீழ்வரும் கற்பனைகள் 150 ஆண்டுகளுக்கு முன் ஜியார்ஜ் உவாஷிங்டன் செய்தருளியதாகச் சொல்லப்படுகின்றன. அக்கற்பனைகள் யாவும் அக்காலத்திற்குரியன போல் இக்காலத்திற்கும் ஏற்றவை.

1. மற்றவர்கள் மத்தியில் மனதிற்குள்ளே பாடி இராகம் போடலாகாது. கையுங்காலும் தாளம் போடுவதும் தவறு.

2. மற்றவர்கள் பேசுங்கால் உறங்கலாகாது
மற்றவர்கள் நிற்குங்கால் உட்காரலாகாது
மௌனம் சாதிக்க வேண்டும்போது பேசலாகாது
மற்றவர்கள் தாமதிக்குங்கால் நடந்து செல்லாதே.

3. மற்றவர்கள் காரியங்களை யறிய ஆவல் கொள்ளாதே
இரகசியம் பேசுகிறவர்களுக்குச் சமீபமாய் நெருங்காதே.

4. ஆகாரம் அருந்துவதில் ஆனந்தங் கொள்வதுபோல்
பாவித்துக் கொள்ளாதே—பேராவலுடன் கூடிய பெருந்தீனி
வேண்டாம்—மேசையின் மேல் சாய்வது நன்றன்று
அருந்தும் ஆகாரத்தைப் பற்றிக் குற்றங்கூறேல்.

5. பேசும்போது புறங்காட்ட வேண்டாம்
மற்றவர்கள் வாசிக்கவோ எழுதவோ உபயோகிக்கும் மேசையை
ஆட்டவேண்டாம். எவர்மீதும் சார வேண்டாம்.

6. இன்ப காலத்தில் துற்காரியம் பேசேல்—அக்காரியம்
பந்தியிலும் பேசலாகாது. எவரேனும் பேசினும்
வேறெக் காரியத்தையுங் கொண்டு அப்பேச்சை மாற்றுக.

7. உன் வரவு நல்வரவாகுமோ என்ற நிச்சமில்லா இடத்திற்கு ஏகவேண்டாம்.

8. இயலாத காரியத்தை எடுத்துச் செய்யாதே—
செய்த வாக்கை நிறைவேற்றக் கவனமா யிரு.

9. உன்னிடம் கேட்காதவருக்கு புத்தி கூறுதே
விரும்பினோர்க்குச் சுருக்கமாய் எடுத்துரை.

10. முன்னுக்கு நிற்காதே. மரியாதையும் சிநேகமும் விசேஷம்.
மரியாதை காட்டுவதிலும், பிறர் பேசக் கேட்பதிலும்
பதிலுரைப்பதிலும் முதன்மையா யிரு.

11. தன் அலங்காரத்தையே கண்டு களிக்கும் மயிலைப் பின்பற்றுதே
உடை விஷயமாய் சகலமும் சரியாய் இருக்கின்றனவா என்று
சதா பார்த்துக் கொண்டே காலங் கழிக்காதே.

12. ஊர்ப் பேச்சை நம்பாதே. உண்மையை அறியுமுன்
ஒரு செய்தியையும் உரையாதே.

13. ஒருவன் செய்வன யாவும் செய்த பின் சித்தி கிடைக்காவிட்டால்
செய்தவனை நொந்து கொள்ளாதே.

14. பிறரிடங்காணும் மாசு மருக்களை உற்று நோக்காதே
அவை எவ்வாறு ஏற்பட்டன வென்றும் வினவாதே.

---



## கற்கவேண்டியவை

1. சிரிக்கக் கற்க. நன் மருந்தைவிடப் புன்சிரிப்பு நல்லதாம்.
2. நல்ல கதைகள் சொல்லக் கற்க. வியாதியுள்ளோர் அறையில் பிரவேசிக்கும் சூரிய கதிர்போல் கதைகள் வரவேற்கப்படும்.
3. உன் கஷ்டங்களை உன்னிடமே வைத்துக்கொள்ளக் கற்க. உலகம் அவற்றைக் கவனிக்க நேரமில்லை.
4. முறுமுறுப்பதை விட்டுவிடக் கற்க. உலகில் அநுபவிக்கக்கூடிய நன்மைகளைக் காணக் கண்ணில்லாவிட்டால் தீமைகளை உன்னோடே வைத்துக்கொள்.

(கனடா தேசப் பையன்)

---

## இராட்சதர்

கோலியாத் ஒன்பது அடி ஒன்பது அங்குலம் உயரம் என்றும் பாஷானின் ராஜாவாகிய ஒகு ஒன்பது அடி உயரம் என்றும் வேதம் கூறுகின்றது. இவர்களை விட அதிக உயரமாய் வளரும் சக்திவாய்ந்த ஒரு பையன் அமெரிக்காவில் இருக்கின்றான். அவனுக்கு வயது பத்தொன்பது. அவன் உயரம் எட்டரை அடி. அவன் எடை 435 பவுண்ட். இன்னும் வளர்ந்துகொண்டே போகின்றான்.

அவனுடைய முன்னோர்களெல்லாரும் சரியான சாதாரண வளர்ச்சியுடையோர். அந்தப் பையன் பிறந்தபோது எடை எட்டரைப் பவுண்ட். ஆறு மாதத்திற்குள் அவன் எடை முப்பது பவுண்ட் மட்டும் ஏறினது. அவன் ஒன்பது வயதானபோது ஆறடி உயரமும் நூற்றெழுபத்தெட்டுப் பவுண்ட் எடையுமுள்ளவனானான். வளர்ச்சி தவிர மற்றக் காரியங்களில் சாதாரண மனுஷனாய்த் தானிருக்கின்றான்.

வளர்ச்சிக் கோளத்தின் மிதமிஞ்சின கிரியையினால் இந்நிலைமை ஏற்படுகின்றது. இச்சிறு கோளம் மூளைக் கடியிலிருக்கின்றது. வயதுக்கு வரும்போது இக்கோளம் கெட்டுப் போகும். அக்காலத்தில் அக்கோளம் கிரியை நடப்பிக்குமானால் மிதமிஞ்சின வளர்ச்சியும் பூட்டுகளின் தளர்ச்சியும் ஏற்படும். அதற்குப் பின்னால் கிரியை நடப்பித்தால் கரம், கால், தலை, நாடி முதலிய பாகங்கள் மட்டுக்கு மிச்சமாய் பெரிதாகி விபரீதமாய்த் தோன்றும்.

பிறப்பிலிருந்தே இப்பையனுக்கு இக்கோளம் கிரியை நடப்பித்து வருகின்றபடியால் இவன் வளர்ச்சியில் சமநிலை காணப்படுகின்றது. இவனுடைய சரீர உறுப்புகள் யாவும் அளவுப் பொருத்தமாய் அமைந்திருக்கின்றன.

---

# கற்கும் முறை

### Mary Jean Daily

இந்தியாவில் எங்கு சென்றாலும் உபாத்திமார் ஒரு குறை கூறுகின்றனர். அதாவது "மாணவருக்குக் கற்கும் முறை தெரியவில்லை" என்பதே. இவ்விஷயத்தில் கஷ்டப்படுவோருக் குதவியாக சில குறிப்புகளைச் சுருக்கமாக இங்கு எடுத்துரைப்போம்:—

1. சுற்றுப்புறம்—நன்றாய் படிப்பதற்கு படிக்கும் அறை சுத்தமாயும், அழகாயும் கண்ணைக் கவரத்தக்கதாயும் அமைக்கப்பட வேண்டும் கலிபோர்னியா சர்வகலாசாலையில் வேலை செய்யும் பிரௌன் பண்டிதர் கூறுவது யாதெனில் "நெருக்கமான வசதியற்ற அறையில் படிக்கும் மாணவர் நல்ல அழகான அறையில் இருக்கிற மாணவர் படிக்கிற அளவு படிக்கக்கூடாமல் இருக்கின்றனர்" லெயிட் பண்டிதர் தன் வேலை சித்திக்காக தன் அறையை பூச்செடித் தொட்டிகள், ஜன்னல் திரைகள் முதலியவற்றால் அலங்கரிப்பதாகவும் கண்ணைக் கவரும் வர்ணம் பூசி அழகுபடுத்துவதாகவும் கூறுகின்றனர்.

அறைக்குப் போதிய வெளிச்சம் தேவை என்பது யாவரு மறிந்த விஷயம். கண் மட்டத்திற்கு மேலேயிருந்து இடது பக்கமாய் வரும் வெளிச்சமே நல்லது. அதிக பிரகாசம் உதவாது. சம ஒளி எங்கும் பரவவேண்டும். ஆனதுபற்றி மேசை தீபங்கள் அவ்வளவு திருப்திகரமானதல்ல.

சுத்த ஆகாயம் அவசியம். அதிக உஷ்ண நிலை கல்விக்கு உதவாது. குளிரும் உதவாது. ஆனால் வேலை நன்றாய் செய்யக் குளிர்ந்த ஆகாயம் தேவை. காற்று வீசும் பக்கம் ஈரத் துணியைக் கட்டினால் குளிர்ந்த ஆகாயம் கிடைக்கும்.

கவனத்தைச் சிதறடிக்கும் காரியங்கள் கற்கும் அறைப் பக்கம் இருக்கக்கூடாது. சிலர் எத்தனை காரியங்கள் தங்கள் கவனத்தை சிதற வைக்கக் கவர்ந்திழுந்தாலும், 'கருமமே கண்ணாயினர்' என்றவாறு சித்தியடைகின்றனர். ஆயினும் அது அவர்கள் சத்தைக் குறைக்கின்றது. கவனத் தாழ்ச்சியுண்டாக்கும் காரியங்களைக் குறைப்பது நல்லது.

2. சரீர நிலைமை—நல்ல வேலை செய்ய வேண்டுமானால் நமது சரீரம் சரியாயிருக்க வேண்டும். நல்ல போதுமான ஏற்ற உணவு உட்கொள்ள வேண்டும். வியாதி யிருக்கக் கூடாது. நன்றாய்த் தூங்க வேண்டும்.

அமெரிக்காவிலுள்ள சர்க்கார் பள்ளிக்கூடங்களில் ஆகார விஷயமாய் அதிக சிரத்தை எடுத்துழைக்கின்றனர். காலை ஆகாரமும் மதிய ஆகாரமும் பாடசாலைகளிற் கொடுக்கப் பட்டதின் பலனாக ஏழைப் பிள்ளைகள் முன்னிலும் அதிகமாய் நன்றாய்ப் படிக்கின்றார்கள் என்று அறிக்கைகள் கூறுகின்றன. வீட்டில் அருந்தும் ஆகாரத்தைப் பற்றிக் கவனிக்க இடமில்லை. ஆகையால் அனாதை சாலைகளிலும் போர்டிங் பாடசாலையிலும் சாஸ்திர முறைப்படி ஆகாரம் அளிக்கும்போது பிள்ளைகள் நல்ல வேலை செய்யக்கூடியவர்களா யிருககின்றனர்.

மதுபானம், புகையிலை, காப்பி, தேயிலை முதலியன கல்வி கற்கும் சக்திக்கு எவ்வளவு தூரம் பிரதிகூலம் என்பதை யறியப் பிரயாசப்பட்டதில், லெயிட் பண்டிதர் கண்டுபிடித்ததாவது.



பீர் என்னும் பானத்தில் 100க்கு 27·5 விதம் மாத்திரம் லாகிரி வஸ்து இருந்தாலும் அது மாணவருக்குக் கை நடுக்கத்தை யுண்டாக்குகின்றது. தசைநார் வேகமாயும் திட்டவட்டமாயும் வேலை செய்யமுடியாது. கூட்டல் வேலை மெதுவாய்த்தான் செய்யமுடியும். சீக்கிரம் கல்வி கற்றுக் கொள்ளவும் முடியாது. புகையிலையும் கல்வி கற்கும் சக்தியைக் குறைக்கின்றது தேயிலையும் காப்பியும் அளவாகச் சாப்பிட்டால் மனோ சக்தியை விருத்தி பண்ணுகின்றனவென் றும் அதனால் பின்னாற் கெடுதி யொன்றுமில்லையென்றும் கண்டு பிடித்திருக்கின்றனர்.

எவ்வளவு நேரம் தூங்குகிறோம் என்பது அல்ல என்னவிதமான தூக்கம் நம்முடையது என்பதே கேள்வி. பொதுவாக சொன்னால், பெரியவர்கள் ஒவ்வொரு நாளும் இரவில் எட்டு மணி நேரம் தூங்கவேண்டும். பிள்ளைகள் ஒன்பது அல்லது பத்து மணி நேரம் தூங்கலாம். முதல் இரண்டு மணி நேரம் நல்ல தூக்கமுண்டு. தசை நார்கள் யாவும் தளர்ந்திருக்கும். இரத்த ஓட்டமும் சர்ம உணர்ச்சியும் மட்டாயிருக்கும். மதியம் ஒரு மணி நேரம் தூங்கக் கூடுமானால் இரவில் தூக்கம் குறைந்தாலும் பரவாயில்லை. மதியம் அரை மணி நேரம் தூங்குவது இரவில் பின்னேரம் மூன்று அல்லது நான்கு மணி நேரம் தூங்குவதற்குச் சமானம் நாள்தோறும் மதியம் கால் மணி நேரம் தூங்கினாலும் மனோ சக்தி விருத்தியாவதற்கு ஏதுவுண்டு. ஒழுங்காய் அரை மணி நேரம் மாத்திரம் மதியம் தூங்கப் பயிற்சி கொடுப்பது மிகவும் நல்லது எழுந்தவுடன் நல்ல தேகாப்பியாசம் செய்ய வேண்டும்.

வழக்கமில்லாத வேலை செய்யும்போது களைப்பு உண்டாகும். நமது களைப்பு அடிக்கடி பிரீதியின்மையினா லுண்டாகின்றது. பின்னேரம் கணக்குச் செய்வதைவிட முன்னேரம் செய்வது நூற்றுக்கு ஐந்து விதம் அதிக சித்தி தரும் என்று வின்ச் பண்டிதர் கண்டு பிடித்திருக்கின்றார். முன்னேரம் பத்தரை மணி முதல் பதினொன்றரை மணி வரை மனோ சக்தி யுபயோகிக்கும் வேலைக்கும் பின்னேரம் மூன்று மணி முதல் நான்கு மணி வரை சரீர சக்தி உபயோகிக்கும் வேலைக்கும் ஏற்ற வேளை என பைல் பண்டிதர் கண்டு பிடித்திருக்கின்றார். மாணவருக்குள் களைப்புக் காண்பதரிது. பிரீதியுண்டாக்குங் காரியங்களை உபயோகித்து மாணவர் தளர்ச்சியை மாற்றி வேலைக்குப் போதிய சக்தியைப் பெற்றுக்கொள்ள இடங் கொடுப்போமாக!

---

## குள்ளனும் இராட்சதனும்

வழுவழுப்பான ஒரு சுவரில் பலமான ஒரு கதவிருந்தது. அதனண்டை ஒரு குள்ளன் உட்கார்ந்திருக்கிறதை ஓர் இராட்சதன் கண்டனன்.

"அது யார்? ஏன் இவ்வளவு விசனமாயிருக்கின்றாய்?" என்று இராட்சதன் குள்ளனைப் பார்த்து வினவினன்.

"கதவும் அடைபட்டுப் போயிற்று. சுவரும் ஏற முடியாதபடி வழுவழுப்பாயிருக்கின்றது. மலைக்கப்பாலுள்ள பட்டணத்தில் கூடும் சந்தைக்குப் போகவேண்டும். அப்படியானால் என் செலவுக்குக் கொஞ்சம் பணம் சம்பாதிக்கலாம். இப்பொழுது அதற்கு வழியில்லையே என்று கலங்குகின்றேன்" என்றனன் குள்ளன்.

"இதற்குத்தானா?" என்று கூறி இராட்சதன் அவனை ஒரு பிடியாய்ப் பிடித்துத்தூக்கி சுவருக்கு அப்பாலுள்ள ஒரு மேடையில் விட்டுவிட்டான். தானும் சுவரை எளிதில் தாண்டிச் சென்றனன்.

"நீ ஒன்றுக்கும் உதவாத பொடியன். சந்தையிலோ வேறு எந்த இடத்திலோ உன்னால் என்ன பிரயோஜனம்' நான் சந்தைக்குப் போனால் என் பருமனையும், சக்தியையும் பார்க்கிற எவரும் அதிசயித்து என்னைப்பற்றியே பேசிக்கொண்டிருப்பர். நீயும் அங்கு வந்தால் எவரும் என்னைப் பார்ப்பரே ஒழிய உன்னைக் காணார். ஆனால் நீ இன்றைக்கு அங்கு வந்து சேர்ந்துகொள்ள முடியாது ஆகையால் வந்தனம். நான் போய் வருகின்றேன்" என்று இராட்சதன் குள்ளனிடம் கூறினன்.

இராட்சதன் பெரிய பெரிய எட்டு வைத்து நடந்தனன் குள்ளனோ மெதுவாக எட்டு எடுத்து வைத்துத் தொடர்ந்தனன். இராட்சதனோ கண்ணுக்கெட்டாத தூரத்தில் மறைந்தனன். எனினும் அன்று பின்னேரம் ஓர் உயர்ந்த சுவரிலுள்ள இரும்புக் கம்பிக் கதவண்டை இராட்சதன் விசனத்தோடு உட்கார்ந்திருக்கிறதைக் குள்ளன் கண்டனன்.

"அது யார்? ஏன் இவ்வளவு துக்கம்? எனக் குள்ளன் கேட்டனன்.

"நான் ஏறிப் போகக்கூடாதபடி இச்சுவர் அவ்வளவு உயரமாயும் வழுவழுப்பாயும் இருக்கின்றது" என்று இராட்சதன் சொன்னான்.

"பூட்டின் வாயிலே சாவி யிருக்கின்றதே. அப்பூட்டைத் திறந்து போகலாமே?" என்று குள்ளன் கேட்க,

"அந்தப் பூட்டு அதிக உயரத்திலிருக்கின்றமையால் எனக்குக் கூட எட்டவில்லை. திறப்பதெவ்வாறு? என வினவினன் இராட்சதன்.

"இரும்புக் கம்பிக் கதவுதானே. கம்பிகளை வளைத்து உட்பிரவேசிக்கலாமே!" என்று குள்ளன் கேட்க,

"என் சக்திக்கும் மிச்சமான கம்பிகளாயிருக்கின்றன. வளைப்பதெவ்வாறு?" என இராட்சதன் வினவினன்.

"சரி,பருமனிலும் பிரயோஜனமில்லை உயரத்திலும் பிரயோஜனமில்லை. பார்" என்று சொல்லிக் குள்ளன் கம்பிகளுக் கூடே நுழைந்தனன். "இதோ பார். இங்கு வந்துவிட்டேன். உனது சரீரம் உட்பிரவேசிக்க உதவாது. நானே சந்தைக்குப் போகக் கூடியவனானேன். வந்தனம் போய் வருகின்றேன்" என்று கூறிக் குள்ளனகன்றனன்.

"சற்றுப் பொறு. அந்தச் சுவரைத் தாண்ட நான் உனக்குதவினேன். இந்தச் சுவரைக் கடக்க நீ உதவிசெய்ய வா" என இராட்சதனவனை அழைத்தனன்.

''ஒன்றுக்குமுதவாத பொடியன் உனக்குதவுவதெவ்வாறு?'' நண்பா! அப்படித்தானே பேசினாய். நீ என்னைத் தூக்கி விட்டவண்ணம் நான் உன்னைத் தூக்கிவிட முடியுமா?"



"தயவுசெய்து திரும்பி வா. நான் உன்னைத் தூக்கி சுமப்பேன். அப்படியானால் சாவி உனக்கு எட்டும். நீ திறக்கலாம். நானும் உட்பிரவேசிக்கக் கூடும்" என்று இராட்சதன் அழைத்தனன்.

அவ்வாறே குள்ளன் திரும்பிப் போனான். இராட்சதன் அவனைத் தூக்கி சுமக்க, குள்ளன் சாவியைப் பிடித்துத் திருப்பிக் கதவைத் திறந்தனன். இருவரும் உட்பிரவேசித்து வழி நடந்தனர்.

"சுய முயற்சியால் ஒருவன் சகலத்தையும் செய்யமுடியாது என்று அறிந்துகொண்டாயா? ஒருவருக்கொருவர் உதவிசெய்து ஒருவரோடொருவர் ஒத்துழைத்தால் எவ்வளவோ காரியங்கள் சித்தியாகச் செய்யலாம். பருமனும் பெலனுமிருந்தால் போதாது" என்று குள்ளன் கூறினன்,

இருவரும் ஒருவருக்கொருவர் உதவி செய்வதாக ஒப்புக்கொண்டு சந்தைக்கேகினர்.

---

## சரியான ஞாபக சக்தி

சரியான ஞாபக சக்தி இன்னது என இன்று பேச விரும்புகின்றேன். கண், காது, கரம், நாவு முதலியவற்றைக் காண்கின்றதுபோல ஞாபக சக்தியைக் காணமுடியாது. ஆயினும் நமது ஜீவியத்தில் அது முக்கியமான ஒரு காரியம்.

நல்ல ஞாபக சக்தியிருப்பது நல்லது. இச்சக்தி யிருக்கும் பையன்களும் பெண்களும் அதிஷ்டசாலிகள். ஜீவிய காலமெல்லாம் இது உதவி செய்யும். காரியங்களை எளிதிற் செய்ய ஏதுவுண்டாக்கும். நல்ல ஞாபக சக்தியிருப்பது நல்லதுதான். ஆயினும் சரியான ஞாபக சக்தியிருப்பது அதைவிட மேலானது.

சரியான ஞாபக சக்தி யென்றாலென்ன? மறக்கவேண்டியவற்றை சிலர் நினைத்துக் கொண்டே யிருக்கின்றனர். ஞாபகத்தில் வைக்கவேண்டியவற்றை மறந்து விடுகின்றனர். பிறரிடத்திலிருந்தடைந்த துன்ப துயரங்களை சதா ஞாபகப்படுத்திக்கொண்டேயிருக்கின்றனர். பிறரிடத்திலிருந்து பெற்றுக்கொண்ட நற்காரியங்களை மறந்துவிடுகின்றனர். அவர்கள் நன்றிசெலுத்தவும் மறந்துவிடுவர்.

இப்படிப்பட்ட ஞாபக சக்தி உங்களுக்கு வேண்டாம். சரியான ஞாபக சக்தி மறக்க வேண்டியவற்றை ஞாபகப்படுத்தும். அற்ப சொற்ப கஷ்டங்களை மறக்கும். சரியான ஞாபக சக்தி ஞாபகப்படுத்த வேண்டியவற்றை ஞாபகத்தில் வைக்கும். தன்னையே மறக்கவேண்டும் என்று எண்ணும். பிறரை மறவாது நினைக்க வேண்டும் என்றும் எண்ணும்.

அந்நியரை உபசரிக்க நாடி அவர்களுக்குப் பட்சம் காட்ட நினைக்கவேண்டும் என்றும் ஒரு ஞானி கூறுகின்றார். அந்நியரை சில வேளைகளில் நாம் பட்சமாய் நடத்துகிறதில்லை. அவர்களுக்குக் கொடுக்கவேண்டிய சிலாக்கியங்கள் கொடுக்கிறதில்லை. அவர்களிடமிருந்து அடைவது அதிகம். அவர்களுக்குக் கொடுப்பது கொஞ்சம்.

அந்நிய நாட்டில் எப்போதாயினும் நீங்கள் அந்நியராயிருந்ததுண்டா? புதுப் பிள்ளைகளாய்ப் புதுப் பள்ளிக்கூடத்துக்குப் போனபோது உங்கள் அநுபவம் என்ன. மற்றப்பையன்களும் பெண் பிள்ளைகளும் ஒருவரோடொருவர் சிநேகமாயிருந்து, ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் சிநேகிதரைத் தெரிந்துகொண்டபோது உங்களுக்கு இடமில்லையென்று எண்ணவேண்டியதிருந்ததல்லவா? உங்கள் அநுபவத்திலிருந்து புதுப்பிள்ளைகளுக்கு உதவி செய்யக் கற்றுக் கொள்ளுங்கள். அந்நியனுப் விடப்பட்டால் இதயம் எவ்வாறிருக்கும் என்றறிந்திருக்கிறபடியால் புதுப் பிள்ளைகளோடு பேசுங்கள். உறவாடுங்கள். சொந்த வீடுபோல் எண்ணும்படி எதுக்களை சவதரியுங்கள்.

கஷ்டப்பட்டோருக்கே கஷ்டத்தினின்று விடுவிக்கும் முறை தெரியும் இரு கதைகள் இதை நன்கு விளக்குகின்றன:—

ஒரு நொண்டி இரு தடி கொண்டு நடந்து செல்கையில் தன் தடியால் வாழைப் பழத் தோலியொன்றை வீதியிலிருந்து தள்ளிவிட்டான். அங்கு மூன்று பூரண சுகதேகிகள் நின்று கொண்டிருந்தனர். எனினும் ஒருவருக்காவது அத்தோலியை அகற்றவேண்டுமெனத் தோன்றவில்லை. அந்த நொண்டியோ முன்னொரு நாள் ஒரு வாழைப்பழத் தோலியை மிதித்து வழுக்கி விழுந்து முடவனானவன். மற்றவர்களுக்கு ஆபத்து வாராவண்ணம் அவன் அவ்வாறு அத்தோலியை அகற்றினன்.

ஒரு நாள் ஓர் ஆஸ்பத்திரிக்குப் போனேன். அங்கு ஒரு பதினாறு வயது வாலிபன் படுக்கையிலிருந்தனன். நான் அவனோடு பேச நெருங்கியபோது அவன் தன் படுக்கையின் துணியை நீக்கி இரு வயதுப் பையனை எனக்குக் காண்பித்தனன், தனக்கு சில நாட்களுக்குமுன் காலில் செய்யப்பட்ட ஓர் இரண சிகிட்சையே அந்தப் பையனுக்கும் செய்யப்பட்டது என்றும் தான் அவனுக்கு அநுதாபங்காட்டி அவன் கஷ்டத்தில் பங்கு பெறும்படி தன் சமீபமாய் வைத்து பெற்ற தாயினும் உற்ற தாய்போல் உதவி செய்கிறதாகவும் அவ்வாலிபன் சொன்னான்

கஷ்டத்திற்குள்ளானோர் அநுதாபங்காட்ட வல்லோர் ஆனதுபற்றி அநுதாபங்காட்டு முன் கஷ்டத்துக்குள்ளாக வேண்டுமென்று காத்திருக்க வேண்டாம். இன்றே அநுதாபங் காட்ட ஆரம்பிக்கலாம். மற்றவர்களைப்பற்றி எண்ணுகிற எண்ணமே அவசியம். ஒரு புன்னகை ஒரு பட்சமான வார்த்தை செலவில்லாத காரியங்கள். எனினும் உலகில் அவற்றிற்காக ஆசை கொள்வோர் அநேகர்.

மௌனமணி நேரம்.

---

# குடும்பப் பயிற்சி

## பெற்றோருக்கு ஒரு கேள்வி

### " உங்கள் பிள்ளைகளோடு நீங்கள் பேசுகிறீர்களா? "

### Marion Brown field.

இது ஒரு கேள்வியா ? என்ன நூதனமான கேள்வி ? "உங்கள் பிள்ளைகளோடு நீங்கள் பேசுகிறீர்களா ? வீட்டில் வந்திருந்த விருந்தாளிகட்கும், உபாத்திமாருக்கும், குருமாருக்கும் எத்தனை பெற்றோர் தங்கள் பிள்ளைகளிடத்தில் சீறி விழுகின்றார்களென்றும், எத்தனை



பேர் பிள்ளைகளுக்குமேல் கூப்பாடுபோடுகின்றார்கள் என்றும், எத்தனைபேர் அவர்கள் பிள்ளைகளை தண்டிப்பதைப்பற்றி தங்கள் முன்னிலையில் பேசுகின்றார்கள் என்றும் நன்றாய்த் தெரியும். அது நல்ல முறையல்ல. பிள்ளைகளிடத்தில் பேசும் சமயமெல்லாம் தண்டனையைப் பற்றியதாயிருக்கும் என்று எண்ண இடமுண்டு. ஒரு நல்ல தாய் தனி சம்பாஷணையின் மூலமாய் ஒழுங்காய் சாப்பிடும் முறையைக் கற்றுக் கொடுத்தால், ராஜாவுக்கு இன்னும் ஒழுங்காய் சாப்பிடத் தெரியாது" என்று மற்றவர்கள் முன்பாக சொல்ல நேரிடாது. பெற்றோர் தங்கள் பயிற்சியில் ஏற்பட்ட குறைவை மறைக்கிதற்கோ அல்லது பிள்ளையை அவமானப்படுத்திச் சீர்ப்படுத்தவோ இம்முறையைக் கையாடுகின்றனர்.

ஒழுங்காய் சாப்பிடும் வழக்கத்தை அன்பான சம்பாஷணையின் மூலமாய் அநேகம் பிள்ளைகள் கற்றுக் கொள்ளக்கூடும். நன்முன் மாதிரியால் நல்லொழுக்கம் கற்றுக் கொடுக்கப்படவேண்டும் கவலையீனமாய் சரியாய் நடந்துகொள்ளத் தெரியாதவர்களைப் பற்றிப் பேசி அநுதாபங் காட்டவேண்டும். சிறு பிள்ளைகளாயிருக்கும்போதே இப்பயிற்சி கிடைத்தால் பிள்ளைகள் சந்தோஷத்தோடே ஏற்றுக்கொள்ளுவார்கள்.

பிள்ளைகளோடே பேசுவதே சிறந்த முறை. தப்பிதமாய்ச் செய்யும்போது எவ்விதம் செய்யப்பட்டால் உசிதமாயிருக்கும் என்று பிள்ளைகளையே கேட்பது நல்லது. பிள்ளைகளை மரியாதையோடு நடத்தப் பிரயாசப்பட்டால் அவர்கள் எவ்வாறு பெருமையுடன் சீர்திருத்திக் கொள்ளுகிறார்கள் என்பது ஆச்சரியமான காரியம்.

பிள்ளைகளோடு பேசுவதற்குக் காலமும் பொறுமையும் வேண்டும். கடைசியில், கிடைக்கும் லாபம் அதிகம். அநேக மோசங்கள் வரா. "சாப்பிடு முன் பல் துலக்கவேண்டும் ராஜா !" என்று பலமுறை ஞாபகப்படுத்துவதற்குப் பதிலாக, சுத்தத்திற்கும், சுகத்துக்கும் சுந்தரத்தோற்றத்திற்கும் சுத்தமான வெண்மை நிறமுடைய பல் எவ்வளவு அவசியமென்பதைக் குறித்து ராஜாவிடம் பேசினால் அது அதிக நன்மை பயக்கும். "ராஜா பல் துலக்கி சாப்பிடப் பண்ணுமுன் என்ன கஷ்டமாயிருக்கின்றது! எனக்கும் வெட்கம் !! உனக்கும் வெட்கம் தாராபாய் !!!" என்று ராஜாவின் உபாத்தினியிடம் முறையிடுவது ஞானமன்று. உன் உபாத்தினியிடம் சொல்லுவேன் என்று பயமுறுத்தி இவ்விதமாகப் பேசுவது ராஜாவின் சுயமரியாதையைக் கெடுப்பதற்குச் சமானம். அன்று முதல் அந்த உபாத்தினியைக் காண வெட்கப்படுவான். பாடம் கேட்கும்போது விடை பகருவது அவனுக்கு கஷ்டம்.

வெட்கப்படுத்தும்படி பிள்ளையைப்பற்றிப் பேசாமல் பிள்ளையோடு பேசப் பிரயாசப்படுவோம். சந்திரா தன் கிழிந்த துணி தைக்கும்படி செய்வது கஷ்டம்: வெகு நேரம் பேசவேண்டியதிருக்கலாம். சந்தோஷத்தோடு பேசி, அவள் அதை தைக்காமல் விட்டது மறதியினாலோ, சோம்பலினாலோ, பிரீதியின்மையினாலோ என்று கண்டறியவேண்டும். மறதியாயிருந்தால் மணி யடிக்கும் கடிகாரத்தை தைக்கும் நேரங் காட்ட அந்நேர மடிக்கும்படி திருப்பி வைக்கவேண்டும், சிநேகிதரோடே பேசிக்கொண்டிருந்தாலும் அது ஞாபகப்படுத்தும். சோம்ப

வினாலிருந்தால் தாயார் தன் மகளோடு வேலை மாற்றிக்கொள்ளலாம். சமையல் வேலைக்கு மகளை அனுப்பி விட்டு தாயார் தையல் வேலை செய்யலாம். ஆனால் இந்தக் காரியங்களை இரகசியமாகவே வைத்துக்கொள்ளவேண்டும். இது குடும்ப காரியம். சந்திராவுக்கு இஷ்டமானால் வெளியே சொல்லலாம்.

பிள்ளைகளோடு பேசுவது குறை கூறுவதாய் மாத்திரம் இருக்கக்கூடாது. சீர்ப்படுத்தும் காரியமாய் மாத்திரம் இருக்கலாகாது. புகழ்ந்து பேசுவதும் நல்லதே! புன்னகையோடு நன்னடக்கையைப்பற்றிப் பேசுவதே சிறந்த முறை. தனியாயிருக்கும்போது தாயார் பிள்ளையைப் பார்த்து, "விருந்தினரை நீ மரியாதையோடு வரவேற்பதைக் கண்டு பெருமை கொண்டேன்" எனக் கூறின், பிள்ளை எப்போதும் மரியாதைகாட்ட உற்சாகமடைகின்றது. பிள்ளை யடையும் சித்தியைக் குறித்தும் தனியாயிருக்கும்போது வியந்து கூறவேண்டும். பிறர் முன் பேசலாகாது.

பிள்ளைகளோடு பேசுவது என்றால் சிநேக பாந்தவமாயிருப்பது. அவர்களுக்கும் பெரியோருக்குமிடையில் பெரும் பிளவு ஏற்படாதபடி தடுக்கின்றது. சமநிலையும் சுயமதிப்புமுண்டாகும். பேசி தர்க்கிப்பது பிள்ளையின் அபிப்பிராயத்தை வெளியிட இடந்தருகின்றது. இதில். பிள்ளைக்கு நியாய தோரணையாய் யோசிக்கவும் சரியானவற்றை அதிகமாய் மதிக்கவும் பயிற்சி கிடைக்கின்றது. இப்பயிற்சி ஜீவியகாலமெல்லாம் நிதானமாயும் யோசனையாயும் நடந்துகொள்ள ஏதுவுண்டாக்குகின்றது.

---



# கடிதம்

விலங்கூர்,

5—10—1937.

பிரிய பிள்ளைகாள்!

உங்களுக்கு இக்கடிதம் யான் எழுதப்பெற்ற சிலாக்கியம் மிகப்பெரியது. பெரிய எஜமானிடம் பெரிய உத்தியோகத்தில் அமர்ந்திருக்கின்றேன். அரிய பெரிய காரியங்களை செய்து வருகின்றேன். நீங்கள் செய்யும் வேலையைப்பற்றி அரிய ஆசை, எனக்கு எழுத மாட்டீர்களா?

என் எஜமானனுக்குக் கழுத்தில்லை, யானை கழுத்து. அவருக்கு மூக்கில்லை. யானை மூக்கு. அவருக்குக் கையில்லை. யானை கை. எனக்கு ஒரு விரலுண்டு. அது மிகவும் சிறியது. உங்களைவிட உயரமாய் வளர்ந்திருக்கின்றேன். என் எஜமானுக்குத் தேவையான ஆகாரப் பொருள் எவ்வளவு உயரத்திலிருந்தாலும் நான் அதை ஒடித்துக் கொடுப்பேன். மரக் கிளைகளை யான் வளைத்து ஒடிக்கும்போது நீங்கள் பார்த்தால் ஆச்சரியப்படுவீர்கள். வேண்டுமானால் வேரோடேகூட மரங்களைப் பிடுங்கி எறிந்து விடும் சக்தி எனக்கு உண்டு. பண்டிகைகளில் பக்தியாய் தெய்வத்திற்கு முன் நிற்பேன். எனக்கு வெட்கமே யில்லை. ஏனெனில் எம் மதத்தினரும் என்னைப்போல் பக்தியின் வேஷ மணிந்து தெய்வத்திற்கு முன் நடப்பதைக் கண்டிருக்கின்றேன். உத்தியோகம் பெரிய உத்தியோகம். புத்தியோ கெட்ட புத்தி.

"கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல், பதிலுக்குப் பதில்" என்பதே என் பிரமாணம். எவரையும் எளிதில் எடுத்து எறியக்கூடிய சக்தி எனக்குண்டு. ஏனென்றால் எனக்குள் 39000 தசை நார்களுள. சக்தியில் பெரியோன் யானை!

ஒரு நாள் ஒரு தையற்காரன் கடைக்குப் போய் ஜன்னல் வழியாய் நுழைந்து பசியாற்ற ஏதாகிலும் பெற்றுக்கொள்ளலாம் என்று காத்து நின்றேன். அவனோ ஓர் ஊசியினால் குத்தினான். இரத்தம் வடிந்தது. வேதனை எடுத்தது. கோபம் வந்தது. எனக்கு இரு குழாய்களுள. அவைகளில் கலங்கின அசுத்தத் தண்ணீரை நிரப்பிக் கொண்டு வந்து தையற்காரன் தலை வழியாய் வழிந்தோடும்படி ஊற்றிவிட்டேன். என் மனம் ஆறிற்று. அவன் அழுதான். அதோ என் மனமும் மாறிற்று. என் சக்தியை நற்காரியங்களுக்கென்று உபயோகிப்பேன் என்று தீர்மானித்தேன். தையற்காரனை அசுத்தமாக்க உபயோகித்த சக்தியை என் எஜமானை சுத்தப்படும்படி உபயோகிக்கின்றேன். சுத்தமான தண்ணீரை வாரி என் எஜமான்மேல் ஊற்றிக் கழுவுவேன். அந்த இரு குழாய்களில் தண்ணீர் எடுத்து என் எஜமான் தாகத்தைத் தீர்ப்பேன். நன்மை செய்ய நாடுகின்றேன். எனினும் என்னை ஏமாற்றுகின்றவர்கள் ஏராளமாய் இருக்கின்றனர்.

ஒரு நாள் ஒரு வீட்டிற்குப் போனேன். எனக்குப் பணம் கொடுக்க இஷ்டமில்லை எனினும் வேடிக்கை பார்க்க மனமுடையவர்களாய் அங்குள்ளவர்கள் சிறு நாணயம் ஒன்றைத் தேடி எடுத்துத் தரையிலே போட்டு அதை என் விரலால் எடுத்துக்கொண்டால் அது என்னுடையது என்று இயம்பினர். பெரிய காரியங்களை செய்யவல்ல எனக்கு இச்சிறு காரியத்தைச் செய்ய இயலாது என்று எண்ணினர். என் விரல் அதை எடுத்துத் தந்தது. என்னை ஏமாற்ற எண்ணினவர்கள் ஏமாந்து போயினரேயொழிய யான் ஏமாந்து போகவில்லை. என்கூட ஒரு நாளைக்கு வாருங்கள். என்னை ஏமாற்றுகின்றவர்களின் தொகையையும் அவர்கள் கதியையும் பாருங்கள்.

என்கூட சிநேகமாயிருக்க மாட்டீர்களா? எனக்கு ஒரு வரியாயினும் எழுதமாட்டீர்களா? உங்களைக் காணவும் உங்கள் கடிதம் வாசிக்கவும் எவ்வளவாய் வாஞ்சிக்கின்றேன். என்னை உங்களுக்கு நன்றாய்த் தெரியுமென்று எண்ணுகின்றேன்.

உங்களுக்கு என் அன்பு.

இப்படிக்கு,
அன்பை ஆசிக்கும்,
அதிசய காம்.

207386



காஷ்மீரத்துக் கலப்பை.

Printed by S. T. Rhenius at the N. M. S. Press, 48 B, Peters Road, Royapettah
and Published by Rev. T. A. Fenn, College Church,
12, Venkata Maistry Street, George Town, Madras.